# நா. பார்த்தசாரதி

திருப்பூர் கிருஷ்ணன்



T
891.481 43
P 257 K

இந்திய

T
891.481 43
P 257 K

நா. பார்த்தசாரதி

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம், புது தில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# நா. பார்த்தசாரதி

திருப்பூர் கிருஷ்ணன்

சாகித்திய அக்காதெமி

*Naa Parthasarathi*: Monograph in Tamil by Thiruppur Krishnan, Sahitya Akademi, New Delhi, (2001), Rs. 25

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு: 2001
ISBN 81-260-1435-0

T
891.48143
P 257 K

**சாகித்திய அக்காதெமி**

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டிடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை 600 113.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

Library IIAS, Shimla
T 891.481 43 P 257 K
00117340

117340
13/12/04
SHIMLA

ஒளிக் கோப்பு: பிரஸிஸ்த கிராபிக்ஸ் சென்னை 602 102.
*அச்சகம்: நாகார்ஜுனா பிரிண்டர்ஸ், சென்னை-21.*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 7 |
| 2. | வாழ்க்கைச் சித்திரம் | 9 |
| 3. | நா.பா. படைப்புகளில் நடை | 13 |
| 4. | நா.பா.வின் லட்சியவாதம் | 20 |
| 5. | சுயமுன்னேற்றச் சிந்தனைகள் | 22 |
| 6. | இதழாசிரியர் | 25 |
| 7. | கேள்வி பதில் | 35 |
| 8. | நாவல்கள் | 40 |
| 9. | கவிதைகள் | 48 |
| 10. | சிறுகதைகள், நாடகங்கள் | 56 |
| 11. | பயண இலக்கியம் | 59 |
| 12. | கட்டுரைகள் | 62 |
| 13. | நா.பா.என்னும் பேச்சாளர் | 66 |
| 14. | சிந்திக்கச் சில வரிகள் (நா.பா. படைப்புகளிலிருந்து) | 70 |
| 15. | வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் | 76 |
| 16. | நா.பா. நூல்களின் பட்டியல் | 79 |

# முன்னுரை

**சா**கித்ய அகாதெமி நிறுவனம், இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் பிரபல எழுத்தாளர் தீபம் நா. பார்த்தசாரதி பற்றிய இந்த நூலை வெளியிடுகிறது. நூலின் நோக்கம் நா. பார்த்தசாரதியின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு, மற்றும் அவரது இலக்கியம் குறித்த அறிமுகம் ஆகியன மட்டும்.

சிறுகதை, சமூக நாவல், சரித்திர நாவல், கவிதை, நாடகம், கட்டுரை, கேள்வி-பதில், பயண இலக்கியம் என்று பல்வேறு துறைகளில் எழுத்தைப் படைத்தவர் அவர். ஓர் இலக்கியவாதியாக மட்டுமல்லாமல், 'தீபம்' என்ற இதழை ஆசிரியராக இருந்து நடத்தி பல்வேறு எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் இலக்கிய சக்தியாகவும் இயங்கியவர். தமது இனிய தமிழ் நடையால் ஏராளமான வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். மரபுத் தமிழ், நவீனத் தமிழ் இரண்டிலும் பயிற்சியும், பாண்டித்தியமும் உடையவர். மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர்.

இத்தகைய மாபெரும் சாதனையாளரைப் பற்றி மிக விரிவாக ஆய்வு நோக்கில் புத்தகங்கள் எழுதப்பட வேண்டும். இந்த நூலின் நோக்கம் ஆய்வு அல்ல. அறிமுகம் தான். நா.பா.வின் புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை இன்றைய வாசகர்கள் மனத்தில் ஏற்படுத்த வேண்டுமென்பதே இந்நூலாசிரியனின் ஆசை. சமூக மேம்பாட்டை மட்டுமல்லாமல், சுயமுன்னேற்றச் சிந்தனைகள் மூலம் தனி மனித மேம்பாட்டையும் வலியுறுத்தி அவர் எழுதிய எழுத்துகள், அவர் காலத்தில் தேவைப்பட்டதை விடவும் அதிகமாக இன்று இளைஞர்களுக்குத் தேவைப்படுகின்றன.

இந்த நூலை எழுதுகிற வாய்ப்பை சாகித்ய அகாதெமி எனக்குத் தந்தது குறித்து நன்றி சொல்ல உண்மையிலேயே வார்த்தை இல்லை. நா.பா. வையே ஞான குருவாக ஏற்று, குருகுலவாசம் போல் அவருடனேயே கடைசிப் பன்னிரண்டு ஆண்டுகள் வாழவும் பாக்கியம் பெற்றவன் நான். இப்படியொரு நூலெழுதும் பேறு இப்போது கிட்டியிருப்பதை என்னென்பது!

அந்த தீபத்திற்கு அஞ்சலியாக நான் ஏற்றி வைத்துள்ள ஒரு சின்ன அகல்விளக்கே இந்நூல்.

நா.பா.வின் மனைவியும் எனது தாயாருக்கு இணையான வருமான திருமதி சுந்தரவல்லி பார்த்தசாரதி, தீபம் துணை ஆசிரியர் எஸ்.திருமலை, ஆண்டுதோறும் நா.பா. நினைவுக்கூட்டம் நடத்தும் ஞானியாரடிகள் மன்றம் அ.நா. பாலகிருஷ்ணன், நா.பா.வின் புத்தகங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் தமிழ்ப் புத்தகாலயம் அகிலன் கண்ணன் என இந்த நூலாக்கத்திற்கு உதவி புரிந்தவர்கள் பலர். அவர்கள் அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றி.

**சென்னை** **திருப்பூர் கிருஷ்ணன்**
07-07-2001

# 1
# வாழ்க்கைச் சித்திரம்

**ப**ற்பல விருதுகளும் பரிசுகளும் பெற்றவராகவும், சமுதாயத்தைத் தம் எழுத்தால் பெரிதும் பாதித்தவராகவும் உயர்ந்தோங்கிய நா.பார்த்த சாரதி ஒரு சராசரி நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர்தான். அவர் செய்த இலக்கியச் சாதனைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது அவரது கடின உழைப்பு மட்டுமே. விடாமுயற்சி, சோர்வில்லாமல் ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேல் உழைக்கக் கூடிய மனஉறுதி ஆகியன அவரை மாபெரும் மனிதராக உயர்த்தின.

1932 ஆம் ஆண்டு, டிசம்பர் 18ஆம் தேதி பிறந்தவர். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நதிக்குடி என்ற சிற்றூர்தான் அவரது சொந்த ஊர். பள்ளிப் பருவத்திலிருந்தே தமிழில் அவருக் கிருந்த ஆர்வம் ஆசிரியர்களை வியக்க வைத்ததுண்டு. முறையாகத் தமிழ் படித்துத் தமிழில் பட்டம் பெற்றுப் படைப்பாளிகளாக ஆனவர்கள் டாக்டர் மு.வரதராசன், டாக்டர் இந்திரா பார்த்தசாரதி போல மிகச் சிலர்தான். அந்த மிகச் சிலரின் வரிசையில் நா.பா.வுக்கும் ஓர் இடம் உண்டு.

பழைய இலக்கணம், இலக்கியம் அனைத்தையும் கற்றுத் தேறியவர். தொல்காப்பிய, நன்னூல் சூத்திரங்களையெல்லாம் சத்தம் போட்டுச் சொல்லி அந்தக் கால முறைப்படி மனப்பாடம் செய்தவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து கல்வி பயின்று பண்டிதர் பட்டம் பெற்றார். அது சாதாரணமாகப் பெற்ற பட்டமல்ல. பாண்டித்துரைத் தேவர் பரிசுடன் கிடைத்த பட்டம். சென்னைப் பல்கலைகழகத்தில் 'வித்வான்' பட்டமும் பெற்றார். நெல்லை கம்பன் கழகத்தார் **கம்ப ராமாயணத் தத்துவக் கடல்** என்ற பட்டத்தை இவருக்கு அளித்து கௌரவித்தனர்.

கல்விக்கு வயதில்லை என்றும் எந்த வயதிலும் எதையும் கற்கலாம் என்றும் கொள்கையுடையவர். நாற்பத்தைந்து வயதுக்கு மேல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் எம்.ஏ. சேர்ந்து

தேறினார். மாலைக் கல்லூரி மாணவராக நாள்தோறும் அவர் கல்லூரி சென்று வந்தது பலரை ஆச்சரியப்பட வைத்தது. எம்.ஏ. தேறிய பிறகு டாக்டர் பட்டத்திற்குப் பதிவு செய்து கொண்டார். 30-07-1987 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி. ஆய்வேட்டைச் சமர்ப்பித்தார்.

அந்த ஆய்வேடு பல்கலைக்கழகத்தினரால் மதிப்பீடு செய்யப் பட்டு முடிக்கப்பட்டிருந்தது. வாய்மொழித் தேர்வுக்குப் பிறகு அவருக்குப் பட்டமளிக்க வேண்டும் என்பது பல்கலைக்கழக விதி. ஆனால் நா. பா.வின் விதி வேறாக இருந்தது. தமக்கு வாய் மொழித் தேர்வு நடக்க இரண்டே நாட்கள் இருந்த நிலையில், இதய நோய்க்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவர் காலமானார்.

அந்த ஆய்வேடு சுருக்கப்பட்டு **பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்** என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

தமிழ் தவிர, ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழி களையும் அறிந்தவர். அவரது படைப்புகள் ஆங்கிலம், ஹிந்தி, உருது, மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

எழுத்தே முழுநேர வாழ்வாக இருந்த காரணத்தால் அவர் தம் இயற்பெயரில் மட்டுமல்லாமல் பல்வேறு புனைபெயர்களிலும் எழுதிக் குவிக்க வேண்டியிருந்தது. தீரன், அரவிந்தன், மணிவண்ணன், பொன்முடி, வளவன், கூடலழகன், இளம்பூரணன், செங்குளம் வீரசிங்கக் கவிராயர் என்றெல்லாம் பலப்பல பெயர்களில் எழுதி வந்தார்.

தொடக்கத்தில் கொஞ்ச காலம் பள்ளி ஆசிரியராக இருந்தவர். 1959 முதல் மகாகவி பாரதி பணிபுரிந்த சிறப்புடைய மதுரை சேதுபதி மேநிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பிறகு, கல்கி அதிபர் சதாசிவத்தின் அழைப்பின் பேரில் கல்கியின் துணை ஆசிரியராகச் சேர்ந்தார். கல்கியில் பணிபுரிந்தபோதும், பணியி லிருந்து விலகியிருந்தபோதும் என அவரது புகழ் பெற்ற **குறிஞ்சிமலர், பொன்விலங்கு, சத்தியவெள்ளம், துளசிமாடம்** போன்ற நாவல்களெல்லாம் கல்கியில் தான் வெளிவந்தன. கல்கிக்குப் பின்னர் தீபம், தினமணி கதிர் எனப் பத்திரிகைத் துறையிலேயே பணிபுரிந்தார்.

1965ல் தீபம் இலக்கிய இதழைத் தொடங்கிய அவர், தம் இறுதி மூச்சு வரை தீபத்தை நடத்தினார். ஆசிரியராகவும் நிர்வாகியாகவும் இருந்து சுமார் 23 ஆண்டுகள் அவர் நடத்திய அந்த இதழ், தற்காலத்

தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அளவில் தடம் பதித்தது. நா.பா.வின் இலக்கியப் பணிகளிலேயே மிக உயர்வான பணியாக தீபம் ஆசிரியப் பணி நல்லிலக்கிய அன்பர்களால் நினைவு கூரப் படுகிறது. நா.பா. பொன்முடி என்ற பெயரில் எழுதிய பல குறு நாவல்கள், தவிர **நெற்றிக்கண், செய்திகள், ஆத்மாவின் ராகங்கள், பொய்ம்முகங்கள்** போன்ற நாவல்கள், அவரது பல கவிதைகள் எல்லாம் தீபத்தில்தான் வெளிவந்தன. புகழ் பெற்ற தலையங்கங்களும் இலக்கிய மேடை என்ற கேள்வி பதில் பகுதியும் தீபத்துக்குப் பெருமை சேர்த்தன.

04-10-1979ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிர்வாகத்திலிருந்து வெளிவந்த தினமணி கதிர் வார இதழுக்கு ஆசிரியப் பொறுப் பேற்றார். அப்போது **சாயங்கால மேகங்கள், நிசப்த சங்கீதம்** ஆகிய சமூக நாவல்களையும் **ராணி மங்கம்மாள்** என்ற சரித்திர நாவலையும் கதிரில் எழுதினார். தவிர **மணிவண்ணன் பதில்கள்** என்ற தலைப்பில் இலக்கிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல கேள்விகளுக்கு பதிலளித்து வந்தார்.

கதிரிலிருந்து விலகியபின் **சுந்தரக் கனவுகள்** என்ற தலைப்பில் பத்திரிகையுலகத்தைப் பின்புலமாக வைத்து ஒரு நாவல் எழுதினார்.

தமது இலக்கிய வாழ்வில் பல்வேறு பொறுப்புகளை நிர்வகித்த பெருமைக்குரியவர். அகில இந்திய சாகித்ய அகாதெமி தமிழ் ஆலோசனைக் குழுவின் தலைவராக இருந்தது அவர் வகித்த பொறுப்புகளில் முக்கியமான ஒன்று. அவர் உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் தமிழ்மொழியின் மேலான இலக்கியவாதிகள் பலர் சாகித்ய அகாதெமி பரிசுபெற்றனர். வல்லிக்கண்ணன், பி.எஸ்.ராமையா, தி.ஜானகிராமன், க.நா.சுப்ரமண்யம் உள்படத் தகுதியுள்ள பலர் அகாதெமி விருது பெற்றது அந்தக் காலத்தில்தான்.

'நேஷனல் ஃபிலிம் ஃபெஸ்டிவல் ஜூரி, ஃபிலிம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் உறுப்பினர், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகித்தவர்' எனப் பல பெருமைகள் நா.பா.வுக்கு உண்டு. ரஷ்யா, போலந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ரோம், எகிப்து, குவைத் போன்ற பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். பயணக் கட்டுரைகள் எழுதினார். அவரது பயணக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு இரண்டு புத்தகங்களாக வந்துள்ளன.

சாகித்ய அகாதெமி பரிசு, ராஜா சர் அண்ணாமலை விருது, தமிழ்நாடு அரசு பரிசு எனப் பல பரிசுகள் பெற்றவர்.

அரசியல் சார்புடையவர். காங்கிரஸ், சுதந்திரா, ஆர்.எஸ்.எஸ்., ஜனதா, இ.காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் உறவு பூண்டிருந்தார். காமராஜுக்கு மிக நெருக்கமாக இருந்தார். தாம் எழுதிய **சத்திய வெள்ளம்** நாவலில் காமராஜையே 'ராமராஜ்' என ஒரு பாத்திரமாகப் படைத்தார். காமராஜரின் மறைவுக்குப் பின் அரசியலில் எந்தக் கட்சியையும் சாராதவராக இருந்தார்.

இலக்கியத்தில் சமூக நாவல், சரித்திர நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை, திறனாய்வு என எல்லாத் துறைகளிலுமாக சுமார் 90 நூல்களுக்கு மேல் எழுதியவர். ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் படைத்தவர்.

எழுத்தாளராக இருந்ததோடு மட்டுமல்லாமல் தாமே ஓர் இலக்கிய சக்தியாகவும் இருந்த நா.பா., எழுத்துலக நண்பர்களைத் தம் உயிரினும் மேலாக மதித்து நட்பைப் போற்றிய நா.பா., 13-12-1987 அன்று, தம் 54ஆம் வயதில், இதயநோயால் தாக்குண்டு உயிர்நீத்தார். தற்கால இலக்கியத் துறையில் மாபெரும் சாதனையாளரான அவர் பெயர் ஓர் அபூர்வமான குறிஞ்சி மலராக நின்று நிலைத்திருக்கிறது.

# 2
# நா.பா. படைப்புகளில் நடை

**நா.**பா.வின் சொல்லாட்சியில் அடிக்கடி இடம் பெறும் இரண்டு வார்த்தைகள்: இங்கிதம், நளினம். 'அவள் இங்கிதமாகப் பேசினாள். நளினமாகச் சொன்னாள். இங்கிதமும், நளினமும் கலந்து கூறினாள்' என்பன போன்ற வரிகளை அவர் இலக்கியங்களில் நெடுகக் காணலாம். 'வேரும் விழுதும்' என்ற நிகழ்ச்சியில் வானொலியில் நா.பா.வின் பேட்டி இடம் பெற்றபோது, அவரிடம் இதுபற்றி இங்கிதமாகவும் நளினமாகவும் மனம் உறுத்தாமல் கேள்வி கேட்கப்பட்டது. சிரித்தவாறே நா.பா. அந்தக் கேள்விகளுக்குப் பின்வருமாறு பதில் கூறினார். "ஜெகசிற்பியனின் நடையில்கூட 'ஒல்கி ஒசிந்து ஒயிலாக' என்ற சொற்கள் அதிகம் இடம்பெறும். இப்படிச் சில வார்த்தைகள் அதிகம் இடம் பெறுவது, படைப்பின் அல்லது படைப்பாளியின் குறை என்று கருதலாகாது. இந்தச் சொற்களை அந்தக் குறிப்பிட்ட படைப்பாளியின் முத்திரை என்பதாக வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்."

நா.பா.வின் இலக்கிய நடை பற்றிச் சொல்லும்போது, அவர் அதிகம் உபயோகிக்கும் இந்த இரு வார்த்தைகளை வைத்தே விளக்குவது பொருந்தக் கூடும். நா.பா.வின் நடை, முகத்தில் அறைவது போல் சொல்லும் ஜெயகாந்தனுடைய நடையைப் போன்றதல்ல. அதற்கு முற்றிலும் வேறானது அது. காலில் கொலுசு அணிந்த பெண் நடந்து செல்வதைப் போன்ற 'நளினமான' நடை. குலுங்கக் குலுங்கச் சொல்லின் இனிய சப்தம் நம் காதில் கேட்டுக் கொண்டே இருக்கும். மென்மையான உணர்வுகளைச் சுகமாகச் சொல்லிவிடும் 'இங்கிதமான' நடை அது. வாசகர்களை மயக்குகிற ஒரு தனி வசீகரம் அந்த நடையில் உண்டு.

நா.பா.வும் குமரி அனந்தனும் சந்தித்துக் கொண்ட 'குமுதம்' உரையாடலில் நா.பா.வின் நடையை 'அருவி' என்று குமரி அனந்தனும், ஜெயகாந்தனின் நடையைக் 'காட்டாறு' என்று நா.பாவும் வர்ணித்தார்கள். இப்படி வர்ணிப்பது ஒருவகையில் சரியான ஒப்பீடுதான். ஆனால் இன்னொரு வகையில் அது சரியுமல்ல.

ஜெயகாந்தனின் நடை என்னவோ காட்டாறுதான். ஆனால் நா.பா.வின் நடை, ஆவேசத்துடன் பொங்கி வரும் அருவி கூட அல்ல. அது சலசலத்துப் பாயும் மென்மையான சிற்றோடை. மேலிருந்து பார்த்தால், தெளிந்த சிற்றோடையின் கீழே இருக்கும் கூழாங் கற்கள் எல்லாம் கண்ணுக்குத் தெரிவது மாதிரி, நா.பா. இலக்கியத்தின் ஆழ்ந்த பொருளும் நயமுமெல்லாம் பெரிதும் வெளிப்படையாகவே தெரிகிற வகையில் அமைந்தவை. பூடகம், பல விஷயங்களைச் சொல்லாமல் சொல்வது போன்ற பாணியை விட, எதையும் வெளிப்படையாகச் சொல்லிச் செல்வதே சிறந்தது என அவர் கருதினார் போலும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அசோகமித்திரன் பாணி எழுத்தாளர் களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நடையையுடையவர் நா.பா. என்று சொல்லலாம்.

தமிழின் இலக்கிய ரீதியான முதல்தரமான முன்னணி எழுத்தாளர்கள் வரிசையில் நா.பா.வுக்கு ஒரு தனி இடம் உண்டு. ஆழ்ந்த எழுத்துக்களை எழுதும் எழுத்தாளர்களுக்கு வாசகர்கள் அதிக எண்ணிக்கையில் கிடைப்பதில்லை. இதுவே தமிழின் நிதரிசன நிலை. ஆனால் இந்த நிதரிசன நிலைக்குத் தமிழில் மிகச் சில விதி விலக்குகளும் உண்டு. அதிலும் நா.பா. ஒரு தனிப்பட்ட விதிவிலக்கு என்றே சொல்ல வேண்டும். நா.பா.வின் எழுத்துக்கு மிக அதிக எண்ணிக்கையில் வாசகர்கள் இருந்தார்கள்; இருக்கிறார்கள். அவர் எழுதப் புறப்பட்ட காலத்தில் ஒரு புயல் மாதிரிப் புறப்பட்டார். சமுதாயத்தில் அவரது எழுத்தின் தாக்கம் கண்ணுக்குத் தெரிகிற மாதிரி மிக அதிகமான அளவில் இருந்தது. இதற்கு அத்தாட்சியாக அரவிந்தன், பூரணி ஆகிய பெயர்கள் பற்பல குழந்தைகளுக்கு சூட்டப்பட்டதைக் கூறலாம். இன்றும் தங்கள் குழந்தைகளுக்கு குறிஞ்சி மலரின் இனிய நினைவுகளோடு இந்தப் பெயர்களைச் சூட்டுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்தப் பெயர்களை மட்டுமல்ல, சுரமஞ்சரி, குறிஞ்சிவாணன் என்றெல்லாம் நா.பா. இலக்கியம் தொடர்பான வேறு பெயர்களை வைப்பவர்களும் இருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் நா.பா. இலக்கியம் சமுதாயத்தைப் பாதித்ததற்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லலாம் என்றாலும், ஒரு முக்கிய காரணமாக நா.பா.வின் நடையைச் சொல்லவேண்டும். அதாவது அந்த நடையில் தென்பட்ட வெளிப்படையான போக்கை. அதன் இலக்கிய ஆழம் பெருவாரியான மக்களை எட்டுகிற வகையில் அமைந்திருந்த அதன் எளிமையை - மிக ஆழ்ந்த நுணுக்கமான விஷயங்களை எல்லோருக்கும் சுலபமாகப் புரியும் வகையில் சொல்லிவிடுகிற ஒரு மனோகரமான நடையை அவர்

கொண்டிருந்தார். ஒரு வகையில் சொல்லப் போனால் அது இலக்கிய நடைதான்; ஆனால் பண்டித நடை அல்ல. இலக்கணப் பிசகு ஒரு சிறிதும் இல்லாத நடைதான்; ஆனால் பாமரர்களையும் எட்டிவிடும் ஓர் எளிமை அதில் இருந்தது. நா.பா. இலக்கியத்தின் விசேஷச் சிறப்பம்சம் என்று, பெருவாரியான மக்களை அவர் எட்டுவதற்கு உதவிபுரிந்த அவரது நடையைத்தான் குறிப்பிட்டுக் கொண்டாட வேண்டும். இந்த இடத்தில் தீபம் இலக்கிய மேடை பகுதியில் நடை தொடர்பாக அவர் தெரிவித்துள்ள கருத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது.

''தமிழ் உரைநடையில் நீங்கள் விரும்புவது இலக்கிய நடையா, எளிய நடையா?'' என்பது கேட்கப்பட்ட கேள்வி. அதற்கு நா.பா. பதில் சொல்கிறார்.

''இலக்கிய நடை என்றால் அது நிச்சயமாகக் கடுமையான நடையாகத்தான் இருக்க வேண்டும் என்றும் எளிய நடை என்றால் அது நிச்சயமாக இலக்கிய நயமற்றதாகத்தான் இருக்கவேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டே நீங்கள் இக்கேள்வியைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. எளிய நடையே இலக்கிய நயமுள்ளதாகவும் இருக்க முடியும்''. எனவே தற்செயலாக அல்ல, பிரக்ஞைபூர்வமாக உணர்ந்தே நா.பா. தன் நடையை எளிமைப் படுத்திக் கொண்டார் என்று கருதுவது தவறாகாது.

ஒரே சொல்லை மடக்கி மடக்கிப் போட்டு, வெவ்வேறு அர்த்தங்கள் வரும் வகையில் அந்தச் சொல்லைப் பயன்படுத்தி, அதன் மூலம் ஒரு தனிப்பட்ட எழிலைத் துலங்கச் செய்யும் உத்தியைத் தம் நடையில் நா.பா. அடிக்கடிக் கையாண்டார். உதாரணமாக, ''அவள் பார்வையே ஒரு பேச்சாக இருந்ததென்றால் அவள் பேச்சில் ஒரு பார்வையும் இருந்தது'' என்பது போல் வரும் வரிகளைச் சொல்லலாம். தண்டியலங்காரம் சொல்லும் சிலேடை, சொற்பொருட் பின்வருநிலையணி போன்ற அணிகளுடன் தொடர்புபடுத்தி நா.பா.வின் இந்த நடைப்பாணியைக் காணமுடியும். நா.பா.வின் பழந்தமிழ்ப் பயிற்சி-முக்கியமாக இடைக்காலத் தமிழ் இலக்கியம் குறித்த பயிற்சி-அவருடைய இந்தப் பாணிக்கு உதவியிருக்கிறது. ஒரு பொதுவான இலக்கிய வாசகரை ஈர்க்கும் இந்த நடை, பழந்தமிழ்ப் பயிற்சியுள்ள வாசகரையோ சொக்கிக் கிறங்க வைத்துப் பரவசப்படுத்திவிடுகிறது. இதனாலேயே நா.பா.வின் இலக்கியத்தை அதன் பரிபூரண எழில் முழுவதுமாக பரிமளிக்கிற வகையில், இன்னொரு மொழியில் மொழி பெயர்ப்பது சிரமமாகிவிடுகிறது. நா.பா.வின் இலக்கியம் ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி போன்ற பற்பல

மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலே சொன்ன நா.பா.வின் வாக்கியத்தை மொழிபெயர்க்க வேண்டுமானால் தமிழில் உள்ளதைப் போலவே மற்ற மொழிகளிலும் **பார்வை** என்ற ஒரே சொல் இரண்டு பொருள்களைத் தருவதாக அமைய வேண்டும். அதற்குச் சாத்தியமில்லாதபோது மொழிபெயர்ப்பின் நயம் குறையத்தான் செய்யும்.

நிறைய எழுத வேண்டிய தேவை பி.எஸ். ராமையாவுக்கு இருந்ததைப் போலவே நா.பா.வுக்கும் இருந்தது. மணிமணியான சிறுகதைகளை எழுதிய ராமையா சராசரியாகவும், அவரது மிக உயர்ந்த இலக்கியத்தரத்திற்குப் பொருத்தமில்லாமலும் பற்பல படைப்புகளைப் படைத்ததுண்டு. ஆனந்த விகடனில் ராமையா எழுதிய குங்குமப் பொட்டுக் குமாரசாமிக் கதைகள், மிகச்சிறந்த ராமையா பாணி இலக்கியப் படைப்புகள் அல்ல. பி.எஸ்.ராமையா என்று நினைக்கும்போது அவரது இதுபோன்ற கதைகளை விலக்கிவிட்டு பெரும்பாலான உன்னதக் கதைகளைத்தான் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். நா.பா.வுக்கும் பி.எஸ். ராமையாவுக்கு நேர்ந்த மாதிரியான பொருளாதார நிர்பந்தம் நேர்ந்ததுண்டு. வணிக ரீதியாக பின்னாட்களில் அவர் கொச்சையான படைப்புகளை எழுத உடன்பட்டதில்லைதான். ஆனால், அதிக கட்டுக் கோப்பில்லாத, நா.பா.வின் மேலான இலக்கியத் தரத்திற்கு இணையில்லாத சில சராசரி நாவல்களை அவர் எழுதியதுண்டு. அவற்றிலும் கூட அவரது நடையின் சிறப்பால் ஓர் இலக்கிய வசீகரத்தை நாம் உணர முடியும். நா.பா.வின் இலக்கிய ஆளுமை அவரது பெரும்பாலான உயர்ந்த படைப்புகளை வைத்து கணிக்கப் பட வேண்டுமே தவிர, ஒரு சில சராசரிப் படைப்புகளை வைத்தல்ல.

ஆரம்ப காலத்தில் பாத்திரங்களுக்கு இடையேயான உரை யாடலில் கூட, அவர் இலக்கணம் மீறாத வாக்கிய அமைப்பு களைத்தான் கையாண்டு கொண்டிருந்தார். போகப்போக அவரது நடை சற்றே நெகிழ்ச்சி அடைந்தது. **குறிஞ்சி மலர், பொன்விலங்கு** போன்ற நாவல்களில் பாத்திரங்கள் உரையாடியதற்கும் **சத்திய வெள்ளம்** போன்ற பின்னாளில் அவர் எழுதிய நாவல்களில் பாத்திரங்கள் உரையாடியதற்கும் நிரம்ப வேறுபாடு இருந்தது. பின்னாட்களில் பேச்சு வழக்கை அவர் கையாளத் தொடங்கி விட்டார். ஆனாலும் அந்தப் பேச்சு வழக்கு ஒரு பொதுவான கொச்சைத் தமிழே தவிர தனி இனத்தையோ, தனி மாவட்டத்தையோ அதிகம் சார்ந்ததெனச் சொல்ல இயலாது.

பிராமணக் களனை மையமாகக் கொண்டு **துளசி மாடம்**

நாவலை அவர் படைத்தபோது, தமது நடையில் பிராமண வழக்கைக் கையாள வேண்டிய நிர்பந்தம் அவருக்கு நேர்ந்தது. பல இடங்களில் ஒரு பொதுத் தமிழையும் சில இடங்களில் பிராமண வழக்கையும் கையாண்டு அவர் சமாளித்தார். ஜானகிராமன் நன்றாகவும், ஜெயகாந்தன் சிறப்பாகவும் கையாண்ட பிராமண வழக்கை, நா.பா.வால் அவ்வளவு இயல்பாகக் கையாள இயலாமல் போயிற்று. ஏதோ ஒரு சோதனைக்காக அவர் அதில் பிரவேசித்தாரே தவிர பிராமண வழக்கில் அவர் ஒரு தன்னியல்பை உணரவில்லை. கி.ராஜ நாராயணனைப் போல் வட்டார வழக்கிலும் அவர் பெரும் சாதனை எதுவும் புரியவில்லை. ஆனால் இலக்கண அமைதிக்கு முற்றிலும் உட்பட்ட ஒரு பொதுவான தமிழ்நயம் செறிந்த நடையில் அவர் மிகப் பெரும் சிகரங்களைத் தொட்டார். அவரது நடையின் அதிகபட்ச அழகை, சமூக நாவல்களைப் பொறுத்தவரை **பொன்விலங்கிலும்**, சரித்திர நாவல்களைப் பொறுத்தவரை **மணிபல்லவத்திலும்** ஓரளவு **நித்திலவல்லியிலும்** காணலாம்.

சரித்திர நாவல்களுக்கு நா.பா.வின் இலக்கண நடை மிக அழகாகப் பொருத்திவிட்டது. சரித்திரக் கதாபாத்திரங்கள் இலக்கணத் தமிழில் பேசும்போது அந்த நடை நா.பா.வுக்கு மிக இயல்பாக கைவந்துவிட்டது. சரித்திர நவீனங்களைப் பொறுத்த வரையில், சில அரிய சொல்லாட்சிகளுக்கு அடிக்குறிப்பிட்டு விளக்கம் தரும் மரபை நா.பா. கையாண்டு வந்தார். அவரது கடைசி சரித்திர நாவலான **ராணி மங்கம்மாள்** வரை இத்தகைய அடிக்குறிப்புப் பாணியை அவர் பின்பற்றி வந்தார். பத்திரிகையில் இடம்பெறும்போதும் புத்தகமாக வெளிவரும்போதும் 'இராயசம் அச்சய்யா, வள்ளைப்பாட்டு' போன்ற சொற்றொடர்களுக்கு கட்டாயம் அடிக்குறிப்பு இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். மிகுந்த கவனத்துடன் அடிக்குறிப்புகளை கச்சிதமாகவும், சுருக்கமாகவும் அவர் எழுதினார்.

தமது நடையை மேலும் மேலும் மெருகேற்றவென அவர் நுட்பமான ஒரு தொழில் திறனைப் பயன்படுத்தினார். அவரை மிக நெருக்கமாக அறிந்தவர்கள் மட்டுமே அந்த ரகசியத்தை அறிந்திருக்க இயலும். தாம் எழுதி முடித்த சொற்றொடர்களின் இடையே ஆங்காங்கே அந்தச் சொற்றொடர்களின் அழகை மேலும் வளரச் செய்கிற மாதிரி சின்னஞ் சிறு அடைமொழிகளை அவர் அம்புக் குறியிட்டுச் சேர்ப்பதுண்டு. எடுத்துக்காட்டாக, 'வீரர்களின் தோள்களை அலங்கரிக்க வேண்டிய மணமாலைகள்' என்று எழுதி விட்டு முதல் இரு வார்த்தைகளின் இடையே கம்பீரமான என்ற சொல்லை அவர் சேர்ப்பதுண்டு. ஓர் அத்தியாயத்தை முழுவதுமாக

எழுதி முடித்தபிறகு இறுதி வாசிப்பில் இந்தச் சிறுசிறு மெருகேற்றும் பணிகளை அவர் நிகழ்த்துவார். பெரும்பாலும் தாம் எழுதியதை அவர் திருத்தியெழுதுவதில்லை. மனதிற்குள்ளேயே எடிட் செய்து முதல் பிரதியையே முழுமைப்பிரதியாக வெளிப்படுத்துவார். இறுதியில் மிகச் சில இடங்களில் அவர் நிகழ்த்தும் இந்த நகாசு மற்றும் பூச்சு வேலைகள் அவரது நடையின் அழகை மேலோங்கச் செய்யும்.

லா.ச.ரா.வைப் போல் ஒரே கதையை பத்துப் பன்னிரண்டு முறை திருத்தியும் மாற்றியும் எழுதும் வழக்கம் நா.பா.விடம் இல்லை. ஜெயகாந்தனைப் போல் முதலில் ஒரு பிரதி எழுதிவிட்டு பின் அதன் நடுநடுவே வார்த்தைகளையும், வாக்கியங்களையும் சேர்க்கும் வழக்கமும் அவரிடம் இல்லை. மேலே சொன்னதுபோல அவர் மெருகேற்றுவது கூட மிகச் சில இடங்களில்தான். அப்படி மெருகேற்றும் சொற்களையும் கூட தம் எழுத்தில் தாமே கை வைக்க அஞ்சுவதுபோல் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்வார். நா.பா. எழுதிய ஐம்பதுக்கும் மேற்பட்ட அவரது எல்லாப் புத்தகங்களும் அவர் கைப்பட எழுதிய முதல் பிரதிதான். திருத்தியெழுதுவது வீண் வேலை என்றும் இவ்விதம் திருத்தியெழுதுவதற்கு பதிலாக இன்னொரு புதிய படைப்பை எழுதிவிடலாம் என்றும் திருத்தியெழுதினாலும் முதல் தடவை வந்தது மாதிரியான இலக்கிய வீச்சோடு இரண்டாம் தடவை அது வராது என்றும் நா.பா. சொல்வதுண்டு.

அழகிரிசாமி, கு.ப.ரா., புதுமைப்பித்தன், ஜானகிராமன், பி.எஸ்.ராமையா, அகிலன் போன்ற படைப்பாளிகளைப் பட்டியலிடும் போது அவர்கள் வரிசையில் நா.பா.வின் பெயரையும் சேர்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஒரே ஒரு விதத்தில் நா.பா.வின் பெயரை இவர்கள் அனைவரிலிருந்தும் தனித்துச் சொல்லவும் வேண்டியிருக்கிறது. தமிழ் மொழியின் எல்லா நயங்களையும் தம் படைப்புகளில் துலங்கச் செய்த ஓர் அபூர்வமான நடையமைப்பை உடையவர் என்ற வகையிலேயே நா.பா. வித்தியாசப்பட்டு நிற்கிறார்.

ஜானகிராமனின் பலம் அவரது பாத்திர வார்ப்பு. ஜெயகாந்தனின் பலம் அவரது விவாதக் கோணம். புதுமைப்பித்தனின் பலம் அவரது கிண்டல் தொனி. அழகிரிசாமியின் பலம் அதிரச் சொல்லாத எளிமை. அகிலனின் பலம் தேசியச் சிந்தனை. இந்திரா பார்த்தசாரதியின் பலம் கூர்மையான உரையாடல். ராஜம் கிருஷ்ணனின் பலம் கள ஆய்வு. ஆர். சூடாமணியின் பலம் உளவியல் கோணம். கி.ராஜநாராயணனின் பலம் வட்டார வழக்கு. இப்படி ஒவ்வொருவரது பலத்தையும் கணக்கிடுவோமானால் நா.பார்த்தசாரதியின் பலம் என்று அவரது

நடையைத்தான் சொல்லவேண்டும். நினைத்து நினைத்து மகிழ வைக்கிற நடை. தெளிந்த சிற்றோடை போன்ற பட்டறிவால் விளைந்த பிசிரற்ற, சீரான தங்கு தடையற்ற நடை. நா.பா. நடைபோட்ட இலக்கியப்பாதையில் தமிழுக்குக் கிடைத்த மிகப் பெரிய நன்கொடையே அவரது நடைதான். அவர் தடம் பதித்தது அந்த வகையில்தான்.

# 3

# நா.பா.வின் லட்சியவாதம்

**நா**.பா.வின் எழுத்து லட்சியவாதப் போக்கைச் சார்ந்தது. யதார்த்தவாதப் போக்கை அவர் மதித்தார்; யதார்த்தவாத எழுத்தாளர்கள் மீது மிகுந்த மரியாதையும் வைத்திருந்தார். ஆனாலும் தமது எழுத்தின் நெறியாக லட்சியவாதத்தையே அவர் மேற் கொண்டார். யதார்த்தவாதப் போக்கைச் சார்ந்து அவர் எழுதியவை குறைவு.

அவரது தொடக்ககால நாவல்களான **குறிஞ்சிமலர், பொன் விலங்கு** போன்றவை லட்சியவாதப் போக்கின் சிகரங்களைத் தொட்டவை. போகப் போக அவரது படைப்பிலக்கியத்தில் யதார்த்த வாதத்தின் சாயலும் சிறிது படியத் தொடங்கியது. குறிப்பாக சமகால அரசியலை மையமாக வைத்து அவர் எழுதிய **சத்திய வெள்ளம்,** சமகால சினிமாவை மையமாக வைத்து அவர் எழுதிய **நீல நயனங்கள்** போன்ற நாவல்களில் அவரின் பாணியான லட்சிய வாதத்தை மீறி யதார்த்த வாதம் ஓரளவு ஊடுருவுவதைப் பார்க்கலாம்.

எனினும் லட்சியப் பாத்திரங்களை உருவாக்கி எழுதுவதிலேயே அவர் ஒரு தன்னியல்பைக் கண்டார். அவரின் தொடக்க கால லட்சியவாத நாவல்கள் பெரும் புகழ் பெற்றுப் பெரு வெற்றி அடைந்ததும், அவரை இதே வகை நாவல்களை எழுத ஊக்கு வித்திருக்க வேண்டும்.

குணங்களில் மட்டுமல்ல, தோற்றங்களில் கூடத் தம் பாத்திரங்களை லட்சியப் பாத்திரங்களாக அவர் உருவாக்கினார். அரவிந்தன், பூரணி, பாரதி, மோகினி, சத்தியமூர்த்தி என்றெல்லாம் அவர் படைத்து உலவ விட்ட பாத்திரங்கள் சராசரித் தோற்ற முடையவர்கள் அல்ல. அவர்கள் பேரழகர்கள். பேரழகிகள். தாமரை போன்ற பாதங்களை உடையவர்கள். ரோஜாப்பூ போன்ற நிறத்தை உடையவர்கள்.

தமிழ்ச் செய்யுள் மரபில் தென்பட்ட காப்பிய இலக்கணத்தைப் பின்பற்றி அவர் உரைநடை இலக்கியம் படைத்தார் என்று கருதத்

தோன்றுகிறது. தன்னே ரில்லாத் தலைவனை உடைத்தாய் என்று தண்டியலங்கார இலக்கணநூல் சொல்லும் காப்பியக் கதாநாயகர்களாகவே நா.பா.வின் நாவல் நாயகர்கள் இருந்தார்கள்.

நா.பா. தாமே அழகர். யாரையும் வியக்க வைக்கும் வசீகரமான தோற்றமுடையவர். செக்கச் சிவந்த பாதங்களும், கைகளும், சிவந்த மேனியும் கொண்டவர். கிரேக்கச் சிலையைப் போல் செதுக்கிச் செப்பனிட்டது போன்ற அவரது தோற்றப் பொலிவு அவருக்கு ஒரு தனி கம்பீரத்தைக் கொடுத்தது. 'அழகான பத்திரிகை ஆசிரியர் யார்?' என்ற கேள்விக்கு 'நா.பா.' என்று சாவி ஒருமுறை பதில் சொல்லியிருந்தார்.

நா.பா. சுயபிரதிபலிப்புப் பாத்திரங்களாகவே தமது பெரும்பாலான கதாநாயகர்களைப் படைத்தார் என்று சொல்வதுண்டு. வாட்டசாட்டமான உருவமும் வடிவழகும் கொண்டவர்கள் அவரது பாத்திரங்கள்.

தோற்றத்தில் மட்டுமல்ல, குணத்திலும் அவர்கள் உன்னத மானவர்கள். நேர்மை, நாணயம், தனிமனித ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம் முதலிய அனைத்தும் ஒருசேரக் கொண்டிருந்த குணசீலர்கள். அப்பழுக்கற்ற மனிதர்கள்.

'நா.பா.வின் பாத்திரங்கள் மண்ணுக்கு ஓர் அரையடி மேலேதான் நடப்பார்கள்' என்று அவரின் சிலர் வாசகர்கள் குறை சொல்வதுண்டு. இதை ஒரு குறையென்று கொள்ளாமல் ஒரு தன்மை என்று கொள்பவர்களும் நிறைய பேர் உண்டு.

சென்னை வானொலியில் நடந்த ஒரு பேட்டியில் நா.பா.வின் பாத்திரங்கள் லட்சியப் பாத்திரங்களாக இருப்பது பற்றி அவரிடம் கேட்கப்பட்டது.

'ஏன்? லட்சியப் பாத்திரங்களைப் படைக்கக் கூடாது என்று ஏதும் விதி இருக்கிறதா என்ன? நான் அப்படித்தான் படைக்கிறேன். படைப்பேன். வால்மீகியும், கம்பனும் லட்சியப் பாத்திரங்களைத் தானே உருவாக்கினார்கள்? அவர்கள் படைத்த பாத்திரங்கள் தரைக்கு அரையடி அல்ல, நான்கடி அல்லவா மேலே நிற்கின்றனர்? இராமாயணத்தை நாம் இலக்கியமாக ஒப்புக் கொள்ளவில்லையா? லட்சியவாதம் என்பது ஒரு போக்கு. யதார்த்தவாதம் என்பது இன்னொரு வகைப் போக்கு. இரண்டு போக்குகளும் இலக்கியத்தின் எல்லாக் காலத்திலும் இருக்கத்தான் இருக்கும். நான் லட்சிய வாதத்தைப் பின்பற்றுகிற எழுத்தாளன்' என்று நா.பா. தன்னிலை விளக்கம் அளித்தார்.

# 4
# சுயமுன்னேற்றச் சிந்தனைகள்

சுயமுன்னேற்ற இலக்கியம் என்பது ஒரு தனி வகையாகச் செழிக்கத் தொடங்கியிருக்கிறது. உலக அளவிலும் தமிழிலும் சுயமுன்னேற்றக் கட்டுரை இலக்கியம் படைப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் நார்மன் வின்சன்ட் பீல், டேல் கார்னகி, காப்மேயர் போன்றோர் சுயமுன்னேற்றக் கட்டுரை நூல்கள் எழுதிப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள். தமிழில் சுயமுன்னேற்றக் கட்டுரை இலக்கியத்தின் முன்னோடிகள் என்று அப்துர் ரஹீம் போன்றவர்களைக் குறிப்பிட வேண்டும். மெர்வின், எம்.எஸ்.உதயமூர்த்தி, என்.சி.ஸ்ரீதரன் என்றெல்லாம் இந்தத் துறையைத் தொடர்ந்து வளப்படுத்திய, வளப்படுத்தி வருகிற எழுத்தாளர்கள் நிறைய பேர் உண்டு. இவர்கள் தனிமனிதன் எப்படித் தன்னைச் செப்பனிட்டுக் கொள்ளவேண்டும், தன் குணங்களை எவ்விதமெல்லாம் செதுக்கிக் கொள்ள வேண்டும், தன் ஆற்றல்களைத் திட்டமிட்டு எவ்விதம் பெருக்கிக் கொள்ள வேண்டும், அதன் மூலம் எவ்வாறு வாழ்க்கையில் உயர முடியும் என்பதை விளக்கி எழுதுபவர்கள். உலக அளவில் இளைஞர் களிடையே சுயமுன்னேற்றக் கட்டுரைகளுக்குப் பெரும் வரவேற்பு இருக்கிறது.

கட்டுரையாக அல்லாமல், நாவலாக சுயமுன்னேற்ற இலக்கியம் படைத்தவர் என்று நா.பா.வை வகைப்படுத்திச் சொல்லமுடியும். அவரது நாவல்கள் பலவும் சுயமுன்னேற்றச் சிந்தனைகளின் தொகுப்புகளாக விளங்கின. சுயமுன்னேற்றத்தை வற்புறுத்தித் தனிமனிதனை நெறிப்படுத்துவதற்குக் கருத்துச் சொல்லும் ஒரு கருவியாக நா.பா. தம் நாவல்களைக் கையாண்டார் என்று கூடச் சொல்லலாம். இவ்விதக் கண்ணோட்டத்தில் நாவல் படைப்பது என்பது ஒரு தனிப்பாணி. இந்தப் பாணி நா.பா.வுக்கு சுலபமாய் கைவந்திருந்தது. இத்தகைய பாணியில் நாவல் படைத்தவர்கள் தமிழில் அதிகம் இல்லை.

கருத்தைச் சொல்வதே இலக்கியத்தின் பிரதானப் பணி என்று கருதியதால், கருத்தை முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு, அதன் பிறகு சொல்லவந்த கருத்துக்கு ஏற்ப நாவல் களத்தை நா.பா.

தேர்ந்தெடுத்தாரோ என்று கூட எண்ண இடமிருக்கிறது. அந்த அளவு கருத்துகளே அதிகபட்ச ஆட்சி செலுத்திய படைப்புகள் அவருடையவை.

இத்தகைய கருத்துகளை அழகிய பொன்மொழிகளாக்கி, தமிழ்நயம் ததும்பும் வகையில் நாவலின் இடையிடையே வைப்பார் அவர். அவை இட்டுக் கட்டிச் சேர்த்ததுபோல் அல்லாமல் இயல்பாகப் பொருந்தியும் இருக்கும். கருத்தை முன்னிலைப்படுத்துவதிலேயே அவர் கருத்தாக இருந்த காரணத்தால், அவரது அழகிய தமிழில் பொன்மொழியாக அது அலங்காரம் செய்யப்பட்டு மலர்ந்திருக்கும். நா.பா.வின் வாசகர்கள், இத்தகைய சில வாக்கியங்களை மனனம் செய்வது போல் திரும்பத் திரும்பப் படித்து ரசிப்பதுண்டு.

பாத்திரங்களைப் பற்றிய வர்ணனை கூட இத்தகைய பொன் மொழிகளாகத் தோற்றம் தருவதுண்டு. பெரும்பாலும் தனிமனிதனை நெறிப்படுத்தும் வாசகங்களே அதிகமாக இவ்விதம் இடம் பெற்றன.

இவற்றைக் கட்டம் கட்டித் தனியே முகப்பில் ஒவ்வோர் அத்தியாயத்திலும் இடம் பெறச் செய்யும் வழக்கத்தைப் பத்திரிகைகள் மேற்கொண்டன. இந்த வாக்கியங்களின் அழகும் கருத்தின் நேர்த்தியும் முக்கியத்துவமும் வாசகர்களுக்கு எடுப்பாகத் தெரிய, இந்தப் பாணி உதவியது.

எந்த வாக்கியத்தை இவ்விதம் அத்தியாய முகப்பில் இடம்பெறச் செய்வது என்பதைப் பத்திரிகைகளே தீர்மானித்ததும் உண்டு. அல்லாமல் நா.பா.வே அத்தியாயங்களின் இடையே இடம்பெற்ற அத்தகைய வாக்கியங்களைக் கோடிட்டுக் காட்டி முகப்பில் இடம் பெறச் செய்ய வழிவகுத்ததும் உண்டு.

இவ்விதம் தாம் எழுதியவற்றில் அழகும் கருத்தாழமும் நிறைந்த வாக்கியங்களை அத்தியாய முகப்பில் இடம்பெறச் செய்வதைத் தமது தனித்தன்மையாக நா.பா. கருதினார். **குறிஞ்சிமலர், பொன்விலங்கு** போன்ற தொடக்க கால நாவல்களில் தொடங்கிய இந்தப் பாணியை இறுதிவரை அவர் பின்பற்றினார். தொடக்க கால நாவல்களில் திருமூலர், திருவள்ளுவர் போன்ற பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல் வரிகளையும் அவர் பொருத்தமாக இடம்பெறச் செய்ததுண்டு.

தமது தொடர்கதைகள் புத்தக வடிவம் பெற்றபோதும், இந்தப் பாணி அமையவேண்டும் என்று அவர் விரும்புவதுண்டு. பெரும்பாலான புத்தகங்களிலும் கூட ஒவ்வோர் அத்தியாய முகப்பிலும் இத்தகைய பொன்மொழிகள் மலர்ச்சியோடு வாசகர்களை வரவேற்கின்றன. புரட்டிப் பார்க்கும்போதே இது நா.பா. நூல் என்று

கண்டறிகிற வகையில் அவரது நூல்களின் தனித்தன்மையாகவும் இவை அமைந்துவிட்டன. நா.பா.வின் நூல்கள் அனைத்திலும் இடம் பெற்றுள்ள இத்தகைய பொன்மொழிகளைத் தொகுத்துத் தனியே ஒரு நூலாக்கினால் அது சுயமுன்னேற்றச் சிந்தனைகளை நேரடியாக எடுத்துச் சொல்லும் பொன்மொழித் தொகுப்பு நூலாக அமையும். வனப்பும் வசீகரமும் நிறைந்த அவரது தமிழ்நடை என்னும் தேன் தடவிக் கொடுக்கப்பட்ட மாத்திரைகள் அந்தப் பொன்மொழிகள். இளைஞர்களைச் சுயகம்பீரம் கொண்டவர்களாக உயர்த்தும் ஆற்றல் அந்த மாத்திரைகளில் நிரந்தரமாய்ப் பொதிந்திருக்கிறது.

# 5
# இதழாசிரியர்

## கல்கி துணையாசிரியர்

**நா**.பா.வின் பத்திரிகையுலக வாழ்க்கை என்பது கல்கி வார இதழில் அவர் துணையாசிரியர் பொறுப்பை ஏற்றதோடு தொடங்கியது. மதுரை சேதுபதி மேநிலைப் பள்ளியில் ஆசிரியராக நா.பா. இருந்த காலம் அது. அப்போது கல்கி அதிபர் சதாசிவம் அவரது எழுத்தாற்றலை மெச்சி கல்கிக்கு அவரை 1960ல் அழைத்தார். நான்கு ஆண்டுகள் கழித்து கல்கியிலிருந்து விலகும்போது நா.பா.வுக்கு சதாசிவத்திடம் மனத்தாங்கல் ஏற்பட்டது உண்மை. தமது பணி நீக்கம் தொடர்பான விஷயங்களைத் தாமரை இதழில் அவர் காட்டமாக எழுதி வந்ததும் உண்மை. ஆனால் இந்த மனக் கசப்பெல்லாம் பின்னாளில் மங்கி மறைந்தே போனது. தாம் தினமணி கதிர் ஆசிரியப் பொறுப்பை ஏற்றபோது, சதாசிவம் அவர்களையும் அவரது துணைவியார் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களையும் நேரில் சென்று வணங்கி ஆசிபெற்று வந்தார் நா.பா. அவ்விருவர் மேலும் நா.பா.வுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் அளவில்லாதது. தமது எழுத்துலகப் புகழுக்கு சதாசிவம் அவர்கள்தான் மூலகாரணம் என்ற நன்றியுணர்ச்சியும் நா.பா.வுக்கு இறுதி வரை இருந்தது.

நா.பா.வின் புகழ்பெற்ற நாவல்களெல்லாம் கல்கியில்தான் வெளிவந்தன. கல்கியில் பணிபுரிந்தபோதும் சரி, கல்கியை விட்டு விலகிய பிறகும் சரி, அந்த இதழ் அவரது எழுத்துக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வந்தது. **குறிஞ்சி மலர், பொன்விலங்கு, பாண்டிமாதேவி, சத்தியவெள்ளம், துளசிமாடம்** எனப் பலப்பல படைப்புகளை நா.பா. கல்கியில் எழுதினார். தீரன் என்ற புனை பெயரில் பல அரசியல் விமர்சனங்களை எழுதினார். கல்கிக்கும் நா.பா.வுக்கும் இருந்த எழுத்துறவைத் தமிழ் வாசகர்கள் ஆர்வத்தோடு வரவேற்றார்கள். நா.பா. எழுத்து பிற பத்திரிகைகளில் இடம் பெற்றபோது கிடைத்த புகழை விடக் கல்கியில் இடம் பெற்றபோது கிடைத்த புகழ் கூடுதல் என்பதும் உண்மைதான். கல்கி வாசகர்கள்

நா.பா.வின் எழுத்துப் பாணிக்குப் பெரிதும் பழகியிருந்தார்கள். அதை மதித்துப் போற்றினார்கள்.

நா.பா.வின் எழுத்துக்கு கல்கி இதழ் மிக அதிக விளம்பரம் கொடுத்து அவரைப் பெருமைப்படுத்தியது. அவரது தொடர்கதைகள் வெளிவரும்போது, தொடர்கதைக் காட்சிகள் கல்கி அட்டையை வண்ணப் படங்களாக அலங்கரித்தன. அவரது தொடர்கதை தொடங்குவதை அறிவிக்கும் வண்ணப் போஸ்டர்கள் தமிழகமெங்கும் சுவர்களை அலங்கரித்தன.

கல்கி பத்திரிகை மூலம் நா.பா. பெற்ற பெரும்புகழே அடித்தளமாக அமைந்து அவரது இலக்கிய வாழ்க்கையை நிலை நிறுத்தியது என்று சொல்வது மிகையாகாது.

பின்னாளில் தீபம் இதழாசிரியராகவும், தினமணி கதிர் இதழாசிரியராகவும் மாபெரும் படைப்பாளியாகவும் அவர் உயர்த்தோங்கிச் சாதனை புரிந்ததற்கெல்லாம் ஆதாரமாக அமைந்தது அவரது கல்கி வாழ்வு எனலாம்.

## தீபம் ஆசிரியர்

நா.பா.வின் வாழ்நாள் சாதனை என்பதும் அவரது தலையாய பணி என்பதும், அவர் தீபம் இலக்கிய இதழில் ஆசிரியராகவும், நிர்வாகியாகவும் இருந்து சுமார் இருபத்து மூன்று ஆண்டுகள் அதை நடத்தியதுதான். மற்ற பல முக்கியமான எழுத்தாளர்களிடமிருந்து அவரை வேறுபடுத்தி மேலும் உயர்த்துவதும் இந்தப் பணியின் பெருமைதான்.

நா.பா. தாம் எழுத்தாளராக இருந்ததோடு கூட, பிற எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் ஓர் உந்து சக்தியாகவும் இருந்தார். தாம் எழுதியதோடு கூட, பிற எழுத்தாளர்களின் எழுத்துகள் வெளிவரவும் அவர் காரணமாக இருந்தார்.

ஒரு தனி மனிதராக மட்டுமல்லாமல் அவரே ஓர் இலக்கிய இயக்கமாகவும் இருந்தார். இவ்விதம் அவரால் மேலோங்க முடிந்ததற்கு முக்கியமான காரணம் அவர் நடத்தி வந்த தீபம் இதழ்.

தமிழ் மொழியின் நவீன இலக்கிய வளர்ச்சிக்கு இலக்கியச் சிற்றிதழ்கள் சேர்த்த வளம் அபரிமிதமானது. சி.சு. செல்லப்பாவின் எழுத்து, பி.எஸ்.ராமையாவின் மணிக்கொடி, வ. விஜயபாஸ்கரனின் சரஸ்வதி என்றெல்லாம் அவ்வப்போது வெளிவந்த சிற்றிதழ்கள், சில தனி மனிதர்கள் பொருள் நஷ்டப்பட்டுச் செய்த விடாமுயற்சியால்

தமிழுக்குக் கிடைத்த இலக்கிய லாபத்தை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

அந்த வரிசையில் தீபம் இதழுக்கு ஒரு நிலையான இடம் உண்டு. தாம் அதைத் தொடங்கிய நாளிலிருந்து தம் இறுதிநாள் வரை பல்வேறு சிரமங்களைத் தாங்கிக் கொண்டு நா.பா. அதை நடத்தினார் என்பது அவரது பிடிவாதத்தின் வெற்றி. தீபம் நின்றுபோய் விடக்கூடிய சந்தர்ப்பங்கள் அதன் வரலாற்றில் அடிக்கடி நேர்ந்தன. நா.பா.வின் மனஉறுதி ஒன்று மட்டுமே இருபத்தி மூன்று வருஷங்கள் அதைக் கட்டிக் காப்பாற்றியது.

தீபம் மாத இதழ் 1965 ஏப்ரலில் தோன்றியது. 1988 ஏப்ரலில் மறைந்தது.

கல்கியிலிருந்து விலகிய பிறகு ஒரு லட்சிய வேகத்துடன் தீபம் இதழைத் தொடங்கினார் நா.பா. 'ஒரு புதிய பத்திரிகை தொடங்குவதிலுள்ள கஷ்டங்களையெல்லாம் நண்பர்கள் நிறைய எடுத்துச் சொன்னார்கள். இது கஷ்டம் நிறைந்தது என்பதனாலேயே இதைத் தொடங்கவேண்டும் என்ற தீரனின் ஆசை-இயல்பான ஆசை-நியாயமான ஆசை எனக்கு எழுந்தது. இதில் சிரமங்கள் நிறைய இருக்கின்றன என்பதனாலேயே இதை நான் துணிந்து மேற்கொள்ள வேண்டியவனாகிறேன்' என்று அவர் குறிப்பிட்டார்.

தீபத்தைத் தொடங்கும்போது **குறிஞ்சி மலர், பொன்விலங்கு** போன்ற உயர்தர நாவல்களின் ஆசிரியர் என்ற வகையில் அவருக்குப் பெரும் புகழ் இருந்தது. ஆனால் ஒரு பத்திரிகையைத் தொடங்குவதற்குத் தேவையான பொருள் வசதி அவரிடம் இருக்கவில்லை.

'மனோதர்மமும் தன்னம்பிக்கையுமே எனது பலமான மூலதனங்கள்' என்று அவர் அறிவித்தார்.

தீபம் முதல் இதழ் வெளிவந்ததும் ஏராளமான இலக்கிய அன்பர்களின் பாராட்டைப் பெற்றது. நா.பா. உற்சாகமடைந்தார். ஆனாலும் தீபம் இதழின் பணவசதி குறைவு என்று அப்போதும் அவருக்கு ஒரு தன்னுணர்வு இருந்தது. அதனாலேயே அதிகப் பொருட்செலவு செய்வதையும், ஆடம்பரங்களையும் அவர் தவிர்த்தார். தீபம் இரண்டாம் இதழில் அவர் எழுதிய வரிகள் குறிப்பிடத்தக்கவை:

> 'என்னிடம் சிந்தனையையும் எழுத்தையும் தவிர அதிகமாக வசதிகள் ஒன்றுமில்லை என்பதை நானே உணர்கிறேன். நான் ஒரு சாதாரண இலக்கியத் தொழிலாளி என்பதும் எனக்குப் புரிகிறது. நான் பணத்தினால் ஏழையாகவும் மனத்தினால்

> குபேரனாகவும் இருப்பதாக எனக்கே தோன்றுகிறது. உடல் நலமில்லாத கணவன் கட்டிலருகே-அவன் நிச்சயம் பிழைத்துவிடுவான் - பிழைக்க வேண்டும் - என்ற ஒரே நம்பிக்கையை மனத்தின் தவமாகக் கொண்டு வேறுவிதமாக நினைப்பதைக் கூடத் தன் கற்பிற்குப் பங்கமாய் எண்ணும் ஓர் இந்துக் குடும்பத்து சகதர்மிணியைப் போல் என் முயற்சியின் வெற்றியை அன்றி வேறு அமங்கல நினைவை நினைக்கவும் செய்யாது வெற்றியே இலக்காகும் தியானமாக நான் இந்த இலக்கியத் தவத்தைச் செய்து கொண்டிருக்கிறேன்'.

இந்த வரிகள் நா.பா.வின் உள்மன உணர்வுகளைத் தெளிவாய்ப் புலப்படுத்தக்கூடியவை.

தீபம் சாதித்த சாதனைகளில் முக்கியமான ஒன்று, அதில் இடம் பெற்ற மொழிபெயர்ப்புப் படைப்புகள். தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி வாசகர்கள் நன்கு தெரிந்துகொள்ள வழிவகுத்தது போலவே, இந்தியாவின் பிறமொழி எழுத்தாளர்கள் பற்றியும் வாசகர்கள் அறிந்துகொள்ள தீபம் வழிசெய்தது. குறிஞ்சிவேலன் மொழிபெயர்த்த வைக்கம் முகம்மது பஷீர், முகுந்தன் போன்றோரது மலையாளப் படைப்புகள் பல, தொடர்ந்து தீபத்தில் தொடராக வெளிவந்தன. குஜராத்தி ஆசிரியர் காகா காலேல்கர், வங்காள நாவலாசிரியர் பங்கிம் சந்திரர் போன்றோர் குறித்தும் கட்டுரைகள் வெளிவந்தன. அகில இந்திய அளவில் பல எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டது போலவே சர்வதேசப் படைப்பாளிகள் பலரும்கூட அறிமுகப் படுத்தப்பட்டார்கள். ஜான் பால் சார்த்ரே, எஸ்ராபவுண்டு, கெகாவ், வில்லியம் ஃபாக்னர் போன்றோர் பற்றி அசோகமித்திரன் எழுதினார்.

தமிழ்மொழியின் எல்லா உயர்வான கதாசிரியர்களும் தீபத்தில் எழுதினார்கள். வல்லிக்கண்ணன் எழுதிய **சரஸ்வதி காலம், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழில் சிறு பத்திரிகைகள்** போன்ற குறிப்பிடத்தக்க கட்டுரைத் தொடர்கள் தீபத்தில்தான் வெளிவந்தன. **மணிக்கொடி காலம்** என்ற தொடரை பி.எஸ். ராமையா எழுதினார். சி.சு. செல்லப்பா, சிட்டி பெ.கோ. சுந்தரராஜன், சோ. சிவபாதசுந்தரம், தி.ஜ. ரங்கநாதன், சிதம்பர சுப்பிரமணியன், கு. அழகிரிசாமி, ஜானகிராமன், ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், சுந்தர ராமசாமி, ராஜம் கிருஷ்ணன், ஆர். சூடாமணி, க.நா. சுப்பிரமணியம், சௌரி உள்படப் பற்பலரது விதவிதமான படைப்புகளால் தீபம் பெருமையடைந்தது.

தீபத்தின் நேர்காணல்களும், 'நானும் என் எழுத்தும்' என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரைகளும் நா.பா. எவ்வளவு சிறப்பாக இதழாசிரியராக இயங்கினார் என்பதற்குச் சான்றுகள். இத்தகைய பகுதிகள், வாசகர்களுக்கு, இலக்கியம் சார்ந்த புதிய உலகங்களின் சாளரங்களைத் திறந்துவிட்டன.

நா.பா. வின் தலையங்கங்கள் தனித்தன்மையோடும் கருத்துச் செறிவோடும் விளங்கின. அவ்வப்போதைய இலக்கியப் போக்குகள் குறித்து அவர் தலையங்கத்தில் தம் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார். எந்த இலக்கியச் சிக்கல் குறித்தும் இதுதான் தீர்வு என வாசகர்கள் தெளிவாக அறியும் வகையில் அவர் எழுதினார். ஒவ்வொரு மாதமும் நா.பா. எந்தப் பிரச்சினையைத் தலையங்கத்தில் தொட்டிருப்பார் என்றறிய வாசகர்கள் ஆவலாய்க் காத்திருந்தார்கள். நா.பாவின் கருத்தோட்டத்தை ஏற்றுக்கொண்டு அவரது அணியில் நல்லிலக்கிய அன்பர்கள் ஒன்று திரண்டார்கள்.

எழுதத் தொடங்கிப் புகழடைந்து கொண்டிருந்த இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன், ஆதவன் போன்றோருக்கு தீபம் சோதனைப் படைப்புகளை எழுத மேடையமைத்துக் கொடுத்தது.

வண்ணதாசன், நாஞ்சில் நாடன், மோகனன், சி.எம். முத்து, பா.அமிழ்தன் போன்ற அப்போதைய புதியவர்களையும் தீபம் ஆதரித்தது.

நா.பா.வின் **நெற்றிக்கண், கபாடபுரம், செய்திகள், பொய்ம் முகங்கள்** போன்ற பல நாவல்கள் தீபத்தில் தொடராக இடம் பெற்றவைதான். முதலில் தீரர் சத்தியமூர்த்தியின் புதல்வி லட்சுமி கிருஷ்ணமூர்த்தியின் வாசகர் வட்ட வெளியீட்டில் புத்தகமாக வெளிவந்த, **ஆத்மாவின் ராகங்கள்** பிறகு தீபத்தில் தொடராகவும் பிரசுரிக்கப்பட்டது.

அசோகமித்திரனின் **கரைந்த நிழல்கள்**, ஆதவனின் **காகித மலர்கள்**, இந்திரா பார்த்தசாரதியின் **தந்திர பூமி**, நாஞ்சில் நாடனின் **மாமிசப் படைப்பு**, தி.சா. ராஜுவின் **காளியின் கருணை**, தேவகோட்டை வா. மூர்த்தியின் **ஜொலிக்கும் வைரங்கள்,** மலர் மன்னனின் **மலையிலிருந்து வந்தவன்** போன்ற பல புகழ்பெற்ற நாவல்கள் தீபத்தில் தொடராக இடம் பெற்றவைதான்.

சிறுகதை, கவிதை ஆகிய துறைகளிலும் தீபம் நிகழ்த்திய சாதனை சாதாரணமானதல்ல. கலைஞன் பதிப்பகம் மாசிலாமணி, தீபம் சிறுகதைகளின் தரத்தையும் தனித்துவத்தையும் உணர்ந்து, தேர்ந்தெடுத்த கதைகளைத் தொகுத்து, **தீபம் கதைகள்** என்ற

தலைப்பில் ஒரு நூல் கொண்டு வந்தார். தீபத்தின் சிறுகதைத்துறைச் சாதனைக்கு அத்தாட்சியாக அந்த நூல் அமைந்துள்ளது.

நா.பா.வே மணிவண்ணன், பொன்முடி, நவநீத கவி, செங்குளம் வீரசிங்கக் கவிராயர் என்றெல்லாம் பல புனைபெயர்களில் தீபத்தில் அடிக்கடிக் கவிதைகள் எழுதிவந்தார்.

ஜெயகாந்தன் கவிதைகள் தீபத்தில் இடம் பெற்றன. சிறுகதை எழுத்தாளர் ஆர்.சூடாமணியின் கவிதை கூட தீபத்தில் பிரசுரமாகியுள்ளது. 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி' என்ற புகழ் பெற்ற கவிதை உள்பட, மு. மேத்தாவின் பல கவிதைகள் தீபத்தில்தான் வெளிவந்தன. ஞானக்கூத்தன், வைதீஸ்வரன், மீரா போன்ற கவிதைத் துறைச் சாதனையாளர்கள் பலர் தீபத்தில் எழுதி வந்தார்கள்.

இலக்கிய ரீதியாகப் பல புதிய பகுதிகளைத் தீபம் தொடர்ந்து அறிமுகம் செய்து வந்தது. புத்தகங்களில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னுரைகளை தீபம் வெளியிட்டது. சிவசங்கரியின் தொகுப்புக்கு ஜெயகாந்தன் எழுதிய முன்னுரை, ஜி.நாகராஜன் தொகுப்புக்கு சுந்தர ராமசாமி எழுதிய முன்னுரை, அசோகமித்திரன் கதைத் தொகுதிக்கு ஞானக்கூத்தன் எழுதிய முன்னுரை ஆகியன வெளியிடப்பட்டபோது வாசகர் கடிதங்கள் அதிக அளவில் வந்து குவிந்தன.

'ஊஞ்சல் கடிதங்கள் - ஒரு புதிய இலக்கியப் பாலம்' என்றொரு பகுதியை தீபம் தொடங்கியது. படைப்பாளிகள் ஒருவருக்கொருவர் எழுதிக் கொண்ட கடிதங்கள் இப்பகுதியில் இடம் பெற்றன.

'ஆறங்கம்' என்றொரு பகுதியும் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு பிரச்சினை குறித்து ஆறு பிரமுகர்களின் கருத்துகளைக் கேட்டு வெளியிடும் புதிய பகுதி அது. பத்திரிகை அனுபவம், மேடை நாடகம், கவிதை, ஓவியம் எனப் பலதரப்பு விஷயங்கள் ஆறங்கத்தில் அலசப்பட்டன.

'அஞ்சறைப் பெட்டி' என்ற பகுதியைத் தொகுத்து சே.சேவற்கொடியோன் வழங்கிவந்தார். ஒரே கேள்விக்கு ஐந்து பேர் தந்த பதில்களின் தொகுப்பாக அமைந்த பகுதி இது.

இலக்கியம் தொடர்பான விவாதங்களையும் சர்ச்சைகளையும் தீபம் வெளியிட்டது. விவாதங்கள் கருத்தை ஒட்டியே இருந்தனவே தவிரத் தனிமனிதத் தாக்குதலை தீபம் தவிர்த்து விட்டது.

நா.பா. விசேஷ சிரத்தையோடு ஆண்டு மலர்களைத் தயாரித்தார். இலக்கிய அன்பர்கள் பொக்கிஷமாகப் பாதுகாக்கும் வகையில்

முன்னணிப் படைப்பாளிகளின் எழுத்தோவியங்களுடன் அந்த மலர்கள் நிரந்தர மதிப்போடு மலர்ந்தன. வாசகர்கள் ஆண்டு மலருக்காக ஒவ்வோர் ஆண்டும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தார்கள்.

ஆண்டுமலர் தவிர சிறப்பிதழ்கள் சிலவும் வெளிவந்து கொண்டிருந்தன. ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாத தீபம் இதழ் சுதந்திர தினச் சிறப்பிதழாக உருக்கொண்டது. அக்டோபர் இதழ் தீபாவளிச் சிறப்பிதழாக மலர்ந்தது. தீபம் தீபாவளிச் சிறப்பிதழ் பற்றிய மதிப்புரைகள் வருஷந்தோறும் ஹிந்து போன்ற ஆங்கில நாளேடுகளில் வெளியாயின. காந்தியத் தத்துவங்களின் மேல் அதிக ஈடுபாடு கொண்டிருந்த நா.பா. 1969 அக்டோபர் இதழை காந்தி நூற்றாண்டுச் சிறப்பிதழாக வெளிட்டார்.

இவை தவிர தீபத்தின் இருபத்திமூன்று வருட வரலாற்றில் அது மலேசிய இலக்கிய மலர் ஒன்றையும்(மார்ச் 1969), ஈழத்து இலக்கிய மலர் ஒன்றையும்(ஜூன் 1969)வெளியிட்டது.

மலேசிய மலரை ரெ.கார்த்திகேசு, ரெசுவப்பா, க.கிருஷ்ணசுவாமி, சை.பீர்முகமது, சி.கமலநாதன் போன்றோர் படைப்புகள் அலங்கரித்தன.

ஈழத்து இலக்கிய மலரை இலங்கையர் கோன், வ.அ.இராசரத்தினம், டொமினிக் ஜீவா, எஸ்.பொன்னுத்துரை, செ.கணேசலிங்கன், கே.டானியல், எம்.ஏ.நுஃமான் போன்றோர் படைப்புகள் அணிசெய்தன.

மலர்களில் மட்டுமல்லாமல் சாதாரண இதழ்களிலும்கூட, இலங்கை-மலேசியா எழுத்தாளர்கள் தீபத்தில் பங்குகொண்டார்கள்.

நா.பா. தினமணி கதிர் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, தீபத்தை நிர்வகிக்க வல்லிக்கண்ணன், ஆ.மாதவன், நாஞ்சில் நாடன் ஆகியோரைக் கொண்ட மூவர் குழு, ஆசிரியர் குழுவாக நியமிக்கப்பட்டது.

பதினேழாம் ஆண்டில் (1982) தீபத்தின் புறவடிவம் மாற்றப்பட்டது. அட்டை விலை கட்டுப்படியாகவில்லை என்பதால், தீபத்தின் வடிவத்தைப் பாதியாக்கி அதன் மூலம் அட்டைக்கு ஆகும் செலவைப் பாதியாகக் குறைத்தார் நா.பா.

ஆனால் இந்தப் புதிய வடிவத்தை வாசகர்கள் விரும்பவில்லை. ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு மீண்டும் தீபத்தைப் பழைய வடிவிலேயே கொண்டு வந்தார் நா.பா.

தீபம் தன் வரலாற்றில் ஒரேயொரு முறை சிறுகதைப் போட்டியை

அறிவித்தது. எஸ். சங்கரநாராயணன், புரசு பாலகிருஷ்ணன், மோகனன் மூவரும் பரிசு பெற்றனர்.

தீபம் வெளியிட்ட தொடர்களான **மணிக்கொடி காலம்** (பி. எஸ். ராமையா), **புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்** (வல்லிக்கண்ணன்) ஆகியன அந்தந்த எழுத்தாளர்களுக்கு சாகித்திய அக்காதெமிப் பரிசையும் பெற்றுத் தந்தன.

இலக்கியத்தின் பல துறைகளைத் தொட்டு ஒவ்வொரு துறையிலும் வியக்கத்தக்க சாதனை புரிந்த லட்சிய இதழாக தீபம் அமைந்தது. தீபத்தின் சிறப்புக்கெல்லாம் காரணம், தனிமனித விருப்பு வெறுப்பு இல்லாமலும், குழு சாராமலும் நடுநிலை இலக்கிய இதழாக அது வெளிவரக் காரணமாக இருந்த அதன் ஆசிரியர் நா.பார்த்தசாரதிதான். நா.பா. வின் சாதனைகளில் அவரது தீபம் ஆசிரியப் பணி ஒரு மகுடம் என்று சொன்னால் மிகையல்ல.

## தினமணி கதிர் ஆசிரியர்

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி நிறுவனங்களின் அதிபர் ராம்நாத் கோயங்காவின் அழைப்பின் பேரில் (04-10-1979) விஜயதசமி அன்று தினமணி கதிரின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார் நா.பா.

தினமணி கதிர், தினமணியின் இலவச இணைப்பாக இல்லாமல் ஒரு தனி இதழாக வெளிவந்து கொண்டிருந்த காலம் அது. (நா.பா.வுக்குப் பிறகு கி.கஸ்தூரிரங்கன் தினமணி கதிர் பொறுப்பை ஏற்றார். அவர் காலத்தில்தான் தினமணி கதிர் தினமணியின் இலவச இணைப்பாக மாற்றப்பட்டது.)

தினமணி கதிரில் நா.பா.வுக்கு முந்தைய ஆசிரியராக பழுத்த ஆன்மிகவாதியும் பாரதி அன்பருமான கே.ஆர்.வாசுதேவன் பொறுப்பேற்றிருந்தார். கே.ஆர்.வாசுதேவன் தினமணி கதிர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டு, தினமணியின் துணை ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். நா.பா. கதிர் ஆசிரியப் பீடத்தை அலங்கரித்தார்.

நா.பா.வைக் கதிருக்கு ஆசிரியராக்கியதில், அதன் முந்தைய ஆசிரியரான கே.ஆர்.வாசுதேவனுக்குப் பங்கு உண்டு. ராம்நாத் கோயங்காவின் ஆலோசகரான ஆடிட்டர் குருமூர்த்திக்கும் பெரும் பங்கு உண்டு.

நா.பா. ஒரு சில ஆண்டுகளே கதிருக்கு ஆசிரியராக இருந்தபோதிலும், அந்தக் காலகட்டத்தில் பல உயர்ந்த இலக்கியப் பணிகளைக் கதிரின் மூலம் ஆற்றினார்.

அவர் தயாரித்த முதல் கதிர் இதழில் அவர் எழுதிய தலையங்கம், அச்சுக் கோக்கப்படாமல் அவரது முத்து முத்தான கையெழுத்தில் அப்படியே பிரசுரமாயிற்று. தீபத்தில் 'இலக்கிய மேடை' என்ற பகுதியில் வாசகர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து வந்த நா.பா., கதிரிலும் கேள்வி பதில் பகுதியைத் தொடங்கினார். 'மணிவண்ணன் பதில்கள்' என்ற தலைப்பில் பதிலளிக்கலானார்.

நா.பா.வின் **நிசப்த சங்கீதம், சாயங்கால மேகங்கள்** போன்ற சமூக நாவல்கள் கதிரில்தான் வெளிவந்தன. அவரது புகழ்பெற்ற சரித்திர நாவல்களில் ஒன்றான **'ராணி மங்கம்மாள்'**, அவர் கதிர் ஆசிரியராய் இருந்த காலத்தில் கதிரில் எழுதியதுதான்.

நா.பா. கதிருக்கு ஆசிரியரானதும் பல உயர்நிலை இலக்கியவாதிகள் கதிரில் எழுத முன் வந்தார்கள். தி.ஜானகிராமன் தமது கடைசி நூலான 'அபூர்வ மனிதர்கள்' என்ற கட்டுரைத் தொடரைக் கதிரில்தான் எழுதினார். ர.சு. நல்லபெருமாள் **தூங்கும் எரிமலைகள்** என்ற நாவலை எழுதினார். இந்திரா பார்த்தசாரதி, ராஜம் கிருஷ்ணன், அசோகமித்திரன், ஆர்.சூடாமணி, கி.ராஜநாராயணன், சுஜாதா போன்ற பல முக்கியமான படைப்பாளிகளின் படைப்புகள் வெளிவந்து கதிருக்கு இலக்கிய மெருகு கூடியது. சிறுகதைப் போட்டி, பாரதியார் கட்டுரைப் போட்டி எனப் பல போட்டிகளையும் நடத்தி, பற்பலரது எழுத்தாற்றல் வெளிச்சத்துக்கு வரவும் நா.பா. வழிசெய்தார்.

கி.வா. ஜகந்நாதன் தலைமையில் துணுக்கு எழுத்தாளர் மாநாடு ஒன்றை எக்ஸ்பிரஸ் வளாகத்திலேயே சிறப்பாக நடத்தினார். சிறுமுகை கதிரேசன், சங்கரிபுத்திரன் போன்ற பல துணுக்கு எழுத்தாளர்கள் அந்த மாநாட்டில் ஆர்வத்தோடு பங்குகொண்டு உரையாற்றினார்கள்.

தினமணி கதிர் வார இதழை மட்டுமல்லாமல், கதைக்கதிர் என்ற ஒரு மாத இதழையும் எக்ஸ்பிரஸ் நிர்வாகம் நடத்தி வந்தது. அந்த மாத இதழுக்கும் நா.பா.வே ஆசிரியப் பொறுப்பேற்றிருந்தார். கதைக் கதிர், மாதநாவல் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்தது. மாதந்தோறும் ஓரொரு நாவல் வீதம் ஆண்டுக்குப் பன்னிரண்டு நாவல்களை அது வெளியிட்டது. நா.பா. அதன் ஆசிரியராக இருந்தபோது அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, ஆதவன், ஆர்.சூடாமணி போன்ற பல முக்கியமான எழுத்தாளர்களின் முழுநாவல்கள் அதில் அடுத்தடுத்து வெளிவந்தன.

கல்கி, தீபம், தினமணி கதிர் ஆகிய இதழ்கள் மூலம் நா.பா. ஆற்றிய தமிழப்பணி, தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்துவிட்டது. யார்க்கும் அஞ்சாத நெஞ்சுரம், தகுதியானவர்களைத்

தேடிக் கண்டுபிடித்து ஊக்குவித்தல், முற்றிலும் வணிகமயமாகி விடாமல் இதழைப் பாதுகாத்தல், நல்லிலக்கியத்திற்குக் களம் அமைத்துத் தருதல், உண்மையின் பக்கம் நின்று போராடுதல், எப்போதும் அறச் சீற்றத்தோடு இயங்குதல் போன்ற இயல்புகளை இதழாசிரியர் என்ற வகையில் நா.பா. கொண்டிருந்தார் எனக் கூறலாம்.

# 6
# கேள்வி பதில்

கேள்வி-பதில் பகுதி, பத்திரிகைகளின் ஓர் இன்றியமையாத அம்சமாக அன்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. சிறுகதை, தொடர்கதை, நகைச்சுவைத் துணுக்குகள், சினிமா விமர்சனம் என வார இதழ்களும் மாத இதழ்களும் பலவகைப்பட்ட அம்சங்களைத் தாங்கி, கதம்ப மாலையாக மலர்ந்து வருகின்றன. சமூகத்திலுள்ள எல்லாத் தரப்பு வாசகர்களையும் கவரக்கூடிய பகுதிகள் தங்கள் பத்திரிகையில் இருக்க வேணடும், அப்போதுதான் எல்லோரும் விரும்பி வாசிப்பார்கள் என்று அனைத்துப் பத்திரிகைகளும் நினைப்பதே இதற்குக் காரணம்.

சினிமா இதழ்கள் சினிமாக் கேள்வி பதில்களையும் அரசியல் இதழ்கள் அரசியல் கேள்வி பதில்களையும் வெளியிடுகின்றன. பொது இதழ்களில் சினிமாவும் அரசியலும் தவிர்க்க முடியாத அம்சங்களாகி விட்டன. இவை தவிர மற்ற துறைகள் சார்பாகவும்கூட வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கள் தரப்படுகின்றன.

தீபம் நா.பார்த்தசாரதி, 'இலக்கிய மேடை' என்ற தலைப்பில் தமது தீபம் இதழில் வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளித்து வந்தார். பின்னர் அவர் தினமணி கதிர் வார இதழுக்கு ஆசிரியரானபோது, 'மணிவண்ணன் பதில்கள்' என்ற தலைப்பில் பதிலளிக்கத் தொடங்கினார். தினமணி கதிர் வார இதழ், கதைக் கதிர் மாத இதழ் இரண்டுமே எக்ஸ்பிரஸ் நிர்வாகத்தின் இரு வேறு இதழ்களாகத் தனித்தனியே வெளிவந்து கொண்டிருந்தன. சிறிதுகாலம் இவ்விரண்டுக்கும் ஒருசேர ஆசிரியப் பொறுப் பேற்றிருந்தார் அவர். பின்னர் கி.கஸ்தூரிரங்கனை எக்ஸ்பிரஸ் நிர்வாகம் கதிருக்கு ஆசிரியராக்கியது. அப்போது கதைக்கதிர் ஆசிரியராக மட்டுமே நா.பா. இயங்க நேர்ந்தது. கதைக்கதிர் ஆசிரியராக இருந்த காலத்தில், கதிரில் தாம் எழுதி வந்த 'மணிவண்ணன் பதில்கள்' பகுதியைக் கதைக்கதிரில் தொடர்ந்தார் நா.பா.

நா.பா.வின் கேள்வி பதில் பகுதிக்கு கேள்விகள் இரண்டு முறைகளில் வருவதுண்டு. வழக்கம்போல் அஞ்சலில் வந்து குவிவது

ஒருவகை. இன்னொரு வகை, கூட்டங்களில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகள்.

இலக்கியக் கூட்டங்களில் அவர் சொற்பொழிவாற்றி முடித்த பிறகு கேள்விகளுக்கு எனத் தனியே நேரம் ஒதுக்குவதுண்டு. வாசகர்கள் நேரிலேயே அவரிடம் பலவகைப்பட்ட கேள்விகளைக் கேட்பார்கள். ஆர்வத்தோடு கேட்பவர்கள், அவர் மேல் மிகுந்த மரியாதையோடு கேட்பவர்கள், விமர்சனபூர்வமாகக் கேட்பவர்கள், அவரை வம்பில் சிக்க வைக்க வேண்டுமென்றே கேட்பவர்கள் எனக் கேள்வியாளர்களில்தான் எத்தனை ரகம்! அவர் பதறாமல் சிதறாமல் பொறுமையாகப் பதில் சொல்வார். கேள்வி எந்தத் தொனியில் வருகிறதோ அதே தொனியில் பதிலுமிருக்கும். கிண்டலாகக் கேள்வி கேட்டால், அவ்விதம் கேள்வி கேட்டவர்களை பதிலுக்குக் கிண்டல் செய்ய அவர் தவறியதில்லை.

கேள்வி கேட்பவர்களிடம், கேள்விகளைக் கேட்பதோடு அல்லாமல், அதே கேள்விகளை ஒரு துண்டுக் காகிதத்தில் ஊர், பெயர், முகவரியோடு எழுதித் தருமாறு அவர் வேண்டுகோள் விடுப்பார். பின்னர் அந்தக் கேள்விகளையும் தாம் சொன்ன பதில்களையும் அவர் பத்திரிகையில் வெளியிடுவதுண்டு.

கேள்வி-பதில் பகுதியின் பிரதான நோக்கமே, பத்திரிகையில் வாசகர் பங்கும் இருக்க வேண்டும் என்பதுதான். தங்கள் கேள்வி பிரசுரமாகியுள்ளது, தங்களது ஆசிரியர் பதில் சொல்லியிருக்கிறார் என்றெல்லாம் பலவிதக் கண்ணோட்டங்களில் வாசகர்கள் பத்திரிகையை நேசிக்கத் தொடங்குவார்கள். இது பத்திரிகையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும். நா.பா. ஆசிரியராக இருந்த பத்திரிகையை வாசகர்கள் மிகவும் நேசித்ததற்கு, அந்தப் பத்திரிகையில் இடம் பெற்ற கேள்வி பதில் பகுதியும் ஒரு முக்கிய காரணம்.

கேள்வி-பதில் பகுதியில், அவருடைய நகைச்சுவை உணர்வு, இலக்கிய இலக்கணப் புலமை, சமகால எழுத்தாளர்கள் தொடர்பான விமர்சனம், சமகால நிகழ்வுகள் குறித்த கருத்து, அரசியல் சார்புகளில் அவர் எந்த நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்தார் என்பது பற்றிய விளக்கம் எனப் பலவகை அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. நா.பா.வின் பதில்கள் சுவையாக இருந்ததோடு கூடச் சூடாகவும் இருந்தன.

**கே: இந்தக் காலத்து இளைஞர்களுக்கு நடிகைகளைப் பற்றித் தெரிந்திருக்கிற அளவுக்கு, இலக்கிய கர்த்தாக்களைப்**

**பற்றித் தெரிந்திருக்கவில்லையே?**

ப: பீடி விற்பனையாகிற அளவு குங்குமப்பூ விற்பனை ஆகாது. அது குங்குமப் பூவின் குற்றமல்ல.

**கே: உண்மையைச் சொல்லுங்கள். பத்திரிகைகள் பெருகுவது தமிழ்மொழிக்கு நல்லதுதானே?**

ப: எந்த மொழியாயிருந்தாலும் பத்திரிகைத் துறை வளர்ச்சி என்பது அந்த மொழிக்கு நல்லதுதான். ஆனால் ஒரே பாணியில் அமைந்த பத்திரிகைகள் பெயரை மட்டும் வேறுவேறாய் வைத்துக் கொண்டு எத்தனை வெளிவந்தாலும் என்ன லாபம்? பிரபல எழுத்தாளர்களின் வழக்கமான ஸ்டீரியோ டைப் தொடர்கதைகள், அதற்குப் பிரபல ஓவியர்களின் வழக்கமான ஆபாச ஓவியங்கள். இதனால் எந்தப் பத்திரிகைக்கும் தனித்தன்மை இல்லாமல் போய் விடுகிறதே. இது மிகவும் ஆபத்தான நிலைமை இல்லையா? தனித்தன்மையற்ற மலட்டுப் பத்திரிகைகளால் என்ன சாதனை செய்ய முடியும்?

இவ்விதமெல்லாம் அவர் எழுதிய பதில்கள் அவர் கலந்து கொள்ளாத பிற கூட்டங்களிலும் கூட விவாதிக்கப்பட்டன; பாராட்டப்பட்டன. நா.பா. இலக்கியத்தின் அடிநாதமாக விளங்கிய அறச் சீற்றம், அவரது பதில்களிலும் பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருந்தது.

தமது தமிழ்ப் புலமை, வரலாற்று ஆய்வுத் திறன் போன்றவை யெல்லாம் புலப்படும் வகையிலும் அவர் பதிலளித்து வந்தார். இத்தகைய பதில்கள் தமிழ் இலக்கிய ஆய்வு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன.

**கே: கட்டபொம்மனைப் பற்றித் தமிழ் மக்களுக்கு முதலில் கூறியவர் யார்?**

ப: காலஞ்சென்ற மதுரைக் கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார். அவர் கட்டபொம்மன் வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் கட்டபொம்மன் பற்றி எழுதிய 'பாஞ்சாலங்குறிச்சி வீர சுதந்திரம்' மறக்க முடியாத நூலாகும்.

நா.பா.வின் சமகாலத்தில் வாழ்ந்தவரும் கலைமகள் ஆசிரியருமான கி.வா ஜகந்நாதனும் நா.பா.வைப் போலவே இலக்கியப் புலமை நிறைந்தவர். நா.பா.வால் பெரிதும் மதிக்கப்பட்ட அவர், நா.பா.வை விட வயது கூடியவர். தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யரின் சீடர். அவர் கலைமகள் இதழில் 'விடையவன் விடைகள்' என்ற தலைப்பில்

கேள்விகளுக்கு பதில் சொல்லி வந்தார். அவரது தமிழ்ப் புலமையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த அந்தப் பகுதியில், வெண்பாவில் கேட்கப்படும் கேள்விகளுக்கு வெண்பாவிலேயே பதில் சொல்லும் வழக்கத்தை அவர் பின்பற்றி வந்தார். நா.பா.வும் கூடச் சிற்சில சந்தர்ப்பங்களில் வெண்பாக் கேள்விகளுக்கு வெண்பா வடிவத்திலேயே பதில் எழுதுவண்டு.

**கே: செங்குளம் வீர சிங்கக் கவிராயர்**
**எங்கேபோய் விட்டார் எழுதாமல்? - மங்காத**
**தீபத்தில் முன்போலத் தீட்டுவரா பூங்கவிதை**
**கோபத்தைச் சொல்லில் குழைத்து?**

ப: இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
சும்மா விளாசுகிற சோம்பேறிப் பாட்டெழுதி
எண்ணிக்கை காட்டுகிற எத்தர் வகையறாவில்
நண்ணாதே சிங்கக் கவி.

மறைந்த இலக்கியப் பிரமுகர்களைப் பெருமைப்படுத்துகிற விதமாக அவர் நிறைய பதில்களை எழுதியிருக்கிறார். தற்கால இலக்கிய நீரோட்டம் இடைவெளி இல்லாமல் உயர்ந்த தரத்தில் தொடர இத்தகைய பதில்கள் உதவியிருக்கின்றன. புதிதாய் எழுதப் புறப்பட்ட இளைஞர்கள், தாங்கள் மதித்துப் படிக்க வேண்டிய முன்னோடிகள் யார்யார் என்பதை இந்தப் பதில்களை வைத்துப் புரிந்து கொண்டார்கள்.

**கே: டி.கே.சி. விண்ணுலகில் இப்போது யார் யாரைச் சந்தித்து அளவளாவி மகிழ்ந்து கொண்டிருப்பார்?**

ப: பலரைச் சந்திக்க ரசிகமணி அவர்களுக்கு நேரம் எது? போய்ச் சேர்ந்த முதல் நாளிலிருந்து கம்பரிடம்தான் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார். ஒருவேளை கம்பருக்கே அவருடைய காவியத்தில் புதுப்புதுப் பாவங்களையும் ரசங்களையும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கலாம். ரசிகமணியால் அவருடைய ஆசான் கம்பனைக்கூட மகிழ்வித்து ரசிக்கச் செய்துவிட முடியும்.

நா.பா. பதில்களில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் என்பது ஆங்காங்கே தெளிக்கப்பட்ட நகைச்சுவை. சில பதில்களை முகத்தில் ஒரு மெல்லிய முறுவலையாவது படரவிடாமல் யாரும் வாசித்துவிட இயலாது. பெரும்பாலான நேரங்களில் இரண்டு பொருளைத் தரும் ஒரே சொல்

மூலம் சிலேடை நயத்தைப் புகுத்தி நகைச்சுவையைத் தோற்றுவிப்பார் அவர்.

**கே: சாம்பார் என்ற சொல் தமிழா? இல்லையானால் அதற்குத் தமிழ் என்ன?**

ப: ஈ, கொசு, கரப்பான், பல்லி எல்லாம் இதில் விழுந்து சாகும் பார் என்று சொல்லி அச்சொல்லினை விளக்க முடியுமானால் அதுவும் தமிழ்தான். அப்படி விளக்க முடியாதாயின் குழம்பு என்பதுதான் தமிழ். ஆனால் குழம்பிலும் ஒரு ஆபத்திருக்கிறது. ஓட்டலில் போய் உட்கார்ந்து இட்லி கொடுத்த சர்வரிடம் 'சர்வர், குழம்பு' என்று நீங்கள் கூற அவன் குழம்பியபடியே நின்றுவிட்டால் ஆபத்து. அல்லது பதிலுக்கு உங்களைப் பார்த்து தூக்குவாளியோடு வந்து 'சார், குழம்பு' என்று அவன் உங்களையே குழம்பச் சொன்னாலும் ஆபத்து.

தி.ஜானகிராமன், ஜெயகாந்தன், கு.அழகிரிசாமி, ராஜம் கிருஷ்ணன் போன்ற படைப்பிலக்கியவாதிகள் பலரைப் பெருமைப் படுத்தும் விதமாக நா.பா. பதிலளித்திருக்கிறார். சாகித்ய அகாதெமி பரிசு உள்பட எழுத்தாளர்கள் பற்பல பரிசுகளைப் பெறும் தருணங்களில் அந்தப் பரிசுக்கான அவர்களது தகுதியை உறுதி செய்யும் விதமாகவும் அவர் பதிலளித்ததுண்டு.

பொதுவாகவே தமது கருத்துக்கள் அனைத்தையும் நேரடியாகக் கொட்டுவதற்கு உரிய ஒரு மேடையாக அவர் தமது பதில்களைப் பயன்படுத்தி வந்திருக்கிறார். நா.பா. அன்பர்கள், எந்தப் பிரச்சினை குறித்தும் அவரது கருத்தை அறிய அவரது கேள்வி-பதில் பகுதியைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவர் பதில் எழுதுவதற்கான கேள்விகளும் தொடர்ந்து வந்து குவிந்து கொண்டிருந்தன.

எழுத்தாளராக மட்டுமே இருப்பவர்களுக்கு இல்லாத ஒரு வாய்ப்பு, எழுத்தாளராக இருந்ததோடு பத்திரிகை ஆசிரியராகவும் இருந்த நா.பா.வுக்குக் கிட்டியது. அதுதான் வாசகர்களின் கேள்விகளுக்கு பதில் எழுதும் வாய்ப்பு. அந்த வாய்ப்பைத் திறம்படக் கையாண்டார் நா.பா. என்பது அவரது ஆளுமையில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

# 7
# நாவல்கள்

## குறிஞ்சி மலர்

ஒரே நாவல் மூலம் தமிழ் நாவல் துறையில் நா.பா. ஒரு தனி இடம் பிடித்துவிட்டார். அவரது புகழ் பெற்ற நாவலான **குறிஞ்சி மலர்** பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால். ஒரு மிகவும் கண்ணியமான காதல் கதை என்று தான் சொல்ல வேண்டியிருக்கும். ஒரு வகையில் பார்த்தால் நிறைவேறாத காதலின் கதை அது. அதன் கதாநாயகன் அரவிந்தன், கதாநாயகி பூரணியை மணம் புரிந்து கொள்ளாமலே காலமாகிவிடுகிறான். ஆனாலும் அவனுக்காகக் கைம்மைக் கோலம் ஏற்றுத் தனிவாழ்வு வாழ முடிவெடுக்கிறாள் பூரணி.

மேனி தொடாமல் காதலிக்கும் இரண்டு தூய உள்ளங்களின் புனித சங்கமத்தை நா.பா. தமக்கே உரிய அழகிய நடையில் ஜிலுஜிலுவென்று எழுதிச் செல்கிறார். கதாநாயகன் அரவிந்தன் ஒரு கவிஞனும் கூட. 'நிலவைப் பிடித்துச் சிறுகறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்' என்றெல்லாம் அவன் எழுதும் தமிழ் நயம் செறிந்த கவிதைகள், தற்செயலாக அவன் டைரியைப் படித்து அவன் கவிதைகளை அனுபவிக்கும் பூரணியின் மனதை மட்டுமல்லாமல் வாசகர்கள் எல்லோருடைய மனதையுமே கொள்ளை கொள்கின்றன.

உண்மையில் அரவிந்தன் எழுதுவது மட்டுமல்ல கவிதை. அரவிந்தனே ஒரு கவிதைதான். பூரணி இன்னொரு கவிதை. நா.பா. காலத்தை வென்று நிற்கும் இரண்டு கவிதைகளாக அரவிந்தனையும் பூரணியையும் தம் நாவலில் படைத்து உலவ விட்டிருக்கிறார். அரவிந்தனையும், பூரணியையும் வெறுமே கவிதைகள் என்று மட்டும் சொன்னால் போதாது. அவர்கள் ஒரு சிறிதும் இலக்கணம் பிறழாத உயர்தர மரபுக் கவிதைகள்.

லட்சக்கணக்கான வாசகர்களைக் கவர்ந்த இந்த நாவலின் முக்கியச் சிறப்பம்சம் இதன் சொக்கிக்கிறங்கவைக்கும் நடை. எழில் கொஞ்சும் அதன் இனிய தமிழில் வாசகர்கள் நெஞ்சைப் பறி கொடுத்தனர். மொழிபெயர்க்க இயலாத அளவு தமிழுக்கே உரிய தனி அழுகுகள் செறிந்த மயங்க வைக்கும் நடை அது. நா.பா. இலக்கியத்தின் முதல் சிறப்பே அவரது தமிழ் நடையின் வசீகரம் தான்.

நா.பா.வின் இரண்டாவது நாவலான **பொன்விலங்கு** குறிஞ்சி மலரை விடவும் அதிக நடை நலம் வாய்ந்தது. என்றாலும் குறிஞ்சி மலரில் பொக்கிஷமாகப் பொதிந்து வைக்கப்பட்டிருக்கும் பல புனித உணர்வுகளின் ஈர்ப்பு காரணமாக வாசகர்கள் இந்தப் படைப்பையே அதிகம் நேசிக்கிறார்கள்.

இந்த நாவலின் வெற்றிக்கு வேறொரு உதாரணத்தையும் சொல்லலாம். இந்த நாவலால் ஈர்க்கப்பட்ட பலர் தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு அரவிந்தன் என்றும் பூரணி என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். இன்றும் மகிழ்கிறார்கள்.

இந்த நாவலின் இன்னொரு சிறப்பு, இதன் ஓரொரு அத்தியாய முகப்பிலும் நா.பா. தாமே எழுதியிருக்கும் பொன்மொழிகளும், அவர் எடுத்தாண்டிருக்கும் இலக்கிய மேற்கோள்களும். அவைகள் இந்த நாவலுக்குத் தனி அழுத்தத்தையும் ஆழத்தையும் தந்து மனத்தில் பெரும் பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன.

இராமாயணமும், மகாபாரதமும் இருபெரும் இதிகாசங்களாக நிலைத்துப் புகழ்பெற்ற மாதிரி, குறிஞ்சிமலரும் தமிழ் நாவல்களிடையே ஒரு தனி இதிகாசச் சிறப்பைப் பெற்றுவிட்டது. தமிழின் எல்லா நாவல்களிலிருந்தும் வித்தியாசப்பட்டு, அது தன்னிகரற்ற தூய இலக்கியமாக நின்று நிலைத்துவிட்டது.

## சரித்திர நாவல்கள்

கல்கி, அரு.ராமநாதன், ஜெகசிற்பியன், சாண்டில்யன் என சரித்திர நாவல் துறையில் ஈடுபட்டுப் பெயர் பெற்ற எழுத்துலக முன்னோடிகள் பலர். இவ்வரிசையில் நா. பார்த்தசாரதிக்கு ஒரு முக்கிய இடம் உண்டு.

**பாண்டிமா தேவி, மணிபல்லவம், கபாடபுரம், வஞ்சிமாநகரம், நித்திவல்லி, ராணி மங்கம்மாள்** ஆகிய ஆறு சரித்திர நாவல்களையும் **ராஜகோபுரம், தகடூர் யாத்திரை** முதலிய சரித்திரச் சிறுகதைகளையும் அவர் படைத்துள்ளார்.

அவரது மகாபாரத இதிகாச உரைநடை வடிவமான **அறத்தின் குரல்** என்ற நூல், பெருங்கதை என்ற தமிழ்க் காப்பியத்தின் உரைநடை வடிவமான **வெற்றி முழக்கம்**, பாகவதக் கதைகளை விவரிக்கும் **கண்ணன் கதைகள், புறநானூற்றுச் சிறுகதைகள், தமிழ் இலக்கியக் கதைகள்** போன்ற படைப்புகளையும் கூடச் சரித்திரச் சாயல் உள்ள படைப்புகள் வரிசையில் அடக்க வேண்டியிருக்கும். சரித்திரக் கதைகளில் படைக்கப்படும் அரசன், அரசி, மந்திரி போன்ற பாத்திரங்கள் இந்தப் படைப்புகளிலும் உண்டு.

சரித்திரப் படைப்புகள் பழங்காலத்தில் நடந்தவற்றை விவரிப்பதால், அது இலக்கணத் தமிழில் எழுதப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பாத்திரங்களின் இடையேயான உரையாடல் கூட இலக்கணத் தமிழில் அமையவேண்டிய தேவை உண்டு.

நா.பா.வின் பழந்தமிழ் இலக்கண, இலக்கியப் புலமை சரித்திரப் படைப்புத் துறையில் அவர் மேலோங்குவதற்குப் பெரிதும் உதவியிருக்கிறது.

பாண்டியர்களின் தலைநகரான **கபாடபுரம்**, சேரர்களின் தலைநகரான **வஞ்சி மாநகரம்** ஆகிய தலைப்புகளிலெல்லாம் பாண்டிய, சேர, வரலாறுகளை மையமாக வைத்து அவர் நாவல் படைக்க உந்து சக்தியாக இருந்தது அவரது பழைய இலக்கியப் பயிற்சியே.

சரித்திர நாவல் எழுதுவதென்பது, இலக்கிய ஆற்றலோடு கூட, கடின உழைப்பும் கலந்த ஒரு பணி. இலக்கியங்களையும் வரலாறுகளையும் வாசித்துக் குறிப்புகள் சேகரிப்பதோடு, தொடர்புடைய இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்வதும் கூடத் தேவைப்படும். ஒவ்வொரு நாவலைப் படைக்கும்போதும் இவை எல்லாவற்றையும் மேற்கொண்டார் நா.பா.

அவர் எழுதிய மாபெரும் சரித்திர நாவல் ஒன்று, ஒரு பத்திரிகை அலுவலகத்தில் கொடுக்கப்பட்டு, பிரசுரமாவதற்கு முன்பே தொலைந்துவிட்டது. தம் எழுத்துக்கு வேறொரு பிரதி வைத்துக் கொள்ளும் வழக்கமில்லாத நா.பா.வால் அந்த இலக்கிய இழப்பைப் பின்னர் ஈடு செய்ய இயலவில்லை. அந்த நாவலை மறுபடி எழுதக்கூடிய உற்சாகமோ அவகாசமோ அவருக்குக் கிடைக்காமலே போயிற்று. அந்த நாவலின் பிரதி தொலைந்தது பற்றி நா.பா. பெரிதும் வருந்திப் பேசியதுண்டு.

சென்னை இலக்கிய வாழ்க்கையில், இடையே சிறிது காலம் கடும் பொருளாதாரப் பற்றாக்குறை காரணமாகப் பெரிதும் சோர்வடைந்திருந்தார் நா.பா. சென்னையை விட்டு விலகி மறுபடி கிராமத்திற்குச் சென்றுவிடலாம் என்று முடிவு செய்தார். அந்த நேரத்தில் ஆனந்தவிகடன் அதிபர் எஸ்.பாலசுப்பிரமணியன் நா.பா.வோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். விகடனுக்கு ஒரு சரித்திர நாவலை அவர் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ‘சென்னையிலேயே தான் தொடர்ந்து தங்குவதற்கு வசதியாக, சன்மானத் தொகையை முன்பணமாகத் தர இயலுமா?’ என்று தாம் கேட்டதாகவும் அதற்கு பாலசுப்பிரமணியன் தாமே

எதிர்பாராத பெரிய தொகையொன்றைத் தந்து உதவியதாகவும் நா.பா. சொல்லி நெகிழ்ச்சி அடைவதுண்டு. அப்படி எழுதப்பட்ட நாவல்தான், கோபுலுவின் அழகிய சித்திரங்களோடு விகடனில் தொடராக இடம் பெற்ற **நித்திலவல்லி.**

நா.பா. கடைசியாக எழுதிய சரித்திர நாவல் **ராணி மங்கம்மாள்**. தாம் தினமணி கதிர் ஆசிரியராக இருந்தபோது, அந்த ஆசிரியப் பதவியின் கடைசிக் காலங்களில் பெரிதும் ஈடுபட்டு அந்த நாவலை எழுதினார் நா.பா. கோபுலுவின் வண்ணச் சித்திரங்களோடு தினமணி கதிரில் வாரந்தோறும் தொடராக வெளிவந்து ஏராளமான வாசகர்களின் பாராட்டைப் பெற்ற நாவல் அது.

அவரது சரித்திர நாவல்களில் பெரும் புகழ் பெற்றது மணிபல்லவம். பக்க அளவிலும் மிகப் பெரிய நாவல் அது.

நா.பா.வின் சமூக நாவல்களான **ஆத்மாவின் ராகங்கள், சத்திய வெள்ளம்** போன்றவற்றைக் கூடச் சமகாலச் சரித்திர நாவல் என்ற வகையிலும் குறிப்பிட வேண்டியிருக்கும். அவ்வப்போதைய அரசியல் சூழலை மையமாக வைத்து சமகாலத்தின் வரலாற்றைப் படைப்பிலக்கியமாகப் பதிவு செய்யும் ஆற்றல் நா.பா.வுக்கு நிரம்ப இருந்தது.

தமது அழகிய தமிழால், சரித்திர நாவல் துறையில் இன்றளவும் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கிறார் நா.பா.

## பத்திரிகைத் துறை சார்ந்த நாவல்கள்

பத்திரிகையாளர்களாக இருந்த எழுத்தாளர்கள் என்று தமிழில் கொஞ்சம் பேர் உண்டு. பாரதியாரே பத்திரிகையாளராகவும் இருந்தவர்தான். புதுமைப்பித்தன், சி.சு.செல்லப்பா, பி.எஸ்.ராமையா எனப் பலர் பத்திரிகைகளில் பணிபுரிந்தவர்களே. கல்கி, தேவன், சாவி, மணியன் என பத்திரிகை, எழுத்து ஆகிய இரு துறைகளிலும் ஈடுபட்ட படைப்பிலக்கியவாதிகளை இன்னும்கூட நாம் பட்டியலிட முடியும். நா.பா.வும் பத்திரிகையாளர்தான். கல்கி வார இதழின் துணை ஆசிரியராகவும் தீபம், தினமணி கதிர் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இயங்கியவர் அவர்.

ஆனால் மேற்சொன்னவர்களுக்கும் நா.பா.வுக்கும் ஒரு முக்கிய மான வேறுபாடு உண்டு. பத்திரிகைத் துறையை மையமாக வைத்து அதிக எண்ணிக்கையில் நாவல்களை எழுதியவர் என்ற பெருமை நா.பா.வுக்கு மட்டுமே உண்டு. நிறையப் பத்திரிகையாளர்களைப் பல்வேறு நாவல்களில் பாத்திரங்களாக உலவவிட்டவர் அவர்.

அவரது முப்பத்தொன்பது சமூக நாவல்களில் **நெற்றிக்கண், செய்திகள், சுந்தரக் கனவுகள்** ஆகிய மூன்று நாவல்களும் முழுவதும் பத்திரிகைத் துறை சார்ந்தவை. சுகுணன், முகுந்தன், சுகுமாரன் ஆகிய இந்நாவல்களின் கதாநாயகர்கள் பத்திரிகைப் பணியையே தங்கள் தொழிலாகக் கொண்டவர்கள்.

மற்ற நாவல்களிலும்கூட, பத்திரிகைகளில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள் துணைப் பாத்திரங்களாக இடம் பெறுகிறார்கள். **குறிஞ்சிமலர்** நாவலில் ஆர்.எஸ்.எஸ். பாண்டியன் என்ற பெயருடைய ஒரு நிருபர் வருகிறார். **பட்டுப்பூச்சி** நாவலில் கதாநாயகி சுகுணாவைப் பற்றிய செய்திகளைத் தாங்குகிற மஞ்சள் பத்திரிகை பற்றிச் சொல்லப்படுகிறது. **பொன்விலங்கு,** குத்துவிளக்கு என்ற ஒரு வார இதழைப் பற்றிப் பேசுகிறது. கமலக்கண்ணன் பத்திரிகையொன்றைத் தொடங்குவதாக **'நெஞ்சக்கனல்'** விவரிக் கிறது. **ஆத்மாவின் ராகங்கள்** நாவலில் ராஜகோபால், காந்திராமனின் வரலாற்றை எழுதி முடிக்கும் பத்திரிகை ஆசிரியராகச் சித்திரிக்கப் படுகிறார். **நிசப்த சங்கீதம்**, தியாகியின் குரல் நாளேட்டின் உரிமை யாளரான சிவகாமிநாதனைப் பற்றிப் பேசுகிறது. **மூலக்கனலில்** எழில்ராஜா என்ற பத்திரிகை நிருபர் இடம் பெறுகிறார்.

இப்படி ஏராளமான பத்திரிகையாளர்களைப் பாத்திரங்களாய்ப் படைக்க நா.பா.வின் பத்திரிகையுலக அனுபவம் கைகொடுத் திருக்கிறது. நா.பா. உருவாக்கிக் காட்டும் லட்சியப் பத்திரிகை யாளர்கள் காந்தியத்தில் நம்பிக்கை உள்ளவர்கள். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லாத துணிச்சல் நிறைந்தவர்கள். பத்திரிகைகளில் சினிமாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுவதை எதிர்ப்பவர்கள்.

லட்சியப் பத்திரிகையுலகம் தோன்றி விடுமானால் நாடு பல்வேறு துறைகளில் முன்னேறும் என்பதே நா.பா.வின் உறுதியான கருத்தாக இருந்தது.

## அரசியல் சார்ந்த நாவல்கள்

நா.பா.வின் சமூக நாவல்களில், சமகால அரசியலை மையமாக வைத்து அவர் எழுதிய அரசியல் நாவல்கள் ஒரு தனி வகையானவை. இத்தகைய அரசியல் நாவல்களைப் பின்னாளில் பலர் எழுதிப் பார்த்தார்கள். என்றாலும் அரசியல் நாவல் வகையில் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவர் என்ற பெருமை நா.பா.வுக்கு உரியது. தற்கால இலக்கியவாதிகளில் அரசியல் களனை **அதிக அளவில்**

படைப்பிலக்கியத்தில் கொண்டு வந்தவர் என்ற பெருமையும் அவருக்கே உரியது.

அவரது சமூக நாவல்கள் பலவற்றில் அரசியல் ஓர் அங்கமாக இருந்தாலும், சில நாவல்களில் அரசியல் முழுமையான இடம் பிடித்துக் கொண்டது. **சத்திய வெள்ளம், மூலக்கனல்** போன்ற நாவல்கள் முழுக்க முழுக்க அரசியலையே பேசிச் செல்பவை. நா.பா.வின் சமகால அரசியல் தலைவர்களில் ஒருவரான காமராஜ் **சத்திய வெள்ளம்** நாவலில் ராமராஜ் என்ற ஒரு பாத்திரமாக வருகிறார்.

நா.பா. அரசியல் கட்சிச் சார்புடையவராக இருந்தார். பெரும்பாலும் ஸ்தாபன காங்கிரஸை ஆதரித்தார். ஜெயகாந்தன், கண்ணதாசன், சோ ஆகியோரும் நா.பா.வும் காமராஜரின் தலைமையின் கீழ் ஓர் அணியில் திரண்டனர். நா.பா. ஸ்தாபன காங்கிரஸின் பிரசார பீரங்கியாகவும் செயல்பட்டார். பல்வேறு அரசியல் பிரமுகர்களோடு பற்பல ஊர்களுக்குச் சென்று மேடைகளில் கட்சிக்காகப் பிரசாரம் செய்யும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார். இதன் காரணமாக ஏராளமான அரசியல் தொண்டர்களுடனும், தலைவர்களுடனும் அவரால் நெருங்கிப் பழக முடிந்தது. ஆளுங்கட்சியின் ஊழல்கள், எதிர்க் கட்சியினரின் ஆர்ப்பாட்டங்கள், ஒருவரை ஒருவர் செல்வாக்கிழக்க வைப்பதற்காகச் செய்யும் மோசடி வேலைகள், தொண்டர்களின் அப்பாவித்தனம், தலைவர்கள் பலரிடம் தனிமனித ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம் இரண்டுமே ஒருசேரக் காணாமல் போயிருக்கும் விந்தை, அரசியலின் பின்னணியில் இயங்கிவந்த வன்முறை, இவற்றையெல்லாம் மீறி, சொத்து சுகத்தில் ஒரு சிறிதும் ஆசையில்லாத ஜெய்பிரகாஷ் நாராயண், காமராஜ் போன்ற மிகச் சில தலைவர்களிடம் தென்பட்ட நேர்மை என எல்லாமே சுடச்சுட உள்ளது உள்ளபடி நா.பா.வின் கவனத்துக்கு வந்தன. அவரின் படைப்பு மனம் உண்மைகளோடு கதை என்கிற பின்னணிக் கற்பனையையும் கலந்து, அரசியலை இலக்கியமாக்கியது.

''நான் நெருங்கியிருந்து கண்ட சில அரசியல்வாதிகளின் சாயல்களும், நான் விலகியிருந்து உணர்ந்த பல அரசியல்வாதிகளின் சாயல்களும் இதில் வராது என்று உங்களுக்கு இந்த முன்னுரையில் உத்தரவாதம் கொடுப்பது அவ்வளவு நியாயமாக இருக்க முடியாது அல்லவா?'' என்று தமது **நெஞ்சக் கனல்** நாவலின் முன்னுரையில் கேட்கிறார் நா.பா.

அவரது அரசியல் நாவல்களில் தென்பட்ட சமகால உண்மை, சிந்திக்கும் திறன் கொண்ட ஆயிரக்கணக்கான வாசகர்களை

வசீகரித்தது. நாட்டு நடப்பைக் கண்டு அலுப்படைந்திருந்த முதியவர்களும், கொதிப்படைந்திருந்த இளைஞர்களும் ஒருசேர நா.பா.வின் அரசியல் நாவல்களைக் கொண்டாடத் தொடங்கினார்கள்.

பத்திரிகையாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் உள்ள உறவு ஆளுங்கட்சியைத் துணிச்சலோடு எதிர்க்கும் பத்திரிகையாளர்கள் சந்திக்க நேர்கிற மிரட்டல்கள் போன்றவற்றையெல்லாம், ஒரு பத்திரிகையாளராகவும் நா.பா.இருந்ததால் சுலபமாகக் கண்டுணர்ந்து எழுத முடிந்தது.

கமலக்கண்ணன், திருமலை, அனுக்கிரகா என்றெல்லாம் அவர் படைக்கும் பாத்திரங்கள் மூலம் அரசியல் களத்தில் குதிக்கும் தனி மனிதர்கள் எவ்விதம் திட்டமிட்டு அரசியலில் முன்னேற முனைகிறார்கள் என்பதை விளக்குகிறார் அவர்.

'அரசியலில் புகழும் செல்வாக்கும் பதவியில் இருக்கும் வரைதான். எனவேதான் பதவிக்காக எதையும் செய்ய அரசியல் வாதிகள் துணிகிறார்கள். பேச்சாற்றல்தான் அரசியல்வாதியின் முதல் தகுதி, செயலாற்றல் அல்ல. பழிவாங்குதல் என்பது அரசியலின் ஆரம்பகால அரிச்சுவடி இலக்கணம்' என்பன போன்ற பல கருத் தோட்டங்களை நா.பா.வின் நாவல்கள் முன் வைக்கின்றன. எம்.எல். ஏக்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்து கட்சி மாறத் தூண்டுதல், வாக்குகளை லஞ்சம் கொடுத்துப் பெற முயலுதல் போன்றவற்றையும் அவர் எழுதுகிறார்.

பலவகைப்பட்ட மந்திரிகளையும் அவர் படைத்துக் காட்டுகிறார். கொள்கைப் பிடிப்பும், கடமையுணர்வும் உள்ள மந்திரிகளிலிருந்து இரட்டை வேடமிடும் வன்முறையாளர்களான மந்திரிகள் வரை நா.பா.வின் இலக்கியம் காட்டும் மந்திரிகள் பற்பலர்.

தில்லி மந்திரி ரமேஷ்சிங், கல்வியமைச்சர் கரியமாணிக்கம், சி.கே.சி.நாதன், எம்.எல்.ஏ.இராவணசாமி என நா.பா. படைக்கும் பலவகைப்பட்ட அரசியல் பாத்திரங்கள் உண்மையின் பிரதிபலிப்புகளாகவே உள்ளன.

காந்தியக் கருத்துகள் மீது இயற்கையாகவே இருந்த நாட்டம் காரணமாக, சுதந்திரத்திற்குப் பின்னுள்ள இந்தியாவிலும் அரசியலில் தூய்மை வேண்டும் என்று ஆசைப்பட்டார். நா.பா. மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்திலேயே விறுவிறுப்பான பல அரசியல் நாவல்களைத் தொடர்ந்து படைத்து வந்தார். இன்றும் அரசியல் களம் நா.பா. காலத்தில் உள்ளது போலவேதான்

இருப்பதால், அவரது நாவல்கள் இப்போதும் கூட விரும்பி வாசிக்கப்படுகின்றன.

தமிழ் நாவல் துறையில் நா.பா. செய்துள்ள சாதனை பெரிது. தொடக்க காலத்திலிருந்து இறுதிக் காலம் வரை, லட்சிய வாதத்தையே மேற்கொண்டு நாவல் படைத்தவர் அவர். தமது கருத்தாகவும் பாத்திரங்களின் உரையாடல் மூலமாகவும் அவர் தெரிவித்தவை யாவும் சமூக உணர்வு நிரம்பியவை. கலை என்ற பெயரிலும், யதார்த்தம் என்ற பெயரிலும் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்று தாம் கருதிய எந்தக் கருத்தையும் அவர் எழுதவில்லை. இந்தக் கோட்பாட்டிலிருந்து இறுதிவரை அவர் அணுவளவும் விலகவு மில்லை. இதுவே அவரது சிறப்பு.

# 8
# கவிதைகள்

இலக்கியம் பல துறைகளைக் கொண்டது. சிறுகதை, கவிதை, நாடகம், சமூக நாவல், சரித்திர நாவல் என்று இன்னும் கிளை விரித்து நடப்பது. இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் ஈடுபடும் எழுத்தாளர்கள் மிகக் குறைவு. ஒருசில துறைகளில் ஈடுபட்டு வெற்றியும் கண்ட சிலர் ஏனோ வேறு சில துறைகளை முற்றிலும் நிராகரித்தே வந்திருக்கிறார்கள்.

சமூக நாவல் துறையில் பெரு வெற்றி கண்ட ஜெயகாந்தன், ஜானகிராமன் போன்றோர் சரித்திர நாவல் எழுதியதே இல்லை. ஜெயகாந்தன் சில கவிதைகளை எழுதியுள்ளார். அவற்றில் ஒரு சில அவரது திரைப்படங்களில் பாடல்களாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் தற்காலத் தமிழ் இலக்கியத்தின் மாபெரும் சாதனையாளராகக் கணிக்கப்படும் ஜானகிராமன் கவிதைப் பக்கம் தலைவைத்துப் படுத்ததில்லை. கு.ப.ரா., மௌனி, கு.அழகிரிசாமி போன்ற சிறுகதைத் துறை முன்னோடிகள் பலர் வேறு பல துறைகளில் முற்றிலுமாக ஈடுபட்டதேயில்லை.

தற்காலத் தமிழ் இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்ட பெருமை தீபம் நா.பார்த்தசாரதிக்கு உரியது. சிறுகதை, மரபுக் கவிதை, புதுக்கவிதை, நாடகம், சமூக நாவல், சரித்திர நாவல், பயண இலக்கியம், பழைய, தற்கால இலக்கியக் கட்டுரைகள், கேள்வி பதில் என எல்லா வகையிலும் அவர் எழுதிப் பார்த்திருக்கிறார். அவர் தொடாத துறையில்லை.

என்றாலும் சிறுகதை, நாவல் ஆகிய இருதுறைகளிலும் அவர் பெருவெற்றி பெற்றார். மற்ற துறைகளிலும் எழுதினார், முயற்சி செய்தார் என்பதெல்லாம் உண்மைதான். எனினும் தமது துறைகள் சிறுகதையும் நாவலும் மாத்திரமே என்று பிறகு அவர் தெளிவடைந்தார்.

மொத்தம் மூன்று நாடகங்களை அவர் எழுதினார். அவையும் பெரிய அளவில் புகழ்பெற்றதாய்ச் சொல்ல இயலாது. நாடகத் துறையில் தாம் புகழ்பெற இயலாதது பற்றியோ அதிக நாடகங்களைத் தாம் எழுதாமல் போனது பற்றியோ அவருக்கு வருத்தமோ ஏக்கமோ

இருந்ததில்லை. தாம் நாடகக்காரர் அல்ல என்ற தீர்மானம் அவருக்கிருந்தது.

ஆசிரியர் கூற்றாக நிறைய விஷயங்களை நேரடியாக எடுத்துச் சொல்வதில் அவர் ஆர்வம் காட்டினார். அப்படி எடுத்துச் சொல்ல ஏராளமான விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் அவரிடம் இருந்து கொண்டே இருந்தன. தனிமனிதனைப் பற்றியும் சமுதாயத்தைப் பற்றியும் உரத்துச் சிந்தித்துச் சேகரித்த கருத்துகளைத் தம் கதைகளிலும் நாவல்களிலும் அவர் கொட்டினார்.

இவ்விதம் வரும் ஆசிரியர் கூற்றுகளுக்கு நாடகம் என்ற வடிவத்தில் இடம் கிடையாது. பாத்திரங்களின் உரையாடல் தொகுப்புத் தான் நாடக வடிவம். அந்த உரையாடல்களில் பாத்திரங்களின் வாயிலாக அவர் ஓரளவு தம் கருத்துகளைச் சொல்ல முயலலாமே தவிர, சிறுகதையிலும் நாவலிலும் செய்வது போலப் பாத்திரங்களின் ஊடே புகுந்து தம் சிந்தனைகளை எழுதிச் செல்ல இயலாது.

நா.பா. அடிப்படையில் ஒரு சிந்தனாவாதி. கருத்துகளை எடுத்துச் சொல்வதுதான் அவரது பிரதான நோக்கம். இலக்கியம் அதற்கு ஒரு கருவியாகப் பயன்பட்டது. நாடகத்தை விட, நாவலும் சிறுகதையுமே இவ்விதம் அவர் இயங்குவதற்கு அதிகமாக வழி வகுத்தன. எனவே நாடக ஆசிரியராகத் தாம் இயங்காமல் போனது பற்றி அவர் கவலை கொள்ளவில்லை.

ஆனால் கவிஞராகத் தாம் புகழ்பெற இயலாமல் போனது பற்றி அவருக்கு மிகுந்த ஆதங்கம் இருந்தது. உணர்ச்சிபூர்வமாகத் தம் சிந்தனைகளைப் பொழிவதற்குக் கவிதை ஏற்ற களம் என்று அவர் கருதினார். காலமும் வாசகர்களும் அவரைக் கவிஞராக இயங்க விடவில்லை. நாவலாசிரியராகவும் சிறுகதை ஆசிரியராகவுமே அவர் அறியப்பட்டார். அவ்விரு துறைகளில் மட்டுமே அவர் அதிகம் ஈடுபடுமாறு நேர்ந்துவிட்டது. ஆனாலும் ஒன்று உண்மைதான். அவரது சிறுகதைகளும் நாவல்களும் உரைநடைக் கவிதைகள் போலவே உணரப்பட்டன. மரபு வழிப்பட்ட வர்ணனையாற்றல், உணர்ச்சி பூர்வமான மொழிநடை ஆகியவை அவரது உரைநடையைக் கவிதை அந்தஸ்துக்கு உயர்த்தி விட்டன. குறிஞ்சி மலர் நாவலை 'வசன காவியம்' என்று சொல்வது, அந்தப் படைப்பை மிகைப்படுத்திச் சொல்வது ஆகாது.

'இலக்கியங்களில் வாழ்கிற குறிஞ்சி மலரின் பெருமை போல், காவியங்களில் வாழ வேண்டிய பெண் பூரணி. என்னால்

அவளுடைய கதையை வெறும் வசனத்தில் தான் எழுத முடிந்தது. என்ன செய்வது? அரவிந்தனைப் போல் கவியுள்ளம் எனக்கு இல்லையே!' என்று ஆசிரியர் அந்த நாவலின் இறுதியில் உள்ளம் கசிந்து எழுதிச் செல்கிறார்.

நா.பா. எழுதிய கவிதைகள் தொகுக்கப்பட்டு இரண்டு கவிதை நூல்களாக வெளிவந்துள்ளன. **மணிவண்ணன் கவிதைகள், பூமியின் புன்னகை** என்னும் இவ்விரு நூல்களும் கவிதைத் துறையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சாதனைப் படைப்புகள் அல்ல. கவிஞராக வேண்டும் என்ற அவரது ஆசையின் வெளிப்பாடுகள் அவை.

'மக்கள் என்னைக் கவிஞனாகப் புரிந்து கொள்ளவில்லை. எழுத்தாளனாகவே தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் என்னை ஒரு கவிஞனாகவே புரிந்து கொண்டிருக்கிறேன்' என்று ஒரு பேட்டியில் நா.பா. குறிப்பிட்டிருக்கிறார். தீபத்தில் அவ்வப்போது சில இனிய மரபுக் கவிதைகளை அவர் எழுதி வந்தார். மென்மை உணர்வுகளும், தார்மீகக் கோபமும் ஒருசேரக் கலந்த கவிதைகள் அவை.

**'பூமியில் வல்லவர் நடுவினிலே - நான்**
**பொய்யை எதிர்த்துக் கொதிக்கின்றேன்**
**மாமிசம் விற்பவர் நடுவினிலே - நான்**
**மலர்களைத் தேடித் தவிக்கின்றேன்...**
**நீதியைத் தேடிப் புறப்பட்டேன் - இங்கு**
**நெடுந்தூரம் ஓடிக் களைத்துவிட்டேன்**
**பாதியில் திரும்ப மனம் இல்லை - என்**
**பாதையை மாற்றவும் நினைக்கவில்லை...'**

இதுபோன்ற கவிதைகள் தீபம் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன. ஆனாலும் அதிக எண்ணிக்கையில் அவர் கவிதைகளை எழுதவில்லை. கவிதை மேல் அவருக்கிருந்த ஆர்வமும், கவிஞராக வேண்டும் என்பதில் அவருக்கிருந்த வேட்கையும் அவரது சிறுகதைகளிலும், நாவல்களிலும் வேறு வகையில் புலப்படுகின்றன. அவரது படைப்புகளில் கவிஞர்கள் நிறையவே பாத்திரங்களாக இடம் பெறுகிறார்கள்.

உரைநடை இலக்கியத்தில் கவிஞர்களையும், கவிதைகளையும் அதிக அளவில் கொண்டாடியவர் என்ற பெருமை நா.பா.வுக்கு உரியது. இந்த அளவு அதிக எண்ணிக்கையில் கவிஞர்களைச் சிறுகதைகளிலும் நாவல்களிலும் பாத்திரங்களாகப் படைத்த வேறு

தமிழ் எழுத்தாளர்கள் யாருமில்லை. இது கவிதை என்ற இலக்கிய வடிவம் ஆசிரியரின் அடிமனத்தில் கொண்டிருந்த செல்வாக்கைக் காட்டுகிறது.

செங்குளம் வீரசிங்கக் கவிராயர், மணிவண்ணன் ஆகிய புனைபெயர்களில் நா.பா. கவிதை எழுதினார். நவநீத கவி என்ற கற்பனைக் கவிஞரையும் அவர் படைத்த கவிதைகளையும் தம் நாவல்களில் அறிமுகம் செய்து வைத்தார். அவரது பல நாவல்களில் வரும் பாத்திரங்கள் நவநீத கவியின் கவிதைகளைப் படித்துத் தங்கள் லட்சியங்களை உரப்படுத்திக் கொள்பவர்கள். தங்களிடையேயான உரையாடல்களில் நவநீதகவியைப் போற்றுகிற அவர்கள், அவரது கவிதை வரிகள் மூலம் வாழ்க்கை உந்துதல் பெறுபவர்கள்.

நவநீத கவியை உண்மையாகவே வாழ்கிற ஒரு கவிஞரைப் போலக் கற்பனையில் கட்டி நிறுத்தினார் நா.பா. அவ்விதம் ஒரு கவிஞர் இருப்பதாகவே பல வாசகர்கள் கருதத் தலைப்பட்டார்கள். அவரது கவிதைத் தொகுப்பு எந்தப் பதிப்பகத்தில் கிடைக்கும் என்று கூட்டங்களில் அவரிடம் கேள்வி கேட்டார்கள். அப்படி யாரும் இல்லை என்றும் அது ஒரு கற்பனைப் பாத்திரம் என்றும் பலமுறை நா.பா.விளக்க வேண்டியிருந்தது.

நா.பா.வின் பாத்திரங்கள் பலர் நவநீத கவியின் கவிதைகளைப் படித்து நெக்குருகுபவர்கள். பாரதி, சத்தியமூர்த்தியிடம் கொண்ட காதல், சத்தியமூர்த்தி மோகினியிடம் கொண்ட காதல் (பொன் விலங்கு), கண்ணுக்கினியாள் பாண்டியன் மீது கொண்ட காதல் (சத்தியவெள்ளம்) எல்லாம் நவநீத கவியின் கவிதைகள் மூலமாகத் தான் காட்டப்படுகின்றன.

நவநீத கவி வாயிலாக வெளிப்படும் நா.பா.வின் கவிதைகள், சமுதாய உணர்ச்சி நிரம்பியவை.

**‘ இந்த நூற்றாண்டின் இந்திய இளைஞனே**
**இப்போதுநீ எந்த இடத்தில் நிற்கிறாய்?**
**ஆன்மிகத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் நடுவிலா?**
**அறியாமைக்கும் அறிவுக்கும் நடுவிலா?**

என்ற வரிகளைப் படிக்கிறான் சத்தியவெள்ளத்தில் கதைத் தலைவன் பாண்டியன். பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் பிறகு தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான கவி என்று நவநீத கவிதையைப் பற்றி அவன் கருதுகிறான்.

நவநீத கவி, **யுகபுஷ்பங்கள்** உள்படப் பல்வேறு கவிதை நூல்களை எழுதியிருப்பதாகவும், கதாபாத்திரங்கள் அந்த நூல்களை நேசித்து வாசிக்கும் உயர்தர வாசகர்கள் எனவும் நா.பா. கதைகளை வளர்த்துச் செல்கிறார்.

**சத்தியவெள்ளம்** நாவலில் 'அண்ணாச்சி' பாத்திரம் கொலையுண்டபோது கதைத் தலைவன் பாண்டியன், காந்தி இறந்த போது நவநீத கவி பாடிய கவிதையை நினைந்து ஒப்பிட்டு உள்ளம் கரைகிறான்.

**காதுகள் இருந்தும் கேளாமல்**
**கண்கள் இருந்தும் பாராமல்**
**வீதிகள் இருந்தும் நடவாமல்**
**விவேகம் இருந்தும் புரியாமல்**
**மேதைகள் நிறைந்த பொதுவினிலே**
**புதியவன் ஒருவன் வந்துநின்றான்**
**சாதிகள் மறைந்த சமதர்மம்**
**சத்தியம் மிகுந்த பொதுத்தொண்டு**
**நீதிகள் அறிந்த பெருநெஞ்சம்**
**மிகவும் மலர்ந்து சிரித்த முகம்**
**யாவையும் இருந்தும் கொன்றுவிட்டார்**
**யாதும் அறியா மந்தையிலே**
**பூமியில் வந்தது பிழையென்றே**
**புதியவன் திரும்பிப் போய்விட்டான்'**

பல கவிதைத் தொகுப்புகளின் ஆசிரியராகக் கற்பனையில் நடமாடும் நவநீத கவி, ஒரே ஒரு நாவலில் மட்டும் நேரிடைப் பாத்திரமாக அறிமுகம் செய்யப்படுகிறார். பொன்விலங்கு நாயகனான சத்தியமூர்த்தி, நவநீதகவியின் சொற்பொழிவை நேரில் கேட்பதாகவும் அதன் மூலம் மனஎழுச்சி பெறுவதாகவும் ஆசிரியர் படைத்துச் செல்கிறார்.

நா.பா. தமது நாவல்களிடையே எழுதிய கவிதைகளில் ஒருசில, அவரது வாசகர்களால் இன்றும்கூட நினைவு கூரப்படுகின்றன. அப்படி நினைக்கப்படுகிற கவிதைகளில் குறிஞ்சிமலர் நாயகனான அரவிந்தன், தன் காதலி பூரணியைப் பற்றி எழுதிய இரு கவிதைகள் புகழ்பெற்றவை.

1. **நிலவைப் பிடித்துச் சிறு**
   **கறைகள் துடைத்துக் குறு**
   **முறுவல் பதித்த முகம்**

நினைவைப் பதித்து மன
அலைகள் நிறைத்துச் சிறு
நளினம் தெளித்த விழி...

தரளம் மிடைந்து - ஒளி
தவழக் குடைந்து - இரு
பவழம் பதித்த இதழ்

முகிலைப் பிடித்துச் சிறு
நெளியைக் கடைந்து - இரு
செவியில் திரிந்த குழல்

அமுதம் கடைந்து சுவை
அளவிற் கலந்து மதன்
நுகரப் படைத்த எழில்

குடையைப் பிடித்த கரம் - மனக்
கொதிப்பைச் சுமந்தமுகம் - பெரும்
பசியில் தளர்ந்த நடை...

2. பொன்காட்டும் நிறம் காட்டிப்
பூக்காட்டும் விழிகாட்டிப்
பண்காட்டும் மொழிகாட்டிப்
பையவே நடைகாட்டி
மின்காட்டும் இடைகாட்டி
முகில் காட்டும் குழல்காட்டி
நன்பாட்டுப் பொருள்நயம்போல்
நகைக்கின்றாய் நகைக்கின்றாய்
பண்பாட்டுப் பெருமையெல்லாம்
பயன்காட்டி நகைக்கின்றாய்

நவநீதிகவி என்ற ஆண்கவியைப் படைக்கிற நா.பா., அரவிந்தன் உள்படப் பல ஆண் பாத்திரங்களைக் கவிதை எழுதுபவர்களாகப் படைக்கிற நா.பா. ஒரே ஒரு பெண் கவியையும் படைத்துக் காட்டுகிறார். கோபுரதீபம் நாவலில் வரும் சுசீலாதான் அவள். பால்ய விதவையான அவள்

‘நெஞ்சமெனும் மலரைத் திறந்து - உயிர்
நேசமெனும் வாசம் நுகர்ந்து
கொஞ்சி வரும் வேளையினில் - ஒரு
குளவியிருந்து கொட்டிவிட்டால்...!

என்று சொற்களாகிய நரம்புகளை மீட்டி, எல்லையற்ற சோகப்பண் ஒன்றைப் பாடுவதாக ஆசிரியர் எழுதிச் செல்கிறார்.

புதுக்கவிதையின் தொடக்க காலத்தில் நா.பா. அதை ஏற்றதில்லை. நா.பா., கண்ணதாசன், கவிஞர் கே.சி.எஸ்.அருணாசலம் உள்படப் பலர் புதுக்கவிதையை எதிர்த்து வந்தனர். கண்ணதாசன் தமது **ஞானமாலிகா, புஷ்பமாலிகா** ஆகிய நூல்களைப் புதுக்கவிதை நூல்கள் என்று மற்றவர்கள் சொன்னபோது மறுத்தார். அவை அழகிய வசனங்களை உள்ளடக்கிய நூல்களே என்றார். கே.சி.எஸ். அருணாசலம் மரபுக் கவிதைதான் கவிதை என்றும் புதுக்கவிதை வெறும் பம்மாத்து என்றும் இறக்கும் வரை புதுக்கவிதைகளை மேடைகளில் விமர்சித்துக் கொண்டிருந்தார். இவர்களைப் போலவே எண்ணம் கொண்டிருந்த நா.பா. ஆரம்பகாலங்களில் புதுக்கவிதையை மேடைகளில் கிண்டல் செய்தார். 'ஒன்சைட் பேப்பர், அஞ்சலட்டை' இவற்றில் ஏதாவதொன்று கிடைத்துவிட்டால் போதும், புதுக்கவிதை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். எனவே இவ் விரண்டையும் தடை செய்ய வேண்டும்' என்று அவர் கேலி செய்தது உண்டு. ஆனால் போகப் போக நா.பா.வின் கருத்தோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது. மரபுக் கவிதை போலவே புதுக்கவிதையும் இலக்கியத்தின் தனியொரு துறை என்று அங்கீகரிக்கத் தொடங்கினார். தமது இதழான தீபத்தில் புதுக் கவிதைகளுக்கு நிறைய இடம் கொடுக்கத் தொடங்கினார். 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி' என்ற மு.மேத்தாவின் புகழ்பெற்ற புதுக்கவிதை உள்படப் பல கவிதைகள் தீபத்தில் பிரசுரமாயின.

புதுக்கவிதைகளுக்கு நா.பா. தமது தீபம் இதழில் இடம் கொடுக்க ஆரம்பித்த புதிதில் ஓர் அன்பர் தீபம் கேள்வி-பதில் பகுதிக்கு ஒரு கேள்வி அனுப்பியிருந்தார். 'கையாலாகாதவர்களின் பெருக்கம் தானே புதுக்கவிதையின் வருகை?' என்பதுதான் அந்தக் கேள்வி. அதற்கு நா.பா. சொன்ன பதில் புதுக் கவிதை பற்றிய அவரது தெளிவான கண்ணோட்டத்தைப் புலப்படுத்தியது.

'கேள்வியையே ஒரு பாரபட்சத்தோடுதான் கேட்டிருக்கிறீர்கள். தானே ஒரு முடிவு செய்து கொண்டு அப்புறம் ஒப்புக்காகக் கேட்கப் படும் கேள்விகளை நாங்கள் எப்படி மதிக்க முடியும்? புதுக்கவிதைகள் மூலம் சாதனைகளும் உண்டு என்பதை ஒப்புக் கொண்டு, 'அதில் சில கையாலாகாதவர்களும் இருக்கிறாற்போல் தெரிகிறதே' என்பதாக நீங்கள் கேட்டிருந்தால் கேள்வி பாரபட்சமில்லாததாக இருந்திருக்கும்'

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல, தமது **நிசப்த சங்கீதம்**

என்ற நாவலில், அதன் கதாநாயகன் முத்துராமலிங்கம், கவி யரங்கத்தில் ஒரு புதுக்கவிதை பாடுவதாகச் சொல்லி நா.பா.வே **எங்கள் இந்தியா** என்ற தலைப்பில் ஒரு புதுக்கவிதையும் எழுதினார். புதுக்கவிதையின் எதிரியாக இருந்த அவர். புதுக்கவிதையைச் சகித்துக் கொள்பவராக மாறி, பின்னாட்களில் புதுக்கவிதையின் தீவிர ஆதரவாளராகவும் செயல்பட்டார்.

உயர்ந்த கவிதை மனம் படைத்த நா.பா. என்ற கவிஞர், கவிதைகளை அதிகம் எழுதாமல் சிறுகதைகளையும் நாவல்களையும் நிறைய எழுதினார். அவ்விரு துறைகளிலும் வெற்றி பெறவும் செய்தார். அவைகளில் தமது கவிமனத்தை அடையாளம் காட்டினார். ஆனால் கவிமனம் கொண்ட அந்த எழுத்தாளரால் கவிதைத் துறையில் வெற்றி பெற இயலாமல் போயிற்று. அந்த ஏக்கம் அவருக்குக் கடைசி வரையிலும் இருந்தது.

# 9
# சிறுகதைகள், நாடகங்கள்

## சிறுகதைகள்

**சி**றுகதைத் துறையில் மேலான சாதனைகளைச் செய்த முன்னோடி எழுத்தாளர்கள் வரிசையில், நா.பா.வுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. சிந்தனைக் கிளர்ச்சி ஏற்படுத்தக்கூடியதும், உணர்வில் தோய்ந்து எழுதப்பட்டதுமான அவரது சிறுகதைகள் படிப்பவர் மனத்தை உயர்ந்த தளங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய ஆற்றல் பெற்றவை. உரைநடைக் கவிதைகள் என்றே சொல்லத்தக்க அளவு மொழிநலமும் உவமை அழகுகளும் நிரம்பப் பெற்றவை. சுகமும் சௌந்தர்யமும் நிறைந்த பல நளினமான கற்பனைகளை அவரது சிறுகதைகளில் நெடுகக் காணலாம்.

**வலம்புரிச் சங்கு** உள்பட, நெஞ்சில் நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடிய ஏராளமான சிறுகதைகளை அவர் படைத்திருக்கிறார். இனிய தொடக்கம், வாசகனைக் கீழே வைக்கச் செய்யாமல் படிக்க வைக்கும் விறுவிறுப்பு, சமூக உணர்வுடன் கூடிய ஏதேனும் ஒரு செய்தி, அறச்சீற்றம், அரசியல் அங்கதம் என அவரது சிறுகதைகளின் வெற்றிக்குரிய காரணங்களாகப் பலவற்றைச் சொல்லலாம். சமகால நடப்பை அதிகம் கதையாக்க அவர் முயன்றதும் கூட, அவரது சிறுகதை வெற்றிக்கான முக்கியமான காரணமாய் இருக்கக்கூடும்.

மொத்தம் பதினைந்து சமூகச் சிறுகதைத் தொகுதிகளும் இரண்டு சரித்திரச் சிறுகதைத் தொகுதிகளும் அவரது படைப்பாக வெளி வந்துள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட மணிமணியான சிறுகதைகளைப் படைத்த பெருமை அவருக்குண்டு. தமது பழந்தமிழ் அறிவைப் புலப்படுத்தும் வகையில், **'புறநானூற்றுச் சிறுகதைகள், தமிழ் இலக்கியக் கதைகள்'** என்ற இரு நூல்களையும் கூடப் படைத்துள்ளார்.

பட்டுக் கத்திரித்தாற்போலத் தமது எல்லாக் கதைகளையும் கச்சிதமாக முடித்திருக்கிறார் என்று சொல்ல இயலாது. பல கதைகள் கறாரான முடிவோடு வடிவ அழகோடு தென்பட்டாலும் சில கதைகள் முடிந்தபின்னும் சற்று வளர்த்தப்படுவதையும் பார்க்கிறோம். கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் படைப்பாளியாதலால், தாம்

சொல்ல வந்த கருத்து குழப்பமில்லாமல் வாசகனைச் சென்று சேர வேண்டுமே என்ற தவிப்பே, சில கதைகள் முடிந்தும் வளர்வதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

நாவல்களில் அவர் கையாளும் பாடுபொருள்களெல்லாம் சிறுகதைகளிலும் கையாளப்படுகின்றன. தேசியச் சிந்தனை, காந்திய உணர்வுகள், சுயமரியாதை, சிறுமை கண்டு பொங்குதல், அரசியல் சூழ்ச்சி, காதல் என்றிப்படிப் பற்பல களங்களில் அவரது சிறுகதைகள் நடக்கின்றன. மனத்தின் மெல்லிய உணர்வலைகளை மீட்டி ரீங்கரிக்கச் செய்யும் லாகவம், அவரது இனிய தமிழ்நடையின் இயல்பு. அவரது சிறுகதைகள் பலவும், நெஞ்சில் பூப்பூத்தாற்போல் சுகந்த நினைவுகளை மலரச் செய்து, கமகமவென இலக்கிய நறுமணத்தைப் பரப்பிக் கொண்டே இருக்கின்றன.

பொறாமை, வெறுப்பு, விரக்தி, கோபம் போன்ற எதிர்மறை உணர்வுகளுக்கு அவர் அழுத்தம் கொடுப்பதில்லை. அத்தகைய உணர்வுகளை முன்னிலைப்படுத்தி அவர் கதையெழுதுவதும் இல்லை. பெருந்தன்மை, நேசம், நம்பிக்கை, சாந்தம், எதிர்பார்ப்பு, வீரம் போன்ற உயர்ந்த உடன்பாட்டு உணர்வுகளையே அவர் இலக்கியமாக்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நாடகங்கள்**

தற்கால இலக்கியவாதிகளில் சிறுகதை, கவிதை, நாவல் ஆகிய துறைகளில் ஈடுபட்டவர்களே அதிகம். நாடகத் துறையில் கவனம் செலுத்தி, அந்தத் துறையில் சாதித்தவர்கள் மிகக் குறைவு. **வடிவேலு வாத்தியார், நாலுவேலி நிலம்** ஆகிய நாடகங்களை தி.ஜானகிராமன் எழுதினார். **தேரோட்டி மகன்** என்ற தலைப்பில் மகாபாரதத்தில் உள்ள கர்ணன் கதையைப் புதிய நோக்கில் கண்டு பி.எஸ். ராமையா எழுதினார். இப்படி அங்குமிங்குமாக ஓரிருவர் நாடகங்களை எழுத முயன்றிருக்கிறார்களே அன்றி நாடகத்திற்கு என்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் குறைவு.

இந்திரா பார்த்தசாரதி போன்ற மிகச் சிலரே நாடகத் துறையிலும் கால் பதித்துச் சாதனை புரிந்தவர்கள்.

நாடகக் கலையில் நா.பா.வுக்கு மரியாதை இருந்தாலும், நாடகக் கலைஞர்களைத் தம் நாவல்களில் பாத்திரங்களாக அவர் உலவ விட்டாலும், அவர் அதிகம் நாடகம் எழுதவில்லை. தமது நீண்ட இலக்கிய வாழ்க்கையில் அவர் படைத்தது மூன்றே மூன்று நாடகங்கள்தான். **புத்த ஞாயிறு, கோதையின் காதல், வழித்துணை**

என்ற அந்த மூன்று நாடகங்களும் சிறந்த கருத்துகளை வலியுறுத்தும் நல்ல நாடகங்கள்தான் என்றாலும், நாடகத் துறையில் முத்திரை பதிக்கும் சாதனைப் படைப்புகள் அல்ல.

**புத்த ஞாயிறு** வரலாற்றுக் காலத்தில் நடந்ததாகப் புனையப் பட்டது. பூம்புகார் நகரத்தில் நடப்பதாக எழுதப்பட்ட நாடகம் அது. இந்திர விகாரம், நாளங்காடி, சக்கரவாளக் கோட்டம், நகரச் சதுக்கம் ஆகிய இடங்களில் நாடகக் காட்சிகள் நடைபெறுகின்றன. புத்த பிட்சுக்கள், ஒரு கணிகை, உலகியல் பேசும் இளைஞன், காபாலிகள் என இதன் பாத்திரங்கள் வித்தியாசமானவர்கள். புத்த மதத்தினருக்கு முக்கியமானதாகக் கருதப்படும் மணிபல்லவ யாத்திரையும் கோமுகி நதியின் தரிசனமும் தேவையில்லை என்றும் இதயத்தில் சுரக்கும் கருணையையே இறைவன் எதிர்பார்க்கிறான் என்றும் இன்னும் இதுபோன்ற பல உயர்ந்த கருத்துகளையும் இந்நாடகம் வலியுறுத்து கிறது. மூத்த பிட்சு, இளம் பிட்சு ஆகிய பாத்திரங்கள் அழுத்தமாகப் படைக்கப்பட்டுள்ளன. இளம் பிட்சுவின் மனமாற்றம் நயமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

**கோதையின் காதல்** பாளையக் குறுநில மன்னர்கள் காலத்தைச் சார்ந்த கதை. அரண்மனை, சத்திரம், சுனையடி, மலைச்சாரல், நந்தவனம் போன்ற பல இடங்களில் நாடகம் நடக்கிறது. இளவரசி மோகனவல்லியின் காதலை நிராகரித்து, கழைக்கூத்தாடி கோதையின் காதலை ஏற்றுத் துன்பத்திற்கு ஆளாகும் கவிஞன் மணவாளனின் தூய காதல் காவியம் இது.

**வழித்துணை** நாடகம், மணிமாலை இதழ் ஆசிரியரும் பார்வையற்றவருமான குமாரகவி என்ற கவிஞரை நாடக நாயகராகக் கொண்டது. அவருக்கு வழித்துணையாகவும் வாழ்க்கைத் துணை யாகவும் அமைந்த சுகுணாவின் மனப்போராட்டத்தை விவரிப்பது.

தற்கால இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் எழுதிப் பார்த்திருக்கும் நா.பா., நாடகத் துறையிலும் கூட முயற்சி செய்திருக்கிறார் என்ற பெருமையை இந்த மூன்று நாடகங்களும் அவருக்கு வழங்குகின்றன.

# 10
# பயண இலக்கியம்

பயண இலக்கியம் ஒரு தனித் துறையாகச் செழித்திருக்கிறது. உலகெங்கும் பயணம் செல்வதும், தாம் பயணம் செய்த இடங்களைப் பற்றிக் குறிப்புகள் எழுதுவதும் யுவான்சுவாங், மெகஸ்தனிஸ் காலத்திலிருந்து இருந்து வந்திருக்கிறது. காளிதாசனுடைய மேக சந்தேசம் போன்ற நூல்கள், பழந்தமிழ் இலக்கியத்திலுள்ள ஆற்றுப் படை நூல்கள் இவையெல்லாம் கூடப் பயண இலக்கியக் கூறுகளைக் கொண்டு திகழ்கின்றன.

தற்காலத் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை பயண இலக்கிய முன்னோடி என்று ஏ.கே. செட்டியாரைக் குறிப்பிடலாம். உலகம் சுற்றிய அவர், ஆங்காங்கே தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் மிக சுவாரஸ்யமான கட்டுரைகளாகப் பதிவு செய்து வைத்துள்ளார். **உலகம் சுற்றிய தமிழன்** என்ற அவர் நூல் பயண இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பான நூல். மீ.ப.சோமு, சோமலெ, அ.மு. பரமசிவானந்தம், சி.சுப்பிரமணியம், நெ.து. சுந்தரவடிவேலு, மணியன், சாவி, சிவசங்கரி எனப் பயண இலக்கியத் துறைக்கு வளம் சேர்த்த எழுத்தாளர்கள் தமிழில் இன்னும் பலர். இவர்களில் தீபம் நா.பார்த்தசாரதிக்கு ஒரு த்னி இடம் உண்டு.

தீபம் ஆசிரியர் என்ற வகையில் நா.பா. வெளிநாடுகளுக்கு அதிகம் சென்று வந்தார். **குறிஞ்சி மலர், பொன்விலங்கு** ஆகிய நாவல்களின் ஆசிரியர் என்ற முறையில் வெளிதேசங்களில் வாழும் தமிழ் மக்களிடையே நா.பா. வின் பெயர் நன்கு அறிமுகமாகி யிருந்தது. தீபத்திற்கு அயல்நாடுகளிலும் பல சந்தாதாரர்கள் இருந்தார்கள். இதெல்லாம் நா.பா.வின் வெளிநாட்டுப் பயணத்திற்கு வழிகோலின.

1967 ஏப்ரலில் நா.பா. மலேசியாவுக்குச் சென்றார். அங்கு நடைபெற்ற பற்பல இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார். அவரது வெற்றிகரமான மலேசியப் பயணத்தை விளக்கி 'மலேசியாவில் தீபம் ஆசிரியர்' என்ற தலைப்பில் சா.ஆ.அன்பானந்தன் என்ற மலேசிய எழுத்தாளர் தீபத்திலேயே ஒரு கட்டுரை எழுதினார்.

பிறகு 1976ஆம் ஆண்டு நா.பா. சோவியத் ரஷ்யா, போலந்து ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். பாரத அரசாங்கத்தின் கலாசாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் ஒன்றரை மாதங்கள் அங்கே பிரயாணம் செய்தார். அதன் பிறகு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ரோம், எகிப்து, குவைத் ஆகிய நாடுகளுக்குப் பிரயாணம் மேற்கொண்டார்.

சென்னை திரும்பியதும் தம் பயண அனுபவங்களை தீபத்தில் எழுதலானார். மிகச் சில இதழ்களுக்கு மேல் தீபத்தில் அது இடம் பெறவில்லை. அயல்நாட்டுப் பயணக் கட்டுரைகள் பிறகு தொடராக கல்கி இதழில் இடம் பெற்றன.

நா.பா.வின் பயணக் கடடுரைகள் தொகுக்கப்பட்டு இரண்டு நூல்களாக வெளிவந்துள்ளன.

**புது உலகம் கண்டேன்** என்ற நூல் கிழக்கு-மேற்கு ஐரோப்பிய-மத்தியக் கிழக்கு நாடுகளைப் பற்றிய கட்டுரைகள் அடங்கிய நூல்.

சோவியத் யூனியன், போலந்து முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தொடங்கி இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய மேற்கு ஐரோப்பிய நாடுகள் வரை பல நாடுகள் பற்றிய பல விவரங்கள் இந்த நூலில் உண்டு.

‘பிரயாணக் கட்டுரைகள் என்பவை தமிழ்ப் பத்திரிகைகளில் எப்படி மாமூலாகிப் போயிருக்கின்றனவோ அந்த மாமூல் பாணியில் எழுதப்படாமல் புதிய கோணத்தில் கல்வி மதிப்பீடும் தகவல் வளமும் நிறைந்ததாக எழுதப்படவேண்டும் என்ற திடமான நோக்குடனே எழுதப்பட்டவை இக்கட்டுரைகள்’. என்று நா.பா. இக்கட்டுரைகளின் தன்மை குறித்து நூல் முன்னுரையில் தெரிவிக்கிறார்.

‘பல கட்டுரைகளில் கட்டுப்பாடுகள் நிறைந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும், அளவற்ற சுதந்திரம் நிறைந்த /மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் ஒப்புநோக்கி எழுதியுள்ளேன். அந்த ஒப்புநோக்கில் கட்டுப்பாடுகள் போற்றப்படும் இடங்கள் எவை எவை என்பதை வாசகர்கள் படித்துப் புரிந்து நிர்ணயித்துக் கொள்ள முடியும். சுதந்திரத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் உள்ள வேறுபாடும் புதிய நோக்கில் கூறப்பட்டிருக்கிறது’ என்று இந்நூலின் நோக்கத்தை விவரிக்கிறார் நா.பா.

மற்றொரு பயண நூல் **ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்** என்ற நூல். மேற்கு ஜெர்மனி அரசின் அழைப்பின் பேரில் நா.பா. செய்த பிரயாணத்தைப் பற்றியது, இந்நூல். ‘பாரதி வாழ்த்தும் புதிய

பெல்ஜியம், பாரீஸ் பக்கத்தில் பரமஹம்சர் ஆசிரமம்' போன்ற பகுதிகள் நா.பா.வின் இலக்கிய, ஆன்மிக நாட்டங்களை விளக்கும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலரைத் தலைப்பாக வைத்து நாவல் எழுதிய நா.பா., குறிஞ்சிமலரைக் கண்டு மகிழவும் ஒரு பயணம் மேற்கொண்டார். 1969 செப்டம்பரில் குறிஞ்சி மலரைக் காணவென்றே அவர் கொடைக்கானல் போனார். குறிஞ்சி மலர்கள் பூத்துள்ள இடத்தைக் கண்டுபிடிப்பது அவருக்கு சிரமமாகவே இருந்தது. ஞாபகச் சின்னமாகச் சில குறிஞ்சி மலர்களைப் பறித்தே தீர்வது என்று முடிவெடுத்து அலைந்தார். இறுதியில் வெற்றியும் கண்டார். தான் அடைந்த அனுபவங்களை 'குறிஞ்சி மலர்ந்திருக்கிறது' என்ற தலைப்பில் தீபத்தில் கட்டுரையாக எழுதினார். அவரது பயணக் கட்டுரைகளில் மிகச் சிறந்தது என்று அதையே குறிப்பிடவேண்டும். நா.பா. பறித்துவந்த குறிஞ்சிமலர்கள் தீபம் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

உணவு விடுதிகளைப் பற்றியே பேசும் பயணக் கட்டுரைகள் தமிழில் உண்டு. சிவப்பு விளக்கு விடுதிகளைப் பற்றிப் பேசும் பயண விவரிப்புகளும் உண்டு. நா.பா. இவற்றிலிருந்தெல்லாம் முற்றிலும் மாறுபட்டு, சிந்தனைக் கிளர்ச்சியூட்டும் தகவல்களை உள்ளடக்கிய தாகத் தம் பயணக் கட்டுரைகளை அமைத்தார். அதுவே அவர் படைத்த பயண இலக்கியத்தின் சிறப்பு.

# 11
# கட்டுரைகள்

நாவல், சிறுகதை ஆகிய துறைகளில் சாதனை படைத்த நா.பா., கட்டுரைத் துறையிலும் கணிசமான அளவு சாதனை புரிந்திருக்கிறார். பயண இலக்கியமாக வந்த இரு கட்டுரைத் தொகுதிகள் தவிர, ஒன்பது கட்டுரை நூல்கள் நா.பா.வின் கொடையாகத் தமிழுக்குக் கிடைத்துள்ளன.

அரசியல், சமூக உணர்வு, இலக்கணம், இலக்கியம் ஆகியன அவர் கட்டுரை எழுதத் தேர்ந்தெடுத்த துறைகள். தமக்குத் தெளிவும் நம்பிக்கையும் உடைய விஷயங்கள் குறித்தே அவர் எழுதினார். அரைகுறையாகத் தெரிந்ததைப் பற்றி முழுவதும் தெரிந்தது போல் கட்டுரை எழுதியவர் அல்ல அவர். தமக்குத் தெரியாத, அதிகம் பரிச்சயப்படாத விஷயங்கள் குறித்து ஒருபோதும் அவர் எழுதியதே இல்லை.

எந்தக் கட்டுரை எழுதினாலும் அவரது கட்டுரைக்கென்று சில இயல்புகள் உண்டு. முக்கியமாக அதன் வடிவம். சிறுகதை எழுதிப் பழகியவராதலால் கட்டுரையையும் கூடச் சிறுகதையைப் போலவே வடிவ ஒழுங்குடன் அவர் அமைத்தார். சுவாரஸ்யமான ஒரு தொடக்கம், பிறகு விவரிப்பு, இறுதியாகக் கருத்தை ஆதாரத்தோடு நிறுவும் முடிவு என அவரது கட்டுரைகள் செறிவாக அமைந்திருந்தன.

ஆங்காங்கே பொருத்தமான உவமைகளைச் சொல்லி, இனிய நடையில் எல்லோருக்கும் தெளிவாகப் புரிகிற மாதிரி அவர் எழுதினார்.

''மனித குலம் இறைவனுக்கு இட்ட பெயர்கள் பல. எடுத்த கோவில்களும் கணக்கில. ஆனால் இப்பெயர்களில் அல்லது கோவில்களில் எதையும் அவன் வெறுத்து ஒதுக்குவதில்லை. எந்த இடத்திலும் விருப்பமுடனேதான் அவன் இருக்கிறான். பளிங்கு மண்டபத்தில் நடக்கின்ற அதே இறைவனுடைய திருக்கால்கள் பருக்கைக் கற்கள் நிறைந்த வழியிலும் நடக்கின்றன. இரண்டு கையிலும் தங்கக் கடகமிட்டு, பட்டுடையணிந்து கூப்புங் கைகளிலும் சரி, அரைமுழத்துண்டு கட்டிக் கொண்டு வெறுங்கையோடு கூப்புங் கைகளிலும் சரி. அவ்வன்பர்களுடைய தாழ்ந்த பணிவான

வணக்கத்திற்குள் சிக்கக் கூடியவன் இறைவன். மனிதருக்கெல்லாம் முதல்வனாக ஆளுபவனும் அவன். மனிதரெல்லாம் ஏவும் ஏவலாளனாகவும், அவர் ஏவாமல் தானே முற்றும் அறிந்து இயற்றுபவனாகவும் விளங்குகிறவனும் அவன்''.

இது சங்கத் தமிழ் நூல்களில் ஒன்றான பரிபாடலின் ஒரு பாட்டைப் பற்றி அவர் எழுதிய விளக்கக் கட்டுரையின் ஒரு பகுதி. தெளிந்த கம்பீரமான நடையும் விறுவிறுவென்று வேகமாக ஓடும் ஓட்டமும் அவரது கட்டுரைகளை வாசிக்கத் தூண்டின.

இலக்கியக் கட்டுரைகளில் இலக்கிய விளக்கமாக அவர் எழுதிய அறிமுகக் கட்டுரைகளும் உண்டு; இலக்கிய ஆய்வாக அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் உண்டு.

**கலித்தொகை, பரிபாடல்** காட்சிகளை விளக்கி அவர் எழுதியவற்றை இலக்கிய மாணவர்களுக்கான அறிமுகக் கட்டுரைகளாகக் கொள்ளலாம். **கலிங்கத்துப் பரணியில்** பாலை நிலவெம்மை, அரங்கேற்று காதையால் அறியப்படும் செய்திகள்' போன்ற கட்டுரைகளை தமிழாராய்ச்சி மாணவர்களுக்காக அவர் எழுதியதாகக் கொள்ளலாம்.

உண்மையில், ஆய்வு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் அவர் ஏராளமான ஆய்வுகளைச் செய்து கொண்டேதான் இருந்தார். கடைசி வரை, பழந்தமிழ் இலக்கியத்தில் பற்று மிகுந்த ஓர் ஆய்வாளராகத் தான் வாழ்ந்தார். தாம் எழுதிய சரித்திர நாவல்களுக்காகவும் அவர் நிறைய ஆய்வுகள் நிகழ்த்த வேண்டியிருந்தது.

அவரது தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளில் புகழ்பெற்றது **பழந்தமிழர் கட்டிடக் கலையும் நகரமைப்பும்** என்பது.

'தொன்மையான கிரேக்கக் கட்டிடக் கலைக்குச் சிறிதும் குறையாத கட்டிடக் கலை தமிழர் கட்டிடக் கலை என்றும் உலகின் புகழ் பெற்ற நகரமைப்பு நயங்களுக்கு ஒரு சிறிதும் குன்றாத நகரமைப்புக் கலைகளில் தமிழருடையதும் ஒன்றென்றும் உய்த்துணர வழியிருக்கிறது' என்று தம் கட்டுரையின் இறுதியில் நிறுவுகிறார் அவர்.

பிஎச்.டி. ஆய்வேட்டிற்குப் பதிவு செய்து கொண்டபோது, இந்தக் கட்டுரையின் தலைப்பையே அவர் பதிவு செய்துகொண்டார். இதே தலைப்பில், மேலும் ஆய்வு செய்து ஆயிரம் பக்கங்கள் வரக் கூடிய ஓர் ஆராய்ச்சி நூலை எழுதினார். அந்த ஆய்வேட்டை மகிழ்ச்சி யுடனும் மன நிறைவுடனும் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்தார். ஆனால் டாக்டர் பட்டம் கிடைப்பதற்குள் அவர் காலமாக

நேர்ந்துவிட்டது. சில ஆண்டுகள் சென்றபின், அந்த மாபெரும் ஆய்வு நூல் சுருக்கப்பட்டு, **பழந்தமிழர் கட்டடக்கலையும் நகரமைப்பும்** என்ற தலைப்பிலேயே நூலாக வெளி வந்தது.

அவரது இலக்கிய விளக்கக் கட்டுரைகள் அறிமுக அளவிலும் ஆய்வுஅளவிலும் என இரண்டு தன்மை கொண்ட கட்டுரைகளாக பயில்வார் தகுதிக்கு ஏற்றபடி அமைந்து பயன் தந்து வருகின்றன.

இலக்கியக் கட்டுரைகளைப் போலவே இலக்கணக் கட்டுரைகளையும் அவர் நிறைய எழுதியிருக்கிறார். **தொல்காப்பியம், நன்னூல், தண்டியலங்காரம்** போன்ற பழைய இலக்கண நூல்களையெல்லாம் கசடறக் கற்ற பண்டிதர் அவர்.

அவரது **சொல்லின் செல்வம், மொழியின் வழியே** போன்ற நூல்கள் இலக்கண விளக்க நூல்களே. டாக்டர் தி.முத்துக் கண்ணப்பர் போன்ற பெரும் இலக்கணப் புலவர்கள் எல்லாம் நா.பா.வின் இலக்கண நூல்களைப் பாராட்டுகிறார்கள் என்பதும் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன் நா.பா.வின் இலக்கண ஆற்றல் மேல் நம்பிக்கை வைத்திருந்தார் என்பதும் இங்கு கருதத்தக்கது.

எழுத்தாளர் எஸ்.வெங்கட்ராமன் எழுதிய **பிராயணம்** என்ற குறுநாவலில் 'ஒருத்தி' என்ற சொல்லை 'ஒருவள்' எனக் குறிப்பிட்டு எழுதிவிட்டார். 'ஒருவள்' என்று தமிழில் சொல் கிடையாது. ஒருவன் என்ற சொல்லுக்குப் பெண்பால் ஒருத்திதானே தவிர ஒருவள் அல்ல. இதை நா.பா. குறிப்பிட்டதும், எஸ்.வெங்கட்ராமன் தமக்கு இலக்கணம் தெரியாததை ஒப்புக் கொண்டு புத்தகத்தின் அடுத்த பதிப்பில் அந்தப் பிழையைச் சரிசெய்துவிட்டார். சக எழுத்தாளர்கள் நா.பா.வின் இலக்கணப் புலமையை மதிப்பதும் போற்றுவதும் சந்தேகம் கேட்பதும் வழக்கமாக இருந்தன.

இலக்கியம், இலக்கணம் தவிர நா.பா. அரசியல் சார்ந்தும் பல கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தார். பெரும்பாலும் அரசியல் கட்டுரைகளை எழுதும்போது 'தீரன்' என்ற பெயரைப் பயன்படுத்தினார். கல்கி, கணையாழி போன்ற பத்திரிகைகளில் இந்தக் கட்டுரைகள் சமகால அரசியல் நிகழ்வுகளின் விமர்சனமாகச் சுடச்சுட வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றன. அவ்வப்போதைய அரசியல் விமர்சனமாக இவை அமைந்ததால், பிறகு இவை தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளியிடப்படும் வாய்ப்பைப் பெறவில்லை.

இலக்கியம், இலக்கணம், அரசியல் இவை தவிர, பொதுவான பல கட்டுரைகளையும் நா.பா. எழுதினார். சமூக உணர்வுடன் கூடிய

அக்கட்டுரைகள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து உரக்கச் சிந்திப்பவை. வாசகர்களிடம் மனத்தெளிவை ஏற்படுத்தக் கூடிய வலிமை பெற்றவை. 'கடற்கரை நினைவுகள், சிந்தனை மேடை, சிந்தனை வளம்' போன்ற பல்வேறு தலைப்புகளில் தொகுக்கப்பட்டு அவை புத்தகமாகவும் வெளிவந்துள்ளன. நா.பா. தமது கடைசிக் காலங்களில், துக்ளக் இதழில் தொடர்ந்து சிந்தனைக் கட்டுரைகளை ஒவ்வோர் இதழிலும் எழுதி வந்தார். அவை வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. கட்டுரையாளர் என்ற வகையிலும் நா.பா.வுக்குத் தமிழ் இலக்கியத்தில் ஒரு நிரந்தர இடம் உண்டு.

# 12
# நா.பா. என்னும் பேச்சாளர்

எழுத்துத் துறை, பேச்சுத் துறை ஆகிய இரண்டிலும் ஈடுபட்டு வெற்றி பெற்ற எழுத்தாளர்கள் தமிழில் மிகக் குறைவு. சிறப்பாக எழுதுபவர்கள் பலரால் சிறப்பாக மேடையில் பேச முடிவதில்லை. பேச்சாளர்கள் பலரால் எழுத்துத் துறையில் சோபிக்க இயலுவதில்லை. இவ்விரு துறைகளிலும் ஒருசேரத் தடம் பதிப்பவர்கள் உலக அளவில் கூட மிகக் குறைவுதான்.

அந்த மிகக் குறைவானவர்களில் ஒருவர் என்று தீபம் நா. பார்த்தசாரதியைச் சொல்லவேண்டும். அவர் எழுத்தில் எவ்வளவு மாபெரும் சாதனையாளரோ அதற்கு இணையாகப் பேச்சிலும் அதேயளவு சாதனையாளர். அண்மைக் காலச் சொற்பொழிவுச் சாதனையாளர்களில் கி.வா. ஜகந்நாதன், ம.பொ.சி, குன்றக்குடி அடிகளார் போன்றோர் வரிசையில் குறிப்பிடப்படவேண்டிய இன்னொரு பெயர் நா.பா. வுடையது.

அவர் இலக்கியம், அரசியல் ஆகிய இரு மேடைகளிலும் பேச்சாளராய் இயங்கிக் கொண்டிருந்தார். கி.வா.ஜ.வைப் போல் சமய மேடைகளில் அவர் அதிகம் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்திய தில்லை. ஆனாலும் 'கண்ணன் பெருமை' போன்ற தலைப்புகளில் அவர் சமயம் சார்ந்த சொற்பொழிவுகள் ஒன்றிரண்டு நிகழ்த்தியதுண்டு. காமராஜ் காலமான பிறகு தமக்கு அரசியலில் அலுப்பு வந்த காலங்களில், பின்னாட்களில் தாம் சமயச் சொற்பொழிவாளராக வாய்ப்பிருக்கிறது என்று அவர் தம் நண்பர்களிடம் கூறியதுண்டு. ஆனால் அதற்கு வாய்ப்பு நேர வழியில்லாமல் அவர் காலமாகிவிட்டார்.

இலக்கியச் சொற்பொழிவில் அவர் தொடாத துறையில்லை. பழைய இலக்கியம் குறித்து மணிக்கணக்கில் அவரால் பேச முடியும். நவீன இலக்கியம் குறித்தும் கேட்பார் வியக்கும்படி அவரால் உரையாற்ற முடியும். அரைமணி முதல் இரண்டே கால் மணிவரை அவர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதுண்டு. எழுதுவதைப் போலவே சொற்பொழிவு நிகழ்த்துவதையும் தம் வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கொண்டிருந்தார் அவர்.

காமராஜ் இருந்தவரை, அவருக்கு ஆதரவாக அரசியல் மேடைகளில் முழங்கிக் கொண்டிருந்தார். கண்ணதாசன், ஜெயகாந்தன்,சோ போன்றோரோடு நா.பா.வும் ஸ்தாபன காங்கிரஸின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் பேச்சாளராக அறியப்பட்டிருந்தார். அரசியல் மேடைகளில் காட்டமாக அவர் எதிர்க்கட்சியினரைத் தாக்கிப் பேசியதும் அதனால் அவர் தாக்குதலுக்கு ஆளானதும் போன்ற சந்தர்ப்பங்களும்கூட அவர் வாழ்வில் உண்டு.

காமராஜ் உள்படப் பல அரசியல் தலைவர்கள் அவரது பேச்சாற்றலை வெகுவாக மதித்தார்கள். நா.பா. என்ன சொல்கிறார் என்பதையும் அதை எப்படிச் சொல்கிறார் என்பதையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அரசியலை விவாதபூர்வமாக மேடைகளில் அலசி, தம் கட்சியை ஆணித்தரமாக நிறுவுகிற சாமர்த்தியம் நா.பா.வுக்கு இயல்பாய்க் கைவந்திருந்தது. அவரது அபாரமான பேச்சாற்றல் காரணமாக, அவருடைய சொற்பொழிவைக் கேட்க அதிக எண்ணிக்கையில் மக்கள் கூடினார்கள். எதிர்க்கட்சியினர் கூட நா.பா.வின் தமிழைக் கேட்பதற்காக வந்து கூடியதுண்டு. கடைசிப் பேச்சாளராக நா.பா.வைப் போடுவதும், அவரது பேச்சு முடியும்வரை கூட்டம் கலையாமல் இருப்பதும் வழக்கமாய் இருந்தது.

அரசியலுக்கு இணையாகவும் சில காலகட்டங்களில் அரசியலை விடக் கூடுதலாகவும் இலக்கியச் சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்திக் கொண்டிருந்தார். காமராஜ் காலமான பின், அரசியல் சொற்பொழிவுத் துறையை விட்டு மெல்ல மெல்ல அவரே விரும்பி விலகிக் கொண்டார். காமராஜுக்குப் பின்னான காலகட்டத்தில் எந்தக் கட்சியை ஆதரிப்பது, யாரைத் தலைவராக ஏற்பது என்பன குறித்த சிக்கல்கள் தமிழகத்தில் பல அறிவு ஜீவிகளுக்கு ஏற்பட்டன. அத்தகைய சிக்கல்களுக்கு நா.பா.வும் ஆட்பட்டார். வாழ்வின் இறுதிக் காலங்களில் அரசியலை விட்டு முற்றிலுமாக விலகி, முழுநேர இலக்கியவாதியாக மட்டுமே அவர் தம்மை அமைத்துக் கொண்டார்.

இதனால் கடும் பொருளாதார இழப்பை அவர் சந்திக்க நேர்ந்தது. அரசியல் மேடைகளில் பேசும்போது கிடைக்கும் அந்த அளவு அதிக ஊதியம், இலக்கிய மேடைகளில் கிடைக்க வாய்ப்பில்லை. கல்லூரி இலக்கிய மன்ற விழாக்கள் போன்ற ஒருசில இலக்கியக் கூட்டங்களில் மட்டுமே அவருக்கு ஊதியம் கிடைத்தது. பெரும்பாலான இலக்கியக் கூட்டங்களில், ஒரு தமிழ்த் தொண்டு போலவே கருதி, எந்த ஊதியமும் பெற்றுக் கொள்ளாமலேதான் அவர் பேச வேண்டியிருந்தது. எனினும் இலக்கியப் பேச்சுத் துறையில் தமக்கிருந்த

ஆர்வம் காரணமாகவே, அவர் தொடர்ந்து இலக்கியச் சொற்பொழிவாளராக இயங்கிக் கொண்டிருந்தார்.

நா.பா. ஒரு தலைசிறந்த வானொலிப் பேச்சாளர். வானொலி அடிக்கடி அவருக்கு வாய்ப்பு வழங்கிக் கொண்டிருந்தது. அவரும் உற்சாகமாகத் தமது இலக்கிய ஆற்றலை வானொலி மூலம் நேயர்களுக்கு நிரூபித்துக் கொண்டிருந்தார். நா.பா.வின் நண்பர்களான அகிலன், மீ.ப.சோமு போல நா.பா. வானொலியில் பணிபுரியவில்லையென்றாலும், அவரது பணியை வானொலி பயன்படுத்திக் கொண்டிருந்தது. பழைய இலக்கியம் குறித்தும் நவீன இலக்கியம் குறித்தும் நா.பா.வழங்கிய உயர்தர இலக்கிய உரைகள் வானொலியில் மீண்டும் மீண்டும் ஒலிபரப்பப்பட்டன.

ழ,ள,ல போன்ற எழுத்துகளையெல்லாம் சரிவர வேறுபடுத்தி ஒலிக்கும் வகையிலான திருத்தமான உச்சரிப்பு, சங்கீதம் போல் மனத்தை மயக்கும் அவரது இனிய தெள்ளத் தெளிந்த குரல்வளம், தவிர, தேனருவி போல் சிலுசிலுவென்று செவிகுளிரப் பாய்ந்து தங்குதடையின்றி ஓடிய அவரது சொல்லோட்டம் இவையெல்லாம் வானொலி நேயர்களிடையே அவர் பேச்சுக்கு மிகுந்த வரவேற்பைப் பெற்றுத் தந்தன.

சொற்பொழிவு நிகழ்ச்சிகளுக்காக என்றே வெளிநாடுகளுக்கும் அவர் சென்றுவந்தார். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் அவர் பேச்சுக்கு ஏராளமான ரசிகர்கள் இருந்தார்கள்.

இலக்கணம், இலக்கியம் இரண்டையும் கசடறக் கற்ற பண்டிதராக அவர் இருந்தது, அவரின் சொற்பொழிவுத் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. சங்கப் பாடல்கள், காப்பியங்கள், இடைக்கால இலக்கியங்கள் என எல்லாவற்றிலிருந்தும் உரிய இடத்தில் பொருத்தமான மேற்கோள்களை அநாயாசமாக அவரால் அள்ளி வீச முடிந்தது. ரசிகமணி டி.கே.சி.யின் மேல் அளவற்ற மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த நா.பா., தாமும் அவரைப் போலவே பழைய இலக்கியத்தின் பரம ரசிகராக இருந்தார். ரசிகராக இருந்ததோடு, தாம் ரசித்தவற்றை ரசிக்கும்படி எடுத்துச் சொல்லவும் அவரால் முடிந்தது என்பதுதான் விசேஷம்.

நா.பா.வின் மேடைப் பேச்சை ஒருமுறை கேட்டவர்கள், தங்களுக்குப் பிடித்த பாடகரின் சங்கீதக் கச்சேரியை மறுபடி மறுபடிக் கேட்பதுபோல் திரும்பத் திரும்ப அவர் பேச்சு நடக்கும் இடத்தைத் தேடிச் சென்று அதைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

மேடையில் ஆக்ரோஷமாக உரத்த குரலெடுத்து அவர் கத்தமாட்டார். ஆனால் சமச்சீரான குரலிலேயே ஆணித்தரமாகத் தம் அபிப்ராயங்களைத் தெரிவித்துவிடுவார். கேட்பவர்கள் மலர்ந்த முகத்துடன் கேட்கிற வகையில், அவ்ரது சொற்பொழிவு முழுவதும் ஒரு மெல்லிய நகைச்சுவை இழையோடிக் கொண்டிருக்கும். 'இன்னும் கொஞ்சம் பேசமாட்டாரா!' என்று பார்வையாளர்கள் தவித்து ஏங்கும் தருணத்தில், சடக்கென்று தம் பேச்சை முடித்துக்கொண்டு அமர்ந்துவிடுவார். தம் மறைவின் மூலம் நிரந்தரமாக அவர் தம் பேச்சை முடித்துக் கொண்டது, தமிழ்ச் சொற்பொழிவுத் துறைக்கு ஈடுசெய்ய இயலாத ஒரு மாபெரும் இழப்பாகும்.

# சிந்திக்கச்சில வரிகள்..
## (நா. பார்த்தசாரதியின் படைப்புகளிலிருந்து)

1. அரவிந்தனைப் போல் எளிமை விரும்பும் பண்பும் தூய தொண்டுள்ளமும் ஒவ்வொரு தமிழ் இளைஞனுக்கும் இருக்க வேண்டு மென்பது மணிவண்ணனின் அவா. அரவிந்தன் சாகவில்லை. இந்தத் தலைமுறையிலோ, நாளைக்கு வரப்போகும் தலை முறையிலோ இந்தத் தமிழ் மண்ணில் அன்பும் அருளும் பண்பும் அழகும் நிறைந்து தோன்றும் இளைஞர்களை எங்கே கண்டாலும் அங்கே அரவிந்தன் பிறந்திருப்பதாக நினைத்து வணங்குங்கள், வாழ்த்துங்கள்.

*குறிஞ்சி மலர்,* பக்.488

2. வாக்குரிமை, ஜனநாயகம், இவையெல்லாம் மனவலிமையும் சகிப்புத் தன்மையும் நிதானமும் உள்ளவர்களின் உயரிய சாதனங்கள். அவை இங்கே வெறும் உடல் வலிமையும் முரட்டுத் தனமும் உடையவர்களிடம் சிக்கிக் கொண்டிருக்கின்றன.

*சத்திய வெள்ளம்,* பக்.88

3. உண்மை கசப்பானது. ஆனால் சிலவற்றைக் கசப்பானது என்று முன்னதாக உணரும் ஞானம் எதுவோ அது இனிப்பானதே.

*மூலக்கனல்,* பக்.4

4. எந்த வாழ்க்கையை வாழ வேண்டுமென்று தவிக்கிறோமோ அந்த வாழ்க்கையைப் பற்றிய எண்ணங்கள் மனத்தில் எற்படும் போதே ஒருமுறை வாழ்ந்துவிடலாம். எண்ணங்களில் வாழும் வாழ்வு உயர்ந்தது. அதற்கு அழிவில்லை. மிக உயர்ந்த வாழ்க்கையை மண்ணில் வாழ முடியாதோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. மண், குறைபாடுகளும் அழுக்குகளும் நிறைந்ததாய் இருக்கிறது.

*குறிஞ்சிமலர்,* பக்.368

5. நன்றாகவும் ஆழமாகவும் கற்ற கல்வியினால் பயங்கள் விலகி நியாய உணர்வும் தார்மீகக் கோபமும் பெருகவேண்டும். ஆனால்

இன்று பல கல்விமான்கள் தான் அளவுக்கு மீறி அஞ்சுசிறவர்களாகவும் நியாய உணர்வு அற்றவர்களாகவும் தார்மீகக் கோபம் சிறிது கூட இல்லாதவர்களாகவும் போய்விட்டார்கள்.

*சத்திய வெள்ளம்*, பக்.41

6. இன்னும் பத்து வருஷத்துக்குப் பள்ளிக் கூடங்களையும் கல்லூரி களையும் இழுத்து மூடிவிட்டு, உடலுழைப்பைக் கட்டாய மாக்கவேண்டும். மனிதத் தன்மையையும், யோக்கியதையையும், நாணயத்தையும், ஒழுக்கத்தையும், சுயகௌரவத்தையும், உழைப்பை மையமாக வைத்துக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

*பொய்ம் முகங்கள்*, பக்.181

7. ஏழைக்கு முன் கண்ணீர்விட ஒருமுகம், வசதி உள்ளவனுக்கு முன் சிரித்து மலர ஒரு முகம், மேடைகளிலே மட்டும் சீர்திருத்தம் பேச ஒருமுகம் என்று பொய்யான பல முகங்களை வைத்திருக்கும் சமூக விரோதக் கூட்டம் ஒன்று அரசியலின் பெயராலும் பொது வாழ்வின் பெயராலும் பெருகி வருவதை அவன் கூர்ந்து கவனித்து மனம் கசந்து கொண்டிருக்கிறான்.

*பொய் முகங்கள்*, பக்.147

8. ஒரு நாட்டில் அறிவாளிகள் துதிபாடிகளாகவும், தொழுது நிற்பவர்களாகவும், அடிவருடிகளாகவும் ஆகிவிட்டால் அன்றுதான் அந்த தேசத்தில் உண்மையான வறட்சியும், பஞ்சமும் ஏற்படுகின்றன.

*சிந்தனை வளம்*, பக்.36

9. சுயக் கட்டுப்பாடு இல்லாத நாட்டில் சுதந்திரத்தின் நற்பயன்கள் எல்லா மக்களுக்கும் சமமாகக் கிடைக்காது என்பதற்கு நம்நாடு சரியான உதாரணம். அரசியல் லாபம், பதவிகள், பாராளுமன்றம் எல்லாம் சில நபர்கள், சில குடும்பங்களிலேயே தங்கிவிடுகின்றன. சுயக்கட்டுப்பாடு வளராத வரை சுதந்திரத்தின் உரிமைகளும் பயன்களும் எப்படிப் பிறருக்குக் கிடைக்க முடியும்? இவற்றை யெல்லாம் பற்றிப் பேசவே பயப்படும் நாட்டில் வளர்ச்சியும் சமத்துவமும் எப்படித்தான் ஏற்பட முடியும் என்பது தான் புரியவில்லை.

*எனது குறிப்பேடு, தீபம்*, மார்ச்.78

10. முக்கால்வாசித் தீமைகளை எழுத்திலிருந்தும் திரைப்படங் களிலிருந்தும் கற்கிற நிலைமை வேகமாக இன்று வளர்கிறது. அபாயகரமான வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. கவலைப் பட வேண்டிய விதத்தில் வளர்கிறது.

*தீபம் தலையங்கம்*, செப்.1978

11. கலையுலகம் என்ற வீதி இரவும் பகலும் பிரகாசமாக மின்னுகிறது. ஆனால் இதயங்களால் மின்னவில்லை. எண்ணங்களின் பரிசுத்தத்தால் மின்னவில்லை. அந்த வீதியின் பிரகாசத்தால் மிக வனப்புடைய பலருடைய சரீர அழகும் மனஅழகும் மௌனமாகவும் இரகசிய மாகவும் பலியாகிக் கொண்டே இருக்கின்றன.

*சமுதாய வீதி*, பக்.252

12. பிரம்ம நாயகத்திற்குக் கிடைக்கும் மரியாதை கூடப் பணம் என்ற மூன்றெழுத்துப் பொருளுக்கு உலகம் செய்கிற மரியாதை தான். கைதட்டல், வாய் பொத்துதல், கும்பிடு, பயபக்தி எல்லாம் அந்த மூன்றெழுத்துப் பொருள் குட்டிச் சுவருக்குப் பக்கத்தில் நிற்கும் வெட்டிக் கழுதையிடம் இருந்தால் கூட உலகம் இதையெல்லாம் செய்யும்.

*பிறந்த மண்*, பக்.59

13. புகழ், பணம், மரியாதை மதிப்பு எல்லாத்தையும் தகுதிக்காகக் குடுக்காம, காரியம் ஆகிறதுக்காகக் குடுக்கப் பழகிவிட்ட காலத்துலே இதுதாண்டி நடக்கும். ஒழுக்கமா இருக்கணும்னு எவன் நினைப்பான்?

*மூலக்கனல்*, பக்.64

14. நாடகம் எழுதுபவர்களும், நடிப்பவர்களும், நாடகக்குழு நடத்துபவர்களும், 'ஐயோ! பொருட்காட்சிகளும், கோயில் திருவிழாக்களும் அழைக்காவிட்டால் பிழைக்க முடியாதே' என்று அஞ்சாமல் தினசரி மேடைகளில் நடித்து வளம் பெற்று வாழ்வதற்கு ஏற்ற தனி நாடகத் தியேட்டர்கள் தமிழ்நாட்டின் பெரிய நகரங்களி லெல்லாம் வந்துவிட்டால் இக்கலை வளரத் தடையே இல்லை. நாடகம் உயிரோட்டமுள்ள கலை. பல்லாயிரங்காலத்துப் பயிர். அது நலிந்தால் தமிழே நலிந்தது மாதிரி. நாடகம் நலியக்கூடாது. நலிய விடக்கூடாது.

*புத்த ஞாயிறு நூல் முன்னுரையில்*

15. மனத்தின் சந்தோஷமே மங்கல வாத்தியங்களாகவும் பரஸ்பர நம்பிக்கையே அங்கீகாரமாகவும் நடைபெறும் கந்தர்வ விவாகங்களைப் பற்றி இதிகாசங்களிலும், காவியங்களிலும்தான் இதுவரை படித்திருக்கிறோம். மோகினி! கொட்டும் அடைமழையில் காரிருளில் வசந்த சேனையையும், சாருதத்தனையும் போல் மணந்து கொண்டவர்களும் இந்த நாட்டுக் காவியங்களில் தெய்விகக் காதலர்களாகத் தானே வாழ்கிறார்கள்.

*பொன் விலங்கு*, பக்.405

16. எழுத்திலும் பேச்சிலும் மட்டுமல்ல, வேங்கடம் முதல் குமரி வரை தமிழ் வாழும் நிலமெல்லாம் வாழ்க்கையிலேயே பிழையில்லாத ஒழுங்கும் அறமும் அமைய முடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

*குறிஞ்சி மலர்*, பக்.18

17. எலும்புத் துண்டுக்கு அடித்துக் கொள்கிற நாய்கள் மாதிரி... திருமணம், வளைகாப்பு, குழந்தை, குடும்பம் என ஓட ஓட விரட்டு வதுதான் வாழ்க்கையா? இந்த விதமான வாழ்க்கைக்குத் தான் நானும் பிறந்திருக்கிறேனா?

*குறிஞ்சி மலர்*, பக்.122

18. இலாபம் கருதாமல் பிறரை நேசிக்கவும், பிறரால் நேசிக்கப்படவும் முடிந்தவர்கள் யாரோ அவர்கள் உலகத்தை மிகவும் அர்த்தமுள்ளதாகச் செய்துவிடுகிறார்கள். ஆனால் அதைச் செய்யத் தம்மால் முடியவில்லையே என்று ஏங்கிப் பெருமூச்சு விட்டார் தாயுமானவர்.

*சத்திய வெள்ளம்*, பக்.133

19. இடது கை நிறையப் புத்தம் புதிய ரோஜாப் புஷ்பங்களை வைத்துக் கொண்டு வலது கையால் மெதுவாகத் தடவிப் பார்க்கும்போது ஏற்படுமே ஓர் இனிமையான உணர்வு. அது போன்றதொரு இனிமைக் கிளர்ச்சி.

*கோபுர தீபம்*, பக்.79

20. எந்த ஒரு பெண்ணின் முகத்தைப் பார்த்தால் எனக்கே என் தாயின் முன் நிற்பது போன்ற உணர்வு வருகிறதோ அப்படி ஒரு முகம் உனக்கு

இருக்கிறது. உன் முகத்தில் ஓர் ஆஸ்ரமத்தின் அன்னையைப் பார்க்கிறேன். இந்த ஆஸ்ரமத்தின் அன்னையாக அழைத்தால் நீ வருவாயா பெண்ணே!

*சுலபா*, பக்.123

21. பன்னிரண்டிலிருந்து பதினெட்டு வரையுள்ள வயது ஆண் பிள்ளையின் வாழ்க்கையில் மிக முக்கியமானது. எண்ணெய் வழுக்குகிற கையில், கண்ணாடித் தம்ளரை எடுத்துக் கொண்டு கல்தரையில் நடந்து போகிற மாதிரிப் பருவம் இது. இந்த வயதில் நல்ல பழக்கங்கள் கீழே விழுந்து சிதறிவிட்டால் ஒன்று திரட்டி உருவாக்குவது கடினம்.

*குறிஞ்சிமலர்*, முன்னுரை

22. இயல்பான ஞான வளர்ச்சிக்கும் விவேகத்துக்கும் நமது கல்விக் கூடங்களுக்கும் சம்பந்தமில்லை. கல்விக் கூடங்களும் பல்கலைக் கழகங்களும் நாடு முழுவதும் தவறாமல் டைம்டேபிள் போட்டுக் கொண்டு திட்டமிட்டுத் துவேஷத்தையும், ஜாதி வெறியையும், போட்டி பொறாமைகளையும் முடிவாக இணையற்ற விதத்தில் அஞ்ஞானத்தையும் மந்த புத்தியையும் வளர்த்து வருகின்றன.

*பொய்ம் முகங்கள்*, பக்.200

23. கல்விக் கூடங்களில் ஒழுக்கமும் பண்பும் கட்டுப்பாடும் கற்பித்து மாணவர்களை உருவாக்குவதில் கவனமின்றி, வெறும் பரீட்சைக்கு உருவாக்குவதில் மட்டும் கவனம் பெருசியுள்ள காலமிது. ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் கோட்டை விட்டுவிட்டு, கணக்கையும் விஞ்ஞானத்தையும் வளைத்து வளைத்துக் கற்பித்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்? விதை நெல்லை அவித்துச் சோறாக்கினால் எதிர்கால விளைவுகளைப் பற்றி என்ன சொல்வது?

*சிந்தனை மேடை*, பக்.40

24. பணமும் படிப்பும் வசீகரமும் உள்ள ஒரு பயந்தாங் கொள்ளியை விட வறுமையும் அழகின்மையும் உள்ள ஒரு தைரியசாலியைத் தன் பிரியத்துக்கு உரியவனாகத் தேர்ந்தெடுக்கும் புதுமைப் பெண்ணாகிய சுலட்சணாவின் கதை இது.

*சுலட்சணா காதலிக்கிறாள்*, முன்னுரை

25. நமது கல்வி பிஞ்சு மனங்களிலேயே லாபமா நட்டமா என்று கணக்குப் பார்க்கக் கற்றுக் கொடுக்க முயலுகிறதே தவிர நியாயமா, நேர்மையா என்று ஆலோசிக்கக் கூடக் கற்றுத் தருவதில்லை.

*சுந்தரக் கனவுகள்,* பக்.43

26. உண்மையையே ஒரு சமயமாக வழிபடுவதற்குக் கற்றுக் கொடுக்காத படிப்பினால் நாட்டுக்குப் பயனில்லை.

*பொன்விலங்கு,* பக்.241

27. எழுத்தாளர்கள் உரிமைக்காகவும், நியாயங்களுக்காகவும் நடைபெறும் இடையறாத போராட்டம்தான் தீபம் என்ற இலக்கிய யுத்தம்.

*தீபம்,* ஜூன் 1983

# வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பெயர் | - | நா. பார்த்தசாரதி |
| தோற்றம் | - | 18-12-1932 |
| பிறந்த இடம் | - | நதிக்குடி, இராமநாதபுர மாவட்டம் |

**கல்வி**

1. மதுரைத் தமிழ்ச் சங்கப் 'பண்டிதர்' பட்டம் (பாண்டித்துரைத் தேவர் பரிசுடன்)

2. சென்னைப் பல்கலைக்கழக 'வித்வான்' பட்டம்

3. சென்னைப் பல்கலைக்கழக முதுகலைப் பட்டம்

4. 30-07-1987 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு, பிஎச்.டி. பட்டத்திற்குரிய ஆய்வேடு அளித்தார். டாக்டர் பட்டம் கிட்டுவதற்குள் காலமானார்.

**அறிந்த மற்ற மொழிகள்**

ஆங்கிலம், சம்ஸ்க்ருதம், ஹிந்தி

**புனைபெயர்கள்**

மணிவண்ணன், பொன்முடி, வளவன், கூடலழகன், இளம் பூரணன், செங்குளம் வீரசிங்கக் கவிராயர், தீரன், அரவிந்தன் மற்றும் பல.

**பொறுப்புகள்**

1. 1959 முதல் மதுரை, சேதுபதி மேநிலைப் பள்ளியில் ஆசிரியப் பணி. மகாகவி பாரதியார் பணியாற்றிய பள்ளி அது.

2. அடுத்து, நான்கு ஆண்டுகள் கல்கி வார இதழின் துணை ஆசிரியர்.

3. 1965, தமிழ்ப் புத்தாண்டு அன்று, தீபம் இலக்கிய மாத இதழ் தொடக்கம். அதன் ஆசிரியராகவும், நிர்வாகியாகவும் இருபத்து மூன்று ஆண்டுகள் நடத்தினார்.

4. 04-10-1979, விஜயதசமி முதல் தினமணி கதிரின் ஆசிரியர் பொறுப்பு - சில ஆண்டுகள்

## சிறப்புப் பொறுப்புகள்

1. அகில இந்திய சாகித்ய அகாதெமி கமிட்டி உறுப்பினர்.
2. நேஷனல் பிலிம் ஃபெஸ்டிவல் ஜூரி
3. ஃபிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் உறுப்பினர்
4. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பொறுப்பான பதவி.
5. பற்பல இலக்கிய அமைப்புகளில் உறுப்பினர்

## வெளிநாட்டுப் பயணம்

1. சோவியத் யூனியன், போலந்து, இங்கிலாந்து, எகிப்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ரோம், குவைத் நாடுகளுக்கு 1976ம் ஆண்டு பாரத அரசாங்கத்தின் கல்வி மற்றும் கலாசார அமைச்சக அழைப்பை ஒட்டி விசேஷ கலாசாரத் தூதராகப் பயணம் செய்தவர்.

2. சிங்கப்பூர், இலங்கைக்குப் பலமுறை பயணம்

3. இறுதியாக ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள மலேயாவின் தலைநகரான கோலாலம்பூருக்குச் சென்றார்.

## பரிசுகள்

1. அகில இந்திய அளவில் நடந்த பாரதியார் பற்றிய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு.

2. சாகித்ய அகாதமிப் பரிசு (சமுதாய வீதி நாவலுக்கு)

3. ராஜா சர் அண்ணாமலை இலக்கியப் பரிசு (துளசி மாடம் நாவலுக்கு)

4. தமிழ்நாடு அரசின் பரிசு (சாயங்கால மேகங்கள் நாவலுக்கு)

5. தவிர இன்னும் பலப்பல பரிசுகள், விருதுகள்

## பிற சிறப்புகள்

1. ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது, ஆகிய மொழிகளில் இவரது படைப்புகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

2. சென்னை, திருச்சி, தில்லி, லண்டன், பி.பி.சி. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை வானொலி நிலையங்களில் 200 முறைக்கும் மேல் பேசியவர்.

## அரசியல் ஈடுபாடு

1. காங்கிரஸ், சுதந்திரா, ஆர்.எஸ்.எஸ்., ஜனதா, இ. காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் உறவு கொண்டிருந்தவர். காமராஜருக்கு நெருக்கமாக இருந்தவர்.

2. காமராஜரின் மறைவுக்குப் பின் கட்சி சார்பற்றவராகப் பொது நாட்டு நடப்பில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

## மறைவு

13-12-1987. சுயசரிதையின் இரண்டாம் அத்தியாயத்தை அமுதசுரபி மாத இதழுக்காக எழுதிக் கொண்டிருக்கும்போது மாரடைப்பால் காலமானார்.

# படைப்புகள்

## (அ) சமூக நாவல்கள்

1. பிறந்த மண்
2. நெற்றிக் கண்
3. நெஞ்சக் கனல்
4. பொய்ம் முகங்கள்
5. ஆத்மாவின் ராகங்கள்
6. குறிஞ்சி மலர்
7. பட்டுப் பூச்சி
8. சத்திய வெள்ளம்
9. கோபுர தீபம்
10. அனிச்சமலர்
11. கற்சுவர்கள்
12. நீல நயனங்கள்
13. துளசி மாடம்
14. பொன்விலங்கு
15. நிசப்த சங்கீதம்
16. சமுதாய வீதி
17. சாயங்கால மேகங்கள்
18. சுந்தரக் கனவுகள்
19. மூலக்கனல்

## (ஆ) குறுநாவல்கள்

1. மலைச்சிகரம்
2. என்றோ ஒருநாள்
3. மனக்கண்
4. வரவேற்பு
5. இன்று புதிதாய்ப் பிறந்தோம்
6. நினைவின் நிழல்கள்
7. செய்திகள்
8. ஒரு வழிகாட்டிக்குத் தன்வழி தெரியவில்லை
9. மகாத்மாவைத் தேடி
10. நாற்பது கோடி ஏழைகள்
11. டிப்ளமேட்
12. மேகம் மூடிய மலைகளுக்கு அப்பால்
13. பூக்களை யாரும் மிதிக்கக் கூடாது
14. இலையுதிர் காலத்து இரவுகள்
15. சில நியாயங்களைப் பற்றிய கதை
16. தூங்கும் நினைவுகள்
17. பிராயணம்
18. கால சமுத்திரம்
19. பூப்போல ஒரு பெண்
20. நீர்க்கோலம்

**(இ) சிறு நாவல்கள்**

1. புதுமுகம்
2. முள்வேலிகள்
3. சுலட்சணா காதலிக்கிறாள்
4. சுலபா
5 பார்கவி லாபம் தருகிறாள்
6 அநுக்கிரகா
7. உணர்ச்சிகளின் ஊர்வலம்
8. பூப்போல மனசு
9. வெள்ளம் வடிந்தபின்

**(ஈ) சரித்திர நாவல்கள்**

1. பாண்டிமாதேவி
2. மணிபல்லவம்
3. கபாடபுரம்
4. வஞ்சிமாநகரம்
5. நித்திலவல்லி
6. ராணி மங்கம்மாள்

**(உ) சரித்திரச் சிறுகதைகள்**

1. ராஜ கோபுரம்
2. தகடூர் யாத்திரை

**(ஊ) இலக்கியச் சிறுகதைகள்**

1. புறநானூற்றுச் சிறுகதைகள்
2. தமிழ் இலக்கியக் கதைகள்

**(எ) காவிய இலக்கியப் படைப்புகள்**

1. அறத்தின் குரல் (மகாபாரத இதிகாசத்தின் உரைநடை வடிவம்)
2. வெற்றி முழக்கம் (பெருங்கதை என்ற தமிழ்க் காப்பியத்தின் உரை நடை வடிவம்)
3. கண்ணன் கதைகள்

**(ஏ) சிறுகதைத் தொகுதிகள்**

1. நெருப்புக் கனிகள்
2. கொத்தடிமைகள்
3. மங்கியதோர் நிலவினிலே
4. வேனில் மலர்கள்
5. ஒரு கவியின் உள் உலகங்கள்
6. பிரதிபிம்பம்
7. தலைமுறை இடைவெளி
8. காலத்துக்கு வணக்கம்
9. மூவரை வென்றான்
10. புதிய பாலம்
11. கங்கை இன்னும் வற்றி விடவில்லை
12. வலம்புரிச் சங்கு
13. இது பொதுவழி அல்ல
14. தேவதைகளும் சொற்களும்
15. ஒப்புரவு

### (ஐ) கவிதை

1. மணிவண்ணன் கவிதைகள்
2. பூமியின் புன்னகை

### (ஒ) நாடகம்

1. புத்த ஞாயிறு
2. கோதையின் காதல்
3. வழித்துணை

### (ஓ) கட்டுரைத் தொகுதிகள்

1. சொல்லின் செல்வம்
2. மொழியின் வழியே
3. கவிதைக் கலை
4. புதிய பார்வை
5. கடற்கரை நினைவுகள்
6. சிந்தனை மேடை
7. சிந்தனை வளம்
8. திறனாய்வுச் செல்வம்
9. கலித்தொகை பரி
   பாடற் காட்சிகள்

### (ஔ) பயணக் கட்டுரைகள்

1. புது உலகம் கண்டேன்
2. ஏழு நாடுகளில் எட்டு
   வாரங்கள்

### (ஃ)ஆய்வுக் கட்டுரை

பழந்தமிழர் கட்டடக்
கலையும் நகரமைப்பும்

117340
13/12/04
SHIMLA

**நா. பார்த்தசாரதி:** சிறுகதை, சமூக நாவல், சரித்திர நாவல், கவிதை, நாடகம், கட்டுரை, கேள்வி-பதில், பயண இலக்கியம் என்று பல்வேறு துறைகளில் 90நூல்களுக்கு மேல் எழுதியவர். ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்தவர். ஓர் இலக்கியவாதியாக மட்டுமல்லாமல், இதழாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து பல்வேறு எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் இலக்கிய சக்தியாகவும் இயங்கியவர். தமது இனிய தமிழ் நடையால் ஏராளமான வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். மரபுத் தமிழ், நவீனத் தமிழ் இரண்டிலும் பயிற்சியும், பாண்டித்தியமும் உடையவர். மிகச்சிறந்த மேடைப் பேச்சாளர். சாகித்திய அக்காதெமியின் தமிழ் ஆலோசனைக் குழுவிற்குத் தலைவராக, அமைப்பாளராகப் பணியாற்றித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்.

**திருப்பூர் கிருஷ்ணன்:** இந்நூலாசிரியர். தீபம், தினமணிகதிர் ஆகிய இதழ்களில் நா. பார்த்தசாரதியின் கீழ் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர். அம்பலம், சென்னை ஆன்லைன் ஆகிய இணைய இதழ்களில் ஆசிரியராகப் பணி புரிந்தவர். இந்திராபார்த்தசாரதியின் நாடகங்களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். பற்பல பரிசுகளும் விருதுகளும் பெற்ற நாடறிந்த சிறுகதை எழுத்தாளர். பழம்பெரும் எழுத்தாளர் கோதைநாயகியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். அகில இந்திய வானொலி நடத்திய தேசிய ஒருமைப்பாட்டுக் கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். இவரது சிறுகதை பாரதீய ஞானபீடத் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளது. சிறந்த மேடைப் பேச்சாளர்.

*Naa Parthasarathi* (Tamil) Rs. 25
ISBN 81-260-1435-0

Library IIAS, Shimla
T 891.481 43 P 257 K
00117340

இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும்
சாகித்திய அக்காதெமி, உலகிலேயே மிகப் பெரியவெளியீட்டகம்.